விடியலுக்கு முன்...!



புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பாணிநாத

விடியலுக்கு முன்...!

புலோலியூர்
ஆ. இரத்தினவேலோன்

மீரா பதிப்பகம்
(41 ஆவது வெளியீடு)
C-3/5 அன்டர்சன் தொடர்மாடி,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Book Title	:	**"Vidiyalukku Mun"**
Subject	:	Short Story
Author	:	**Pulolyoor A. Ratnavelone**
Copyright	:	Author
First Edition	:	25.01.2004
Cover Photograph	:	Dr. Sivathas
Cover Design	:	Mr. Sudath Wijesinghe
Publishers	:	Meera Pathippakam C 3/5, Anderson Flats, Park Rd, Narahenpita, Colombo 05. 2508250/2584317.
Printers	:	E-Kwality Graphics 315, Jampettah Street, Colombo 13 T'Phone : 2389848
Price	:	**Rs.185/-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினவேலோனின்
தேர்ந்தெடுத்த சிறுகதைகள்
விடியலுக்கு முன்....!
25-01-2004
ஆ.இரத்தினவேலோன்
$C^3/_5$, அன்பர்சன் தொடர்மாடி,
நாரஹேன்பிட்டி.
கொழும்பு - 05.
250825O, 2584317.
விலை ரூபா **185/-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்...

	முன்னுரை	–	v
	அணிந்துரை	–	viii
	புகுமுன்...	–	x
1970	நிலாக்காலம்	–	1
1975	திக்கற்றவர்கள்	–	12
1979	தானம்	–	22
1984	புதிய பயணம்	–	30
1986	பாரதி	–	39
1987	தப்புக்கணக்கு	–	53
1988	தேன் சிந்துமோ வானம் ?	–	60
1989	விடியலுக்கு முன்...!	–	70
1995	இருட்டினில் வாழும் உயிர்களுக்கு!	–	79
2002	வடுக்கள்	–	85
2002	வேட்டை	–	97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் - குறிப்பாக தமிழ் நாட்டில் - படைப்பாளி களின் சகல படைப்புக்களையும் கொண்ட பெருந் தொகுதிகளைத் தொகுத்து வெளியிடும் பணி அண்மைக்காலத்தில் அதிகரித்துக் காணப்படுகிறது. அவர்களது படைப்புலக சாதனைகளை வாசகர்களுக்கு முழுமையாக அறியத்தரும் நோக்கில் இப்போக்கு வளர்த்தெடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான முக்கிய காரணிகளாக பின்வருவனவற்றை இனங் காணலாம்.

(அ) வாசகமட்டத்தில் இதற்கான தேவை ஏற்பட்டிருத்தல்.

(ஆ) கணிசமான அளவில் படைப்புக்களை படைத்திருக்கின்ற படைப்பாளிகள் அதிகளவில் காணப்படுதல்.

(இ) இப் படைப்பாளிகளின் படைப்பு வேகம் குறைந்து செல்லுதல் - அதன் காரணமாக அவர்களது பழைய, முழுமையான, முக்கியமான படைப்புக் களை மீள் பிரசுரித்தலின் மூலம் அவர்களது முக்கியத்துவத்தை நிலை நிறுத்தல்.

(ஈ) புத்தக வெளியீட்டுத்துறையில் கணினியின் பயன்பாடும், நவீன அச்சுத் தொழில் நுட்பத்தின் பயன்பாடும், நூல் உருவாக்கத்தை இலகுவாகவும் விரைவாகவும் செய்ய வழி வகுத்தமை.

ஆனால் ஈழத்து தமிழ் இலக்கியத் துறையில் இப்போக்கு முழு வீச்சுடன் செயற்படவில்லை. படைப்புலக, பிரசுரகள செயற்பாடுகளில் எப்பொழுதும் தமிழ் நாட்டை விட நாம் சற்று பின் தங்கியே வந்துகொண்டிருக்கின்றோம். எனினும் டானியல், டொமினிக் ஜீவா, செங்கை ஆழியான், சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், சு.வில்வரத்தினம் போன்றோர்களது படைப்புக்களைக் கொண்ட முழுத்தொகுதிகளை நாம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இங்கும் கூட பெரும்பாலும் தமிழ் நாட்டில் இருந்தே அவை பதிப்பித்து வெளியிடப்பட்டு இருந்தமையை நாம் அவதானிக்கலாம்.

வேலோன் ஏறத்தாழ முப்பது சிறுகதைகளையும், பல கவிதைகளையும், பத்தி எழுத்துக்களையும், (வேறு படைப்பாளிகளுடன் இணைந்து) குறு நாவல்களையும், சிறுகதைகளையும் எழுதியிருக்கின்றார். அவரது சிறுகதைகளில் பெரும்பாலானவை தொகுதிகளாக்கப்பட்டுள்ளன. பத்தி எழுத்துக்களிலும் குறிப்பிடத் தகுந்தவை தெரிந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் நூல் வெளியீட்டுத் துறை தொடர்பாக படைப்பாளிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் மீறி இவை வெளிவந்திருக்கின்றன. இங்கு வேலோனது முயற்சியும், உழைப்பும், திட்டமிடலும் குறிப்பாக மீரா பதிப்பகமும் முக்கிய பங்காற்றியுள்ளன.

ஈழத்தின் நூல் வெளியீட்டுத் துறையில் மீரா பதிப்பகமும், வேலோனும் புறமொதுக்க முடியாத அளவிற்கு பங்களிப்பு செய்துள்ளதை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

விடியலுக்கு முன் என மகுடமிடப்பட்டுள்ள இத் தொகுதியில் வேலோன் தனது சிறுகதைகளுள் சிலாக்கியமானவற்றை தெரிந்தெடுத்து தொகுதி யாக்கிருக்கின்றார். கதைகளின் சம்பவ நிகழ்வுக்காலங்களில் ஏறுவரிசையில் இவை தொகுக்கப்பட்டுள்ளன. 1970ல் இருந்து 2002 வரையிலான காலகட்டங்களில் இக் கதைகள் நிகழ்கின்றன. வேலோனின் படைப்புலகமும் எழுபதுகளின் பிற்கூற்றில் இருந்து இற்றை வரை தொடர்கின்றது.

இத் தொகுதியில் காணப்படும் கதைகளுள் பெரும்பாலானவை ஆசிரியரின் மெய்யனுபவங்களிலிருந்து பிறந்தவை. அதன் காரணமாகவே நம்பகத்தன்மையை அதிகளவில் இக் கதைகள் கொண்டுள்ளன.

வேலோனது சிறுகதைகளில் குறிப்பிடத்தக்க இன்னொரு அம்சம் திருத்த மான ஒரு மொழியை - இலக்கணத் தமிழ் அல்ல - அவர் கையாள்வதாகும். இத்தொகுப்பினூடே ஒரு வாசகன் அதை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

மெய்யனுபவத்தை சித்திரிப்பது என்பது கத்தி முனையில் நடப்பது போன்ற சிரமமான காரியமாகும். சற்றேனும் பிறழ்ந்தால் நடைச் சித்திரமாகி விடும் அபாயத்துக்குள்ளாகும் சாத்தியக் கூறுகள் மெய்யனுபவச் சித்திரிப்புக்கு அடிக்கடி நேரும் விபத்தாகும். இத் தொகுதியில் அப்படியான விபத்துக்கள் அரிதாகவே உள்ளன.

எனினும் தன்னனுபவத்தைச் சித்திரிப்பதுடன், புற அனுபவங்களையும், தன்னனுபவமாக உள்வாங்கி சித்திரிப்பதிலேயே தான் ஒரு படைப்பாளியின் படைப்பு உச்ச பலனைத் தரும். அதற்கான முயற்சியிலும், பயிற்சியிலும், ஆசிரியர் மேலும் ஈடுபடவேண்டிய தேவையையும் இக் கதைகள் உணர்த்தி நிற்கின்றன.

எந்தவொரு எழுத்தாளரிடமும் ஒரு சிறந்த கதையையேனும் நாம் தயக்கமின்றி எதிர்பார்க்கலாம். **இத் தொகுதியில் ஒன்றல்ல மூன்றுக்கு மேற்பட்ட சிறந்த கதைகளை நாம் காண்கின்றோம்.** அவை எவை என கோடிட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவது வாசகனை இடையூறு செய்வதாகும் என்பது எனது கருத்து. அத்தேர்வு வாசகனுக்குரியது. அது வாசகனின் மெய்யனுபவம் சார்ந்தது.

எனினும் நிலாக்காலம் என்னும் கதையை எல்லோரும் விரும்புவர். அது எளிமையானது. ஆனால் இனிமையானது. அதன் நிகழ்வுகள் சிக்கலானவை. ஆனால் அக் கதை மாந்தர்கள் வாசகனுக்கு மிகவும் நெருங்கியவர்கள்.

வேலோனது கதைகளுள்; **தமிழ் சிறுகதையுலகின் பரந்த பரப்பினுள் உள்வாங்கப்படும் தகுதியை இக் கதை கொண்டுள்ளது.**

நிலாக்காலம் எனும் கதையை முதற் கதையாக கொண்டு வெளிவரும் இத் தொகுதி ஒரு வாசகனுக்கு நல்ல வாசிப்பு அனுபவத்தையும், திருப்தியையும் தரும் என்பது எனது நம்பிக்கை.

- எஸ். ரஞ்சகுமார்,
கொழும்பு.
12.01.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

இரு தசாப்தங்களாக எனக்கு நல்வாழ்வு அளித்த அரபு நாட்டிற்குக் கண்ணியமான பிரியாவிடை கொடுத்து விட்டுத் திரும்பிய பின், ஊடக ஆலோசகராகத் தினக்குரலில் இணைந்தபோது, படைப்பாளியான புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் மேசைக்கு அருகிலேயே எனக்கு அமர்விடம் தரப்பட்டது. அன்றுமுதல் இதுநாள் வரை மிகவும் நெருக்கமான முறையில் நாம் பழகுவதுடன் கருத்துப் பரிமாறல்களையும் செய்து வந்துள்ளோம்.

"எனது பிறந்த நாளை உலகெங்கிலும் கொண்டாடுகிறார்கள். ஆம், நான் நத்தார் தினமான டிசம்பர் 25ஆம் திகதியில் பிறந்தவன்" என்று நண்பர் வேலோன் ஒரு சந்தர்ப்பத்தில் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார். அந்தத் தினத்தின் தாக்கமோ என்னவோ, சாந்தம், பொறுமை, சகிப்புத் தன்மை ஆகிய குணங்கள் இவரிடம் குடிகொண்டிருக்கின்றன.

தினக்குரல் விளம்பர பீடத்தின் உதவி முகாமையாளராகப் பணிபுரியும் வேலோன் எப்பொழுது நோக்கினும் தனது பணியிலேயே மூழ்கிக் கிடப்பார். மதிய உணவு அருந்துவதற்கு ஒருமணிநேர இடைவேளை இருப்பினும் இவர் அரைமணி நேரந்தானும் இதற்குச் செலவிடுவதில்லை. வேகமாக வந்து இருக்கையில் அமர்ந்ததும் மறுபடி வேலையில் மூழ்கி விடுவார்.

அநேக நாட்களில் இரவான பின்னரே அலுவலகத்திலிருந்து, தனது கறுப்புப் பையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு பஸ் தரிப்பை நோக்கி விரைவார். இவரின் நாளாந்தச் செயற்பாட்டினை அவதானித்து விட்டு நான் "சிறுகதை இலக்கியம் படைக்க உங்களுக்கு எப்படி நேரம் கிடைக்கிறது?" என்று ஒருநாள் கேட்கிறேன். வேலோன் தனது வழமையான புன்முறுவலுடன் "சிரமம்தான், என்ன செய்வது ஐயா? சில நாட்களில் இரவில் நித்திரையைக் குறைக்க வேண்டியிருக்கிறது" என்கிறார்.

எனது மேசை மீது ஏதாவது இலக்கிய நூல் கிடந்துவிட்டால் அதை எடுத்து மேலோட்டமாக வாசிக்கத் தவறமாட்டார். இலக்கிய ஆர்வலர் எவராவது தினக்குரலிற்கு வந்துவிட்டால் இவரின் முகத்தில் ஒரு தனிப் பிரகாசம் தோன்றிவிடும்.

ஆம் இலக்கியம் என்பது வேலோனின் இரத்தத்துடன் ஊறிவிட்ட கனிப்பொருளாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் வேலோன் தனது முத்தான சிறுகதைகள் அடங்கிய மூன்று தொகுதிகளை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறார். அதில் ஒன்று **வடக்கு கிழக்கு மாகாண சபையின் சாகித்ய விருதும் பெற்றுள்ளது.** தனது தொகுதி களிலிருந்து உன்னதக் கதைகளாகத் தேர்ந்தெடுத்து பதினொரு மணியான சிறுகதைகளை இத்தொகுதியில் எமக்குப் பரிமாறுகிறார்.

1970 முதல் 2002 வரையிலான மூன்று தசாப்த காலப் பகுதியில் வடபுலத்திலும் தேசிய அளவிலும் பாரிய மாற்றங்கள் சமூக, அரசியல் துறைகளில் நிகழ்ந்துள்ளன. இக்காலகட்டத்தில் வேலோன் படைத்துள்ள சிறுகதைகளை வரிசைக் கிரமமாக நுகரும்போது, இவரின் தனிப்பட்ட வாழ்க்கையினூடாகச் சமூகத்தின் வரலாற்றையே புரட்டிப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. இதற்கு ஓர் உதாரணத்தை இங்கு குறிப்பிடலாம். சிறுகதைகளில், 1980களில் தனது குடும்பத்தாரைச் சந்திக்க இவர் யாழ்ப்பாணம் செல்கிறார். ஆனால் 2002 களிலோ இவர் குடும்பத்தாருடன் கொழும்பில் வாழ்கிறார் . உறவினர்கள் சிலரின் நிகழ்வுகளில் பங்குபற்ற மட்டும் யாழ்ப்பாணம் செல்லவேண்டியிருக்கிறது. போர்ச் சூழலின் விளைவாகக் குடும்பங்கள் இடம் பெயர நேரிட்ட வரலாற்றை இந்நிகழ்வு சூசமாகச் சுட்டி நிற்கிறது. இந்த வகையில் இவரின் சிறுகதைகள், சங்கிலிக் கோர்வையாக ஒரு நாவல் போல் அமைந்து மூன்று தசாப்த வரலாற்றினை திரைநீக்கம் செய்கின்றன.

வேலோனின் சிறுகதைவாயிலாக யாழ்ப்பாணக் கிராமத்தில் நாம் நடமாடலாம், கிராம மக்களின் பேச்சுவழக்குக் கலந்த உரையாடல்களில் மூழ்கலாம். அவர்களின் உன்னத வாழ்க்கை முறையின் அருமை பெருமை களைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்த உன்னதக் கதைகளின் தொகுதி மூலம் வேலோனின் இலட்சியப் பணி புதுமெருகு பெறுகின்றது. சமூக உணர்வும் இலக்கியத் தாகமும் கொண்ட அனைவரும் இவ்வுன்னத படைப்பாளியின் மேலான பணிக்கு ஊக்கமும் பேராதரவும் அளிக்க வேண்டுமென்பதே எனது பேரவா.

50, கிறீன் லேன்,
கொழும்பு - 13.

- எ. வி. டேவிட் ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுமுன்...

எனது தேர்ந்தெடுத்த கதைகளின்
தொகுதி இது. ஏலவே வெளியான மூன்று
சிறுகதைத் தொகுதிகளிலிருந்தும்
தெரிவு செய்யப்பட்ட உன்னத பதினொரு
சிறுகதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றிருக்கின்றன.
கனக செந்தி கதா விருது பெற்ற
வேட்டை, வடக்கு கிழக்கு மாகாண
இலக்கிய விருது பெற்ற 'நிலாக்காலம்' நூலின்
மகுடக்கதையான நிலாக்காலம், வடுக்கள்
விடியலுக்கு முன்...!, பாரதி போன்றன இச்சிறுகதைகளுள்
விதந்துரைக்கப்படத்தக்கன.

பத்துப் பதினொரு வயது முதல் (1970கள்)
நாற்பத்து நான்கு வயது வரையிலான மூன்று
தசாப்த கால கட்டத்தில் தனிப்பட்ட எனது
வாழ்க்கைக் கோலத்தினூடே தேசியத்தின் சமூக,
அரசியல் மாறுதல்களை இப்பதினொரு
சிறுகதைகளும் சித்திரிக்க முனைவதே இத்தொகுதியின்
மிகமுக்கியமான அமிசமென நான் கருதுகின்றேன்.
என்னுடன் எனது குடும்ப அங்கத்தவர்களும்
சில நண்பர்களும் இக்கதைகளின்
பாத்திரங்களாக நகர்ந்து என் உணர்திறனைத்
தொற்றவைப்பதில் தோள்கொடுத்துள்ளார்கள்.

வடக்கு கிழக்கு மக்களின் வேதனைகளையும்,
விம்மல்களையும், யுத்தத்தாலான வடுக்களையும்,
வலிகளையும் இயல்பானதாக வெளிக்கொணர
இக்கதைகளிலெல்லாம் நனவோட்ட உத்தியில்
கதையினை நகர்த்தியுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதையினை எடுத்துச் சொல்லும்
முறைமையில் நிகழும் பாரிய மாற்றத்தினையும் வாசகர்கள்
தரிசிக்கத்தக்க வகையிலேயே கதைகள்
ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கின்றன. கதை
நிகழும் ஆண்டுகள் கதைகளின் ஆரம்பத்தில்
அத்தியாயங்கள் போலமைந்து தம்மை
இனங் காட்டுகின்றன.
சிறுகதைத் தொகுப்பொன்றிற்கு இது
ஓர் பரிசோதனை முயற்சி என்பேன்.

பதினொரு கதைகளை இந் நூலிற்காகத்
தெரிவு செய்ததோடு முன்னுரையு மெழுதி நூலினை
அச்சிட்டுமுதவிய இனிய நண்பன் ரஞ்சகுமார், நூலின்
கணினி வடிவமைப்பில் உதவிய செல்வி ஆர்.விநோதினி,
அணிந்துரை நல்கிய மதிப்பிற்குரிய
ஈ.வி. டேவிட்ராஜ் ஆகியோருக்கும் வழமைபோல்
நூலின் ஆக்கத்திற்குதவிய துணைவியார்
சாந்தகுமாரி, மகள் மீரா, மகன் துவாரகன்
ஆகியோருக்கும் (வாசகர்களாகிய) உங்களுக்கும்
எனதன்பு என்றுமுரியது.

மீண்டும் சந்திப்போம்!

– ஆ. இரத்தினவேலோன்

'மீரா அகம்',
புற்றளை, புலோலி.
25.01.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்
எழுதிய நூல்கள்

- **புதிய பயணம்** — 1996
  சிறுகதைகள்

- **விடியட்டும் பார்ப்போம்!** — 1997
  சிறுகதைகள்

- **புதிய சகத்திரப் புலர்வின் முன்**
  ஈழச் சிறுகதைகள் *(பத்தி எழுத்துக்கள்)* *முதற் பதிப்பு* — 1999
  இரண்டாம் பதிப்பு — 2000

- **அண்மைக்கால அறுவடைகள்** — 2001
  (பத்தி எழுத்துக்கள்)

- **நிலாக்காலம்** *(சிறுகதைகள்)* — 2002
  (வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விருது பெற்ற நூல்)

- **விடியலுக்கு முன்....!** — 2004
  (தேர்ந்தெடுத்த சிறுகதைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970

நிலாக்காலம்

எங்களூர் பள்ளிக்கூடத்தில் அப்போ நான் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். மேற் பிரிவு படிப்பிற்கு பிரபல கல்லூரிகளில் இடம் பிடிப்பதற்காக விண்ணப்பிக்கும் வகுப்பு. ஏழாம் வகுப்பு வரையில்தான் அங்கு இரண்டு பிரிவுகள் இருந்தன. எட்டாம், ஒன்பதாம் தரங்களில் ஒரே பிரிவு தான். அதிலும் ஒவ்வொரு வகுப்பிலும் பத்து அல்லது பதினைந்து பேர் வரையில் தான் வந்து சென்றார்கள். ஆனால், பள்ளிக்கூடத்திலிருந்து இரண்டு சோதனைகள் எடுக்கலாம் என்ற சலுகை தீவிரமாக அமுலில் இருந்ததில் பத்தாம் தரத்தில் மட்டும் இரட்டிப்பான எண்ணிக்கையில், முப்பது, முப்பத்தைந்து பேரளவில் இருந்தார்கள்.

பத்தாம் தரத்திற்கு வந்ததன் பின்பு, வகுப்புகளுக்கு வகுப்பு இடாப்பு காவுதல், வாத்திமார் "வெத்திலை வாய்" கொப்பளிக்க தண்ணீர்ச் செம்பு எடுத்துச் செல்லல், அவ்வப்போது அண்டையிலுள்ள சித்தி விநாயகர் ஆலயத்திலோ அல்லது வயலிலோ சிரமதானப் பணிபுரிதல் போன்ற வேலைகளும் செய்யவேண்டும் என ராசேந்தி சொன்னதை பல காலங் களாக 'சீரியசாகவே' நம்பிக் கொண்டிருக்கும் அளவிற்கு நான் அப்போது வலு அப்பாவியாக இருந்தேன்.

ஏழாம் வகுப்பில் நான் 'ஏ' பிரிவில் படித்தேன். எங்கள் வகுப்பிற்கு வகுப்பு ஆசிரியையாகவும் விஞ்ஞான பாட ஆசிரியையாகவும் புதிய 'ரீச்சர்' ஒருவர் அடுத்த கிழமை வர இருப்பதாக முதலாந் தவணை ஆரம்பித்த முதல் நாளன்று கையில் உள்ள பிரம்பால் தனது பாதத்தில் பறையடித்தவாறே தலைமை வாத்தியார் கூறினார். பிரம்படி பட்டுப் பட்டு அவரது வலது பாத நடுப்பகுதி கண்டிப் போய் நாவல் பழ நிறத்தில் இருந்தது. ராமச்சந்திரன் தான் அந்த ரகசியத்தை எனக்குக் கூறி உயிரியல் சித்தாந்தம் ஒன்றைக் கண்டுபிடித்தவனைப் போல பெருமை கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய 'ரீச்சர்' வந்ததன் பின்பு தான் வகுப்பு 'மொனிட்டர்' தெரிவு செய்யப்படுவாராம். அது வரை பத்தாம் வகுப்பில் இரண்டாவது தடவை யாக 'சிரமதானப் பணிகளில்' ஈடுபட்டுவரும் ஆதவன் அண்ணா தான் 'சைலன்ஸ் பிறியேட்டில்' எங்களது வகுப்பறையில் கதைப்பவர்களை வாங்கில் மேல் ஏற வைப்பாராம்.

தலைமை வாத்தியாரின் மகன் ஈசனும் எங்களது வகுப்பாதலால், அவ்வப்போது ஓடைக்கரை தோசை போல சுடச்சுட எங்களுக்கு தகவல்கள் வந்து கொண்டிருந்தன. அதனால், ஈசன் அவன் இல்லாத நேரங்களில் 'றேடியோ சிலோன்' என்றே அழைக்கப்பட்டான்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. 'நமச்சிவாய வாழ்க' என ஆரம்பித்த கூட்டுப் பிரார்த்தனை 'பல்லோரும் ஏற்றப் பணிந்து' என மங்களமாக முடிவடைந்து அமர்ந்த கையோடு மெல்லிய குரலில் ஈசன் சொன்னான். "புது 'ரீச்சர்' வரணியிலை இருந்து வாறா. அவவின்ரை பெயர் நாகபூசணி."

"நாகபூசணி 'ரீச்சர்' எப்படி இருப்பா?" என ராமச்சந்திரன் ஐம்பது சதம் வைத்து கட்டை ரவியுடன் பந்தயம் பிடித்தான்.

"பெயரில் ஒட்டியிருக்கும் பூசணி போலவே 'ரீச்சரும்' பருமனாக இருப்பா" என்பது ராமச்சந்திரனின் வாதம். அவன் பிற்காலங்களில் 'லொஜிக்'கைத் தேர்ந்து படித்தானா என்பது பற்றி எனக்கு இப்போது 'ஐடியா' ஏதுமில்லை.

"ரீச்சர்' ஒல்லியா, மஞ்சள் நிறமாக 'கூப்பன்' கடை 'மனேஜர்' மாதிரி இருப்பா!" என்றான் கட்டை ரவி.

பந்தயத்தை அன்று வெட்டிவிட்டவன் நசுங்கிக் கொண்டு நடுவில் அகப்பட்டிருந்த ராசேந்திரன்.

பாடசாலை தொடங்கி பத்து நாட்கள் ஓடி மறைந்தன. அதற்குள் 'பீ' வகுப்பார் விஞ்ஞான பாடத்தில் மூன்று பாடங்கள் முடித்து விட்டார்களாம். ஒரு நாள் இடைவேளையின் போது பரமேஸ் முன்னாலிருந்த சாவித்திரிக்கு அழாக் குறையாக சொல்லிக் கொண்டிருந்தாள்.

வகுப்பில் எல்லோரது உடுப்புக்களும் சலவை செய்யப்பட்டதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது அன்றைய தினம் ஒரு திங்கட்கிழமை என்பதை நினைவூட்டிக் கொண்டிருந்தது. தேவாரம் முடிந்து நாம் கதிரையில் அமர்ந்த போது ஆதவன் அண்ணா சொன்னார். "இண்டைக்கு உங்கடை 'ரீச்சர்' வந்திட்டா. இனி நான் வரமாட்டன்."

சற்று நேரத்தில் தையல் பெட்டி 'கடகட' ஒலி எழுப்ப, மூச்சு வாங்கியபடியே ஓடிவந்து முன் வரிசைக் கதிரையில் அமர்ந்தாள் சாவித்திரி.

"டியேய் பரமேஸ், புது 'ரீச்சர்' வந்திட்டாடீ! மெல்லிசா, சிகப்பா, நல்ல வடிவா இருக்கிறாடீ!" புத்தகப் பையைத் தனது கதிரையில் கொழுவிவிட்டு, தகரப் பெட்டியை மேசையில் வைத்தவாறே பின் வரிசையில் இருந்த பரமேசுக்கு இளைக்க, இளைக்க சாவித்திரி சொன்னது. அவளுக்கு அடுத்த வரிசையில் ஒரு மேசை இடை வெளியில் இருந்த எனக்கும் தெளிவாகக் கேட்டது.

"உனக்கு எப்பிடிடீ தெரியும்?" இது பரமேஸின் கீச்சுக் குரல்.

"இண்டைக்கு பக்கத்து வீட்டு மூத்ததம்பி வாத்தியார் லீவு எண்டு சொல்லி, லீவுக் கடிதத்தை தலம் வாத்தியாரட்டைக் குடுக்கச் சொல்லி தந்தவர். கடிதம் குடுக்கவெண்டு தலம் வாத்தியாற்றை அறைக்கை போனனான். அப்பதான் புது 'ரீச்சரைக்' கண்டனான்."

சாவித்திரி வாயை மூடும் போது, வகுப்பு வாசலில் கடப்பு போலிருந்த கட்டைக் கதவைக் திறந்தவாறே 'தலம் வாத்தியார்' என்றழைக்கப்படும் தலைமை வாத்தியார் வகுப்பிற்குள் நுழைந்தார். கூப்பன் கடை 'மனேஜ ரையே', 'கிளீன் போல்ட்' ஆக்கிவிட்ட குதூகலத்துடன், தலைமை வாத்தி யாரின் பின்னால் புது 'ரீச்சர்'!

அவர்களைக் கண்டு எழும்பியபடி கட்டை ரவி, ராமச்சந்திரனை திரும்பிப் பார்த்தான். 'எடுத்து வை ஐம்பது சதத்தை. ஆறுமுகப்பாவின் கடையில் பாக்கு முட்டாசு வேண்ட' என்பது போலிருந்தது அவனது பார்வை.

தமிழ் படிப்பிக்கும் போது ஒரு நாள் பெரியதம்பி வாத்தியார் 'தீர்க்கதரிசி' என்ற பதத்தை விளக்கி, அதற்கு ஒருவரை உதாரணம் கூறும்படி கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் வழமைபோலவே ஆளை ஆள் பார்த்து முழுசிக் கொண்டிருக்கும் போது அவரே சொன்னார். 'பாரதியைச் சொல்லலாம்.' இச் சம்பவத்தின் பின்பு எனக்கோ பாரதியை விட கட்டை ரவியே அதற்குப் பொருத்தமானவன் போல் தோன்றியது.

"வணக்கம் தலம் வாத்தியார்." நாற்பது பேரின் குரல்களிலும் கட்டை ரவியின் குரலே பலமாக ஒலித்தது.

"வணக்கம் பிள்ளைகளே! அமருங்கள். இவ தான் இனி உங்களுக்கு வகுப்பு 'ரீச்சர்.' " தலைமை வாத்தியார் சத்தமாகச் சொன்னது பின்னால் இருந்த 'பீ' வகுப்பாருக்கும் கேட்டிருக்கும் என்பதை எங்கள் வகுப்பை எட்டிப்பார்த்த சில தலைகள் உறுதிப்படுத்தின.

பெரியதம்பி வாத்தியார் 'பென்சனில்' போகும் போது நடந்த பிரியாவிடைக் கூட்டத்தின் பின்பு, நாகபூசணி 'ரீச்சரை' எங்கள் வகுப்பிற்கு கூட்டிவந்த அன்றைய தினம் தான் பிரம்பு இல்லாது தலைமை வாத்தியார் நின்றதை நான் கண்டேன். நிராயுதபாணியாக நின்றதாலோ என்னவோ அதிக நேரம் நிற்காது அவர் சென்றுவிட்டார்.

புதிய 'ரீச்சர்' வகுப்பறையை ஓர் தடவை நோட்டம் விட்டா.

எங்கள் வகுப்பை 'பீ' வகுப்பிலிருந்து, காகத்தின் எச்சத்தினால் வெள்ளையடிக்கப்பட்ட 'ஸ்கிறீன்' ஒன்று அரையுங்குறையுமாகப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தது.

இருபத்திரண்டு 'பொடியங்களும்', பதினெட்டுப் 'பெட்டையளும்', ஆக சரியாக நாற்பது பேர் இரு பிரிவுகளாக ஆறு வரிசையில் வகுப்பில் அமர்ந்திருந்தோம். அதிசயமாக அன்று எவருக்குமே தலையிடியோ, காய்ச்சலோ அல்லது வயிற்றோட்டமோ வரவில்லை.

"என்னுடைய பெயர் 'மிஸ்' நாகபூசணி நாகநாதன். சரி இப்ப நீங்கள் ஒவ்வொருத்தரா எழும்பி உங்கடை பெயரைச் சொல்ல வேணும். முதல் வரிசையிலிருந்து சொல்லத் தொடங்குங்கள் பிள்ளையள்."

"ராமச்சந்திரன் 'ரீச்சர்'"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ராசேந்திரன் 'ரீச்சர்'"

"ரவிச்சந்திரன் 'ரீச்சர்'"

"சிவகுமார் 'ரீச்சர்'"

ஆரோகணத்திலிருந்து அவரோகணத்திற்கு குரல்கள் மாறுகின்றன.

"சாவித்திரி 'ரீச்சர்'"

"விஜயகுமாரி 'ரீச்சர்'"

"காஞ்சனா 'ரீச்சர்'"

"பாரதி 'ரீச்சர்'".

அடுத்தது இரண்டாவது வரிசை. குணட்டியின் முறை. எழும்பினான் என்றால் சூரன் மாதிரி நெஞ்சை நிமிர்த்தியவாறு தான் நிற்பான். பவ்வியமாக குணரத்தினம் என்ற தனது பெயரைச் சொன்னான்.

"அப்பாடா..... நல்ல வேளை உமக்கும் சிவாஜி கணேசன் அப்பிடி எண்டு ஒரு பெயரும் இல்லாது போனது" என்றா 'ரீச்சர்', முதல் தடவையாக முகத்தில் செட்டான சிரிப்புடன்.

அதன் பிறகு, நடிப்பு என்றால் அகராதியில் அர்த்தம் தேடும் குணட்டி கூடச் சில காலங்கள் சிவாஜி கணேசன் என்று அழைக்கப்பட்டதாக ஞாபகம்.

பெயர் கேட்டு அறிந்த பிறகு 'மொனிட்டர்' தேர்வு ஆரம்பமானது.

"போன தவணை முதலாம், இரண்டாம் பிள்ளையளாக வந்தாக்கள் கையை உயர்த்துங்கோ பார்ப்பம்", இடக் கையைப் பின்னால் கட்டிக் கொண்டு, வலது கையால் 'டஸ்டரை' எடுத்துக் கரும்பலகையை அழித்த வாறே 'ரீச்சர்' சொன்னா.

பரமேஸ்வரி என்னைப் பார்த்தாள். இருவருமே கைகளை உயர்த்தி னோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி, உங்கள் இரண்டு பேரிலும் ஆர் 'மொனிட்டரா' வாறதை வகுப்புப் பிள்ளையள் விரும்பியினம் எண்டு இப்ப நான் ஒரு தேர்வு வைக்கப்போறன். எல்லாரும் குனிஞ்சு முகத்தை மேசையிலை வைச்சுக் கொள்ளுங்கோ. இப்ப நான் இவையள் இரண்டு பேரின்ரை பெயரையும் சொல்லுவன். உங்களுக்கு விருப்பமானவற்றை பெயரை சொல்லேக்கை, நீங்கள் கையை உயர்த்த வேணும். சரி தானே?"

நாற்பது பேரும் முகத்தினை மேசையில் புதைத்துக் கொண்டோம்.

தேர்வு முடிந்து முடிவினை கரும்பலகையில் எழுதினா 'ரீச்சர்'. எனக்கு இருபத்தியொரு வாக்குகள். பரமேஸ்வரிக்கு பத்தொன்பது வாக்குகள்.

"பொடியங்களிலை இருந்து ஆரோ ஒரு செம்மறி பரமேசுக்கு கை உயர்த்தி இருக்கு. அநேகமாக அது பெட்டை ரவியாகத் தான் இருக்கும்" என்றான் தங்கராசன்.

நல்ல காலம் 'கூஸ் த பிளாக் ஷிப்' என்ற பாடல் அந்த நாட்களில் எழுதப்படவில்லை.

அல்லாவிடின், அப்பாடலை பாடிப் பாடியே தங்கராசன் பெட்டை ரவியைச் சாகடித்திருப்பான்.

நாகபூசணி 'ரீச்சர்' வந்த ஓரிரு மாதங்களிலேயே எங்களூர் பள்ளிக் கூடம் பல மாறுதல்களைக் கண்டது.

எங்கள் வகுப்பறையில் இருந்து பார்த்தால், முன்னால் வாசிக சாலையில் இருந்து சனங்கள் பத்திரிகை பார்ப்பதும், மழைக்காலங்களில் ஊரா வீட்டு ஆடுகளெல்லாம் வாசிகசாலை வாங்கில் ஏறி நின்று பிழுக்கை போடுவதும்.... அருகே அரச மரத்திற்குப் பின்னால் ஆறுமுகப்பாவின் கடை வாசலில் அடிப்பக்கம் அழுகிய வாழைக் குலை சுழன்று கொண்டிருப் பதும் தெரியும். 'ரீச்சரின்' வருகையின் பின்னர் முன்பக்க எல்லையில் இருந்த கம்பி வேலி முழுவதும் ஆளளவு உயரத்திற்கு கிடுகுகள் வரியப்பட்டன.

பள்ளிக்கூடத்தின் பின்புறத்தினை பாவட்டையும், கற்றாளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடவே சிறுநீர் நெடியும் மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்திருந்தன. ஒண்டுக்குப் போறதென்றால் மூக்கைப் பொத்திக் கொண்டு தான் போக வேண்டியிருந்தது. மூத்ததம்பி வாத்தியாரையும், கந்தப்பு வாத்தியாரையும் அடிக்கடி அங்கு நாம் காண்போம். அந்தப் பற்றைகள் அழிக்கப்பட்டு, அங்கு இரண்டு தகர மலசலகூடம் அமைக்கப்பட்டது. மலசலகூடம் அமைக்கப்பட்ட பின்னரும் கூட வேலியோரத்திலேயே கந்தப்பு வாத்தியார் குந்தியிருந்ததாக குகதாசன் கூறியது எனக்கு இப்பொழுதும் ஞாபகத்தில் உள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள் உடுப்பில் கூட மாற்றங்கள் நிகழ்ந்தன. ஒன்பதாம், பத்தாம் வகுப்புக்களில் படித்த சில அக்காமார்கள் உடுத்து வந்த 'ஹாவ் சாறி' மற்றும் 'கலர்' சட்டைகள், 'கலர் ஸ்கேட்'டுக்கள் யாவற்றுக்கும் பிரியாவிடை கொடுக்கப்பட்டு, சீருடை அறிமுகமானது. வேட்டியுடனும், வெறும் மேலுடனும் வந்த மூத்ததம்பி வாத்தியார் உட்பட்ட நாலைந்து வாத்தியார்களும் 'நாசனலுடனேயே' வர ஆரம்பித்தனர். தூய வெள்ளை நிறத்தில் ஒன்று, பளுப்பு நிறத்தில் ஒன்றுமாக இரண்டு 'நாசனலுடனேயே' காலத்தைக் கழித்த மூத்தம்பி வாத்தியார், 'பென்சன் எடுக்கிற காலமாகப் பார்த்து இப்பிடியாய் போச்சு' எனக் குறைப்பட்டவாறே மேலும் இரண்டு 'நாசனல்' தைக்க ஆலடிச் சந்தை குறுப்பனிடம் அளவு கொடுத்ததாக, ஆதவன் அண்ணா ஆக்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

கட்டை ரவி, பெட்டை ரவி, வடலித் திடல் விமலா, ஐயர் வீட்டு விமலா என்று அழைக்கப்படுவது அருகிப் போக ஆர். ரவிச்சந்திரன், கே. ஆர். ரவிச்சந்திரன், கே. விமலா, எஸ். விமலா என அவர்கள் அழைக்கப்படலாயினர்.

வாத்தியார் என்றோ, தலம் வாத்தியார் என்றோ சொல்ல வேண்டாம் என்றும், எல்லா வாத்தியார்களையும் 'சேர்' என்றும், தலம் வாத்தியாரை 'பிறின்சிப்பல்' என்றும் அழைக்கும்படியும் 'ரீச்சர்' கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தா.

"உலகத்தை மாத்த வெளிக்கிட்டுட்டா சிங்காரி. அவ சொன்னதுக் கெல்லாம் ஓணான் மாதிரி இந்தாளும் தலையாட்டுது" என மூத்ததம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சேர்' பங்குனி மாதக் கள்ளைக் குடித்துவிட்டு இரவில் வீட்டில் சத்தம் போட்டதாக 'சைலன்ஸ் பிரீயட்' முடிந்த கையோடு சாவித்திரி ஒரு நாள் பரமேசுக்கு கீச்சுக் குரலில் சொல்லிக் கொண்டிருந்தது ஈசனுக்கும் கேட்டிருக்கும்.

முதலாம் தவணை முடியும் தறுவாயில் நாகபூசணி 'ரீச்சருக்குத்' துணையாக தோற்றத்திலும், நடத்தையிலும் அவவுக்கு எதிர்மாறான அம்சங்களுடன் ஒரு சங்கீத 'ரீச்சரும்' வந்து சேர்ந்தா. பத்துப் பாடங்களுடன் எங்களுக்கு பதினோராவது பாடமாகச் சங்கீதமும் சேர்க்கப்பட்டது.

ஸரிகமபதநிஸ பாடும் போது ஒரு நாள் ராமச்சந்திரன் ஆரோ கணத்தில் 'நீ சா' எனப் பாடிவிட்டான். "ஆரையடா சாகச் சொல்லுறாய் மொக்கு" என்று கேட்ட வாறே அன்று சங்கீத 'ரீச்சரிடம்' அவன் வாங்கின அடி போல வண்டில்கார வடிவேலண்ணனின் நாம்பன் மாடு கூட சீவியத்தில் வாங்கியிருக்காது.

பள்ளிக்கூடத்திற்கு வடக்கே சலவைத் தொழிலாளர்களின் துறை ஒன்று இருந்தது. அதன் எல்லையோடு உடைத்த கரும் பலகைகள், கால்கள் இழந்த கதிரை, மேசைகள் குவிக்கப்பட்டும், சிலந்திகளால் வலை பின்னப்பட்டும் கவனிப்பாரற்று ஒரு அறை கிடந்தது. அதற்குள் ஒரு சாரைப் பாம்பு செல்வதை தான் கண்டதாக கே. விமலா ஒரு நாள் சொன்னதி லிருந்து அதனை 'பாம்பு அறை' என்றே நாம் அழைத்து வந்தோம். பத்தாம் வகுப்பு அண்ணாமாரால் சிரமதானத்திற்கு உட்பட்டதில், பாம்பு அறை ஆசிரியர்களின் ஓய்வு நேர அறையாக உருமாற்றமடைந்தது. சங்கீத 'ரீச்சரை' அநேகமான நேரங்களில் அங்கு காணக்கூடியதாக இருந்தது.

முதலாவது தவணைப் பரீட்சை நடைபெற்றது. பரமேஸ் முதலாம் பிள்ளையாகவும், நான் இரண்டாவதாகவும், மகேஸ்வரன் மூன்றாவதாகவும் வந்திருந்தோம், மூவருக்குமே விஞ்ஞான பாடத்திற்கு நூறு புள்ளிகள் கிடைத்திருந்தன.

இரண்டாவது தவணை ஆரம்பமாகியது.

புலமைப் பரிசில் சோதனைக்காக தயார்படுத்தும் காலம். "போன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருசம் எங்கடை பள்ளிக்கூடத்திலை இருந்து ஒருவர் தன்னும் 'ஸ்கொலசிப் பில' தேர்ச்சியடையவில்லை. இம்முறை எனது வகுப்பிலிருந்தே குறைந் தது நாலு பேரையாவது 'பாஸ்' பண்ண வைப்பன்" என்று நாகபூசணி 'ரீச்சர்' ஒரு செவ்வாய்க்கிழமை 'அசெம்பிளி'யில் சொன்னது 'பீ' வகுப்பு ஆசிரியர் வீரகத்தி 'சேருக்கு' வயிற்றில் புளியைக் கரைத்தது.

மூன்று பேர் சரி, நாலாவதாக 'ரீச்சர்' யாரைச் சொல்லியிருப்பா? என்பதை அறிவதில் சில காலங்கள் ராமச்சந்திரன் மிகவும் ஆர்வமாக இருந்தான்.

"சோதினை மட்டும் சனிக்கிழமைகளிலும் ஒரு இரண்டு மணித்தி யாலம் வகுப்பு வைப்பன். எல்லோரும் வரவேணும்".

'ரீச்சர்' சொன்ன போது முதலில் ராமச்சந்திரன்தான் தலையாட்டினான்.

சனிக்கிழமை வகுப்புகளில் 'பீ' பிரிவையும் சேர்க்க வேணும் எண்டு 'பிறின்சிப்பல்' பிரியப்பட்டதாகவும், அதற்கு 'ரீச்சர்' ஓம்பட்டதாகவும், வீரகத்தி சேர் நெருப்பெடுத்ததாகவும், ஈசன் எவருமில்லாத சமயத்தில் ஒரு நாள் எனக்குச் சொன்னான்.

புலமைப் பரிசில் பரீட்சை முடிவு வெளியானது.

பள்ளிக்கூடத்தில் மூவர் சித்தியடைந்திருந்தோம். மூவரும் எங்கள் வகுப்பைச் சேர்ந்தவர்களே. பரமேசும், நானும், தங்கராசனும், 'பீ' பிரிவில் எவருமே இல்லை.

"சனிக்கிழமைகளிலையும் வகுப்பு வைச்சு பெரிசா அவ என்னத் தைக் கிழிச்சா?" என்று மூத்ததம்பி சேர் வீட்டிற்கு ஒரு நாள் போன இடத்தில், வீரகத்தி 'சேர்' சத்தம் போட்டிருக்கிறார். வழமை போல பரமேசுக்கு சாவித்திரி சொல்லிக் கொண்டிருந்தாள்.

அந்த நாட்களில் தான் கந்தசாமி என்றொரு ஆசிரியர் எங்களூர் பள்ளிக்கு மாற்றலாகி வந்தார். அசப்பில் பார்த்தால் 'எம்.ஜி. ஆர்.'ஐப் போல் இருப்பார். எங்களுக்கு உடற்பயிற்சி என்றொரு பாடத்திற்காக அவரைப் போட்டிருந்தார்கள். முன்னால் சிகப்பு 'பாஸ்கட்' பூட்டிய புத்தம் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'றலி சைக்கிளில்' அயற் கிராமத்திலிருந்து வந்து சென்றார்.

வரணிக்கு தினமும் போய் வருவது கடினம் எனக் கூறி மூன்றாம் தவணை தொடக்கத்தில் நாகபூசணி ரீச்சரும் எங்களூரிலேயே, எங்கள் வீட்டுக்கு மூன்று, நான்கு வீடு தள்ளி வாடகைக்கு ஒரு வீடு எடுத்துத் தங்கியிருந்தா.

பின்னேரங்களில் நான் பிள்ளையார் கோவிலடியில் பொடியளுடன் 'றவுன்ரேஸ்' விளையாடி விட்டுத் திரும்பும் சந்தர்ப்பங்களில் பல தடவைகள் 'ட்ரெசிங் கவுனுடன்' ரீச்சரை வீட்டு வாசலில் கண்டிருக்கிறேன். அப்பொழு தெல்லாம் மிக அழகாக ரீச்சர் இருப்பா. அவவின் மஞ்சள் நிறத்திற்கு 'எடுப்பை' கொடுக்கும் கலரிலேயே 'கவுண்' அணிந்திருப்பா.

அப்படித்தான் ஒரு நாள் மைமல் பொழுதில் விளையாடிவிட்டு நான் வீடு திரும்பும் போது ஆறுமுகப்பாவின் கடையில் தேயிலையும், சீனியும் வாங்கி வரும்படி என்னிடம் காசு கொடுத்துவிட்டு அவசர அவசரமாக ரீச்சர் உள் நுழைந்து விட்டா. எதேச்சையாக எனது பார்வை வீட்டு முற்றத்தில் பதிந்த போது சிகப்பு 'பாஸ்கட்' பூட்டிய அந்தப் புத்தம் புதிய 'றலி சைக்கிள்' என் கண்களில் சிக்கியது.

"அது கந்தசாமி சேரின் சைக்கிள் அல்லோ?"

ஹாட்லி, நெல்லியடி சென்ரல், எம்.எச்.எஸ்., வட இந்து மகளிர் என பிரபல பாடசாலைகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பிவிட்டு எல்லோரும் நுழைவுப் பரீட்சைகளுக்கு எம்மைத் தயார்படுத்திக் கொண்டிருந்தோம்.

ஒரு திங்கட்கிழமை

புத்தகங்களைத் தோளில் சுமந்து கொண்டு பள்ளிக்கூடத்திற்குள் நுழைகின்றேன். தூரத்தே நெசவுசாலைப் பக்கமாக பத்தாம் வகுப்பு அண்ணன்மார்கள் தும்புக் கிட்டையுடனும், வாளியுடனும் கூட்டமாக நிற்பது தெரிந்தது. சிரமதானம் எதற்கோ செல்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன்.

பள்ளிக்கூடத்திற்குள் கூட்டங் கூட்டமாக நின்று பொடியள் ஏதோ குசுகுசுத்துக் கொண்டிருந்தார்கள். பிறின்சிப்பல் பின்னுக்கு கையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியவாறே நிலத்தை அளந்து கொண்டிருந்தார். சங்கீத ரீச்சருக்கு வீரகத்தி சேர் கையை அசைத்து, அசைத்து உற்சாகத்துடன் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். "இவளுக்கேன் இந்தக் குறுக்காலை போன புத்தி? நல்ல குடும்பத்திலை உயர் சாதியிலை பிறந்திட்டு இவனைப் போய்....." அருகால் செல்லும் போது சங்கீத ரீச்சர் உச்ச ஸ்தாயியில் சொன்னது எனது காதுகளில் விழுந்தது.

வகுப்பறைக்குள் நுழைகின்றேன்.

ராசேந்தி என்னை நோக்கி ஓடிவந்தான்.

"டேய் வேலோன், நெசவுசாலை சுவர் முழுக்க எங்கடை ரீச்சரின்ரை பெயரையும், கந்தசாமி சேரின்ரை பெயரையும் சேர்த்து ஆரோ கண்டபடி யெல்லாம் எழுதி இருக்கிறாங்களடா. அது தான் அதை அழிக்கச் சொல்லி பத்தாம் வகுப்பு அண்ணாமாரை பிறின்சிப்பல் அனுப்பியிருக்கிறார்".

"ராசேந்தி, அது புன்னரைக் காயாலை எழுதினதோ அல்லது பூவரசம் இலையாலை எழுதினதோவெண்டு நீ நினைக்கிறாய்?" கேட்டவாறே ராமச்சந்திரன் அருகில் வந்தான். மேலும் அதில் நின்றால் நானே பந்தயத்தை வெட்டி விட வேண்டிவரும் என்ற பயத்தில் அங்கிருந்து விலகிச் செல்கின்றேன்.

அன்று ரீச்சர் பள்ளிக்கூடம் வந்திருந்தும் வகுப்பிற்கு வரவில்லை. நெடுநேரமாக ஸ்ராவ் ரூமிற்குள் இருந்துவிட்டு அரை நேரத்தோடு சென்றுவிட்டா.

இரண்டொரு நாட்களின் பின்னர்....

பின்னேரம் விளையாடிவிட்டு திரும்பிய போது அம்மா சொன்னா, "உங்கடை ரீச்சரை தகப்பன் வந்து அவையின்ரை ஊருக்குக் கூட்டிக் கொண்டு போயிட்டார். வேறு இடத்துக்கு மாற்றம் எடுத்துக் குடுக்கப் போறன். இனி உந்தப் பள்ளிக் கூடத்துக்கு மட்டும் அவளை விட மாட்டன் எண்டு தகப்பன் வீட்டுக்காரருக்குச் சொல்லிப் போட்டு போயிருக்கிறாராம்".

அன்று இரவு சுடலைக் குருவிகள் எழுப்பிய ஓலியும், ஆந்தைகளின் அலறல்களும் இரவு வெகு நேரமாக எனக்குக் கேட்டுக் கொண்டே இருந்தது.

- "தினகரன் வாரமஞ்சரி" - 27.01.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975

திக்கற்றவர்கள்

ழுவரும் இப்போது சந்திக்கு வந்துவிட்டனர்.

"மச்சான்! 'ஹோல் டவுண்'..... !"

பல நெளிவு சுழிவுகளின் பின் பீடாக் கடை வாசலில் சைக்கிள் வந்து நின்றது. சைக்கிளை ஓட்டி வந்த குமரன், முன்னாலிருந்த அன்ரனிடம் சைக்கிளைக் கொடுத்துவிட்டு, வீதிக்கு இறங்கி வந்தான். சைக்கிளை அருகே நிற்பாட்டி விட்டு கடை வாசலிற்கு வந்த அன்ரன், தன் அருகே நின்ற கோபிக்குக் கூறுகிறான்.

"மச்சான் இண்டைக்கும் 'தியேட்டரிலை' சனம் பரவாயில்லை!"

பீடாக் கடைக்கு எதிராக உள்ள அந்தத் 'தியேட்டர்' வாசலில் மின் விளக்குகள் அழுது வடிந்து கொண்டிருந்தன. மேல் மாடி ஜன்னலில் பூட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கி தற்காலத்தில் மிகவும் பிரபலமான பாடல் ஒன்றினை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

'கலரி'க் கூண்டின் முன் சனம் நிரம்பி வழிவது தேமா மரங்களினூடும் தெளிவாகவே தெரிகிறது. 'செக்கண்ட் கிளாஸ் கியூ'வும் ஓரளவிற்கு வளர்ந்திருந்தது. 'போட்டோக் காட்'சினை கைகளால் அளைந்து கொண்டு சிறார்கள் கூட்டம் ஒன்று 'தியேட்டர்' வாசலில் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நின்றது. யாவற்றையும் மேற்பார்வை செய்து கொண்டு வாசலில் தியாகராஜபாகவதர் காலத்துக் கதிரை ஒன்றில் அமர்ந்திருந்தார் 'தியேட்டரின்' முதுபெரும் உரிமையாளர்.

ஓர் கணம் 'தியேட்டரை' கண்ணோட்டம் விட்ட கோபி, தேமா மர மறைவிற்குள் ஒளிந்து கொண்டான். "மச்சான், மாமா நிக்கிறார்". கதிரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவரைப் பார்த்துவிட்டு அதை ஆமோதிப்பவனைப் போல அன்ரனும் மறைவிற்குள் வருகின்றான்.

"மச்சான், இண்டைக்கு 'ரீயூசனிலை' என்னென்ன பாடம்?"

காற்சட்டைக்குள் வைத்திருந்த கறுவாப்பட்டையில் ஓர் பட்டையைச் சுவைத்தவாறே எட்ட நின்ற குமரனும் கிட்ட வந்து சேருகிறான்.

"பொட்னியும், சோலஜியும்".

'பொக்கற்'றுக்குள் இருந்த சீப்பை எடுத்து, கொப்பிக்குள் வைத்திருந்த சிறிய கண்ணாடியைப் பார்த்து சிகையைச் சரி செய்தவாறே கோபி கூறுகிறான்.

"பொட்னியிலை என்ன 'செக்ஷன்' மச்சான்.....?"

"தாவரக் குடும்பங்கள் செய்யிறார்....."

"ஓ! அதுக்கு நீ போனாலும் ஒண்டுதான், போகாவிட்டாலும் ஒண்டுதான்".

வெண்கலக் குரலில் அன்ரன் கூறுகிறான்.

"என்ன இழவெண்டு உந்த அலுப்புகளைச் சப்பித்தள்ளுறது.....?"

கை விரல்களால் தன் தலைமயிரைச் சரி செய்த குமரன் உசாவினான்.

"ஏன் வேலோன் சப்பித்தள்ளுகிறான் தானே?"

இப்போ 'தியேட்டரில்' பாடல் 'றெக்கோட்' மாறுகிறது!

"இண்டைக்கு இதாலை வேலோன் வரட்டும். ஆளை நல்லா நக்கலடிச்சு அனுப்புவம்". கோபி அங்கலாய்த்தான்.

"அடிக்கிற நக்கலிலை ஆள் 'கிளாஸுக்கு' போகாமல் விட்டுட்டு வீட்டுக்குப் போகவேணும்". வெண்கலக் குரல் ஒலித்து ஓய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொஞ்சமெண்ட முன்னம் ஆளுக்கு முகம் கறுத்துப் போகும். அடிக்கிற நக்கலிலை ஆள் இண்டைக்கு வீட்டிலை போய் முகக் கிடை கிடக்க வேணும்". வெடிச் சிரிப்பு உதிர குமரன் கூறுகிறான்.

"வேலோன் வரட்டும் இண்டைக்கு". கோபி கறுவிக் கொள்கிறான்.

குமரனின் மனம் எதையோ அசை போடுகிறது. அவர்களது வகுப்பில் பயிலும் இருபது மாணவர்களுள் படிப்பில் முன்நிற்பவனே அந்த வேலோன். சாந்தன், அழகன் ஆகியோருடன் ஏட்டிக்குப் போட்டியாக நிற்கும் வேலோனை விழுத்த, குமரன் மூன்று தவணைகள் முயன்றும் முடியாது போகவே இந்த குறுக்கு வழியில் இறங்கினான்.

குமரன் எப்போதும் வகுப்பில் நான்காவதாக வருவதே வழமை. 'ஓ லெவலில்' சாந்தன், அழகன் ஆகியோரைப் போல் 'ஃபோ டீ, ஃபோ சீ' என்றெடாது, தன்னைப் போல் ஒரு 'டீ'யும் ஏழு 'சீ'யும் எடுத்த வேலோன் எப்படி அவர்களுடன் போட்டியிடுகிறான் என்பது குமரனிற்குப் புதிராகவே இருந்தது! அவனது சகாக்களான கோபியும், அன்ரனும் சதா இதையே பேச்செடுத்து, "எப்படியும் அவனை நீ விழுத்த வேணும்" எனப் புத்தி கூறி, அதற்கு வழிகோலாக வேலோனின் 'வீக்னஸ்' ஒன்றையும் கூறிவிட்டார்கள்.

பிறரது நக்கலிற்கு தாக்குப் பிடிக்கும் சக்தி அவனுக்கு இல்லாததும்..... தன்னைப் பிறர் பழித்து விட்டால் அதைப் பற்றியே அன்று முழுவதும் சிந்திக்கும் அவனது மனப்பான்மையையும் கோபியும், அன்ரனும் இணங்கண்டே குமரனிற்கு இதை ஓதி விட்டனர். அன்று முதல் அதையே ஆயுதமாக குமரனும் பாவிக்க ஆரம்பித்து விட்டான். வேலோனது படிப்பு பற்றி.....அவனது 'பேசனாலிற்றி' பற்றி..... விளையாட்டுத் துறையில் மற்றும் இலக்கியத் துறையில் அவனது ஈடுபாடு பற்றியே அவர்களது பேச்சு அமையும்!

'தியேட்டரில்' ஒலிபரப்பாகும் புதிய பாடல் ஒன்று கேட்டு குமரன் நினைவு திரும்புகிறான்.

"மச்சான் காய் வருகுது". அன்ரன்தான் தூரத்தே வரும் வேலோனை இனங் கண்டு அவசரங் காட்டுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்! கோபி 'ஒண் யுவர் மாக்! செற் ரெடி' !" குமரன் அப்போதே தயாராகி விட்டான்.

ஆறடியை அண்மித்த உயரம். கடைசியாகச் சிரித்து மாதக்கணக்காகி விட்டதைப்போன்ற முகம், வேட்டித் தலைப்பை 'சைக்கிள் சீட்டின்' கீழ் ஒதுக்கி விட்டு, வேர்க்க விறுவிறுக்க வேகமாக வந்து கொண்டிருந்த வேலோன், பீடாக் கடை வாசலுக்கு வந்ததும் 'பிறேக்' போட்டு காலை நிலத்தில் ஊன்றியவாறு இவர்களைப் பார்க்கிறான்.

"ஏன் 'கிளாசுக்கு' நேரமாச்செல்லோ?"

"கிளாசுக்குப் போனாலென்ன? போகாட்டிலென்ன? 'பொட்னி' சப்பித்தள்ளுற பாடந்தானே?" வேகமாக வந்த கார் ஒன்று வேலோனை முந்திச் சென்றது.

"எண்டாலும் போனால் கொஞ்சம் உதவியாயிருக்கும் தானே?"

"உங்கை 'கிளாசுக்கு' ஒழுங்காப் போனாக்கள் எல்லாரும் 'வாசிற்றிக்கு என்ர' பண்ணிறவையோ?"

" 'என்ர' பண்ணிறமோ இல்லையோ கடமையை நாங்கள் ஒழுங்காச் செய்ய வேணும். உங்களோடை கதைச்சு கொண்டிருந்தால் அலுப்புத்தான் வரும்.....நான் மாறுறன்."

"வேலோன், அதுக்கு முந்தி ஒரு விசயம்". வெண்கலக் குரல் வழி மறித்தது.

"என்ன விசயம்? கெதியாச் சொல்லித் தொலை!"

"நீ இண்டைக்கு 'இன்ரவலுக்கு' வீட்டை போனாப்போலை. 'கொலிஜிலை' உன்னைப் பற்றி எல்லாரும் ஒரு மாதிரிக் கதைச்சாங்கள்".

"ஒரே மாதிரித்தானே.....விட்டுத் தொலை!"

"நீ பெரிய 'லெவல்' காறனாம். 'பிறிஃபெக்ற்' எண்டாப் போலை. 'லெவல்' பண்ணுறதோ? கெட்டிக்காறங்களான சாந்தன், அழகன் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா இருக்கைக்கை உனக்கென்ன கண்டறியாத 'லெவல்' எண்டு எல்லோரும் கதைச்சாங்கள்".

" ' பிறிஃபெக்ற் டியூட்டி'யிலே இருக்கைக்குள்ளே 'லெவலா'த்தான் இருக்க வேணும். அது தான் நியதி."

"தெரியமால்தான் மச்சான் கேக்கிறம். உனக்கு என்ன தகுதியிலை 'பிறிஃபெக்ற் போஸ்ற்' தந்தவை?"

"அது தந்த 'பிறின்சிப்பலை' போய்க் கேள்!"

"போடா கோபி ! உனக்குத் தெரியாது!! இப்ப..... இப்ப..... உயரமான ஆக்களைத்தானாம் 'பிறிஃபெக்ட்' ஆக்கிறது". வெடிச் சிரிப்புடன் குரல் ஒன்று ஒலித்தது.

வேலோனின் முகம் கறுத்து விட்டது. நிலமையை நன்கு உணர்ந்த குமரன் அடுத்த கணை தொடுக்க ஆயத்தமானான். ஒலித்த பாடல் ஓய்ந்து சோகப் பாடல் ஒன்று ஒலிபரப்பாகின்றது!

"என்ன கிரந்தம் கதைக்கிறியள்? எனக்கு பத்திக் கொண்டு வாற ஆத்திரத்துக்கு....."

"உள்ளதை தானே மச்சான் சொன்னனாங்கள்? அதுக்கு உப்படி முகம் கறுத்தால்....." வெடிச் சிரிப்புடன் குரல் ஒலித்து ஓய்ந்தது!

"'கிளாசுக்கு' நேரமாச்சு. பிறகு முன்னுக்கு இடம் பிடிக்கலாது. நான் வாறன்."

"முன்னுக்கு இருந்தாப் போல 'பொட்னி'க்கு 'ஏ' எடுத்துப் போடலாமோ?"

" 'ஏ' வருகுதோ.....'எஸ்' வருகுதோ, இயண்ட வரை படிக்கத்தானே வேணும்?"

"தெரியமால் தான் கேட்கிறம் மச்சான்.....உப்படிப் படிச்சாப் போல நீ என்ன 'என்ர' பண்ணிப் போடுவியோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் அப்பவே சொன்னனே..... உதொண்டும் எங்கடை கையிலை இல்லை!"

"மச்சான் 'சலஞ்'....! நீ 'ஏ லெவலிலை' நாலு பாடமும் 'பாஸ்' பண்ணிப் போட்டால், நான் என்ரை கையை வெட்டி எறியிறன்!" கணீரென்று ஒலித்தது வெண்கலக் குரல். தொடர்ந்து வெடிச் சிரிப்பு உதிர்ந்தது.

வானத்தில் ஓர் மின்னல் கீற்று! தொடர்ந்து ஓர் பேரிடி! ஓர் கணம் உலகமே அதிர்ந்ததைப் போல் ஓர் பிரமை!! ஊன்றிய காலை 'பெடலில்' வைத்து 'சைக்கிளை' உழக்க முயன்றான் வேலோன்.

"இப்ப உன்னை 'சைட்'டாலை பார்த்தால் 'எம்.ஜி.ஆர்'. மாதிரிக் கிடக்கு மச்சான்." வேலோனின் 'சைக்கிள் கரியர்' இப்போ கோபியின் பிடியில்!

"அவ்வளவு வடிவு எண்டு நினைச்சுப் போடாதை மச்சான்..... அந்த மாதிரி வயது காட்டுது."

வேலோனின் கண்கள் சிவப்பேறிவிட்டன. மன்றாடும் தோரணையில் கோபியை நோக்குகிறான். " 'பிளீஸ்' கையை எடு மச்சான்".

பிடியை கோபி விடுவதாக இல்லை! 'சைக்கிளை' விட்டு இறங்கிய வேலோன் கூறுகிறான். "நீங்கள் 'சைக்கிளை' வைச்சிருங்கோ.....எனக்கு நடக்கத் தெரியும். ஏன் 'ரீயூசன் சென்ரருக்கு' ஓடிப் போகவுந் தெரியும்."

"ஓடுறதுக்கு இதென்ன 'கிறவுன்சே'?" கோபி வினவ, குமரன் தொடர்கிறான். "சிலருக்கு தாங்கள் பெரிய ஒலிம்பிக் வீரரெண்ட நினைப்பு".

"சும்மா சொல்லாதை மச்சான். 'அண்ட நயின்ரீன் குறுப்'பிலை போன முறை 'ஹன்ரட் மீற்றரிலை சலஞ் கப்' வேலோனுக்குத் தானே?" வெண் கலக் குரல் வக்காலத்து வாங்கியது!

"அது 'ஸ்போட்சில்' அண்டு அவன் 'மூத்தண்ணன்', 'கிறவுண்சுக்கு' வர நேரம் செண்டபடியாலை எல்லோ?" வெடிச் சிரிப்புடன் குரல் ஒன்று ஒலித்தது.

வேகமாக வந்த ஓர் 'பஸ்' சடுதியாய் நின்று பின் ஒரு குலுக்கலுடன் முன்னே சென்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ ஓடி ஓடி வந்தான் சீலன். "ஏன்ரா இதிலை நிக்கிறியள்! 'ரியூசனக்கு' நேரமாச்சு எண்டு 'பஸ்'சாலை இறங்கி நான் ஓடி வாறன்.....நீங்கள் இதிலை நிண்டு....."

சகலரும் மௌனியாக நிற்கும் அந்தக் காட்சியையும் வேலோனின் முகச் சாயலையும்..... கோபியின் பிடியையும்.....இனம் புரிந்த சீலன், "உந்தக் 'கீலா செற்றை'க் காய் வெட்டிப் போட்டுப் போறதுக்கு உதுகளோடை உனக்கென்ன கதை வேலோன்..... நீ வா நாங்கள் போவம்....." என்றவாறே அவசரப்படுத்துகிறான் சீலன்.

நேராக வந்த காரொன்று பீடாக் கடைப் பக்கமாக திசை திரும்புகிறது.

" 'ஓ லெவல்' மூண்டாம் முறை 'பாஸ்' பண்ணின ஆக்கள் கூட இப்ப கதைக்க வெளிக்கிட்டினம்....." வெடிச் சிரிப்பு ஒன்று உதிர்கிறது.

"ஓமப்பா! ஆரோ இல்லையெண்ட நாங்களே? பத்து விரலும் ஒரே மாதிரி இருக்க முடியுமோ?" அடிக்குரலில் சீலன் கூறுகிறான்.

"அது சரி சீலன்...உங்கடை ஊரிலை இதுவரை எத்தனை பேர் 'ஓ லெவல்' பாஸ் பண்ணினவை?" இது வெண்கலக் குரலின் சந்தேகம்.

"உங்கடை ஊரை விட திறமாப் 'பாஸ்' பண்ணியிருக்கிறாங்கள்.....பார் ஆக்களின்ரை கதையளை. வேலோன் இப்ப நீ வரப்போறியோ? 'றேடியோ'விலை செய்தி 'ரியூண்' கேக்குது! 'கிளாஸ்' தொடங்கப் போகுது".

இப்போ கோபியின் பிடி விலகிவிட்டது. "இப்படி முக்கி முக்கி படிச்சுத்தா னென்ன? குமரனை விட போன தரம் பத்து 'மாக்ஸ்' தானே கூட".

"அதாவது கூடத்தானே!" சீலன் உஷாரானான்.

"நாங்கள் இப்படி முசுப்பாத்தி பண்ணியும் படிக்கிறம். நீங்கள் இப்படி முக்கி முக்கிக்கூட.....உண்மையிலே உங்களை விட நாங்கள் தான் கெட்டிக்காரர்".

"போட்டி போடப் பலமில்லாமல் பொறாமைப்பட்டுத் திரியிறியளே.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித் தானிருக்க வேண்டுமென்ற நியதியில்லாமல் திக்கற்றுத் திரியிறியளே..... மற்றவங்களையும் முன்னேறவிடமால் நீங்களும் முன்னேறாமல் இருந்து அப்பர், அம்மாவைப் பேக்காட்டுறதா நினைச்சு, நீங்களே பேக்காட்டுப்படுறியளே. உண்மையிலே நீங்கள் தான் கெட்டிக்காரர்", சீலன் 'பாறில்' பாய்ந்து ஏறுகிறான். வேலோன் தான் அப்போதே தயாராகிவிட்டானே!

"பெரிய கதை கதைக்கினம்..... உப்பிடித் தத்துவங்கள் கதைச்சாப் போலையென்ன உவையென்ன 'வாசிற்றி'க்கு 'என்ர' பண்ணுற ஆக்களே?" வெண்கலக் குரல் ஒலிக்க வெடிச் சிரிப்பு உதிர்ந்தது.

இப்போ வேலோன் வேகமாக முன்னேறுகிறான். வரும் போது அவன் முகத்தில் இருந்த களை இப்போ இல்லை. அவனது முகம் இப்போ..... வரண்டு ஒடுங்கி விட்டது!

'தியேட்டரில்' இப்போதுதான் 'அந்தப்' பாடல் ஒலித்து ஓய்ந்தது. 'தியேட்டர்.' வளவினுள் இப்போ எவருமே இல்லை..... 'போட்டோக் காட்ஸ்' பார்க்கும் ஒரு சிலரைத் தவிர. 'கலரி'க் கூண்டு 'லைட்' அப்போதே அணைந்துவிட்டது.

"இண்டைக்கு வேலோனுக்கு உவ்வளவும் போதும்." கறுவாத் துண்டொன்றை வாய்க்குள் முறித்து வைத்தான் குமரன்.

"இண்டையான் விசயம் 'சக்சஸ்'..... இனி அடுத்த 'புறோகிறாம்' என்ன மாதிரி?" வெண்கலக் குரல் வினவியது!

"சொல்லவே மறந்து போனன். இண்டைக்கு என்ரை ஆள் படம் பார்க்க வாறனெண்டது.....அதனாலை..... 'டியூட்டி' இண்டைக்கும் 'தியேட்டருக்கை' தான்." கண்களால் ஜாடை காட்டியாவறே கோபி கூறுகிறான்.

"அது தான் 'ரீஷேட்' அடிச்சு.....'எம்.ஜி.ஆர்.' மாதிரி வந்திருக்கிறாய்..... அப்பவே என்ன விசயமெண்டு யோசிச்சன்".

"அவனை விடு! அல்லாட்டி அவள் இவனுக்கு சுழருறாளே? சரி.....சரி..... அப்ப கோபி இந்தா 'சைக்கிள்' கொண்டுபொய் உன்ரை வீட்டிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுட்டு வா! 'இன்ரேவலோடை' வெளிக்கிடுகிறபடி யாலை.....இடையிலை 'சைக்கிள்' எடுக்கேலாது". அன்ரன் அவசரம் காட்டுகிறான்.

"நான் சைக்கிளை விட்டுட்டு வாறன். அன்ரன் நீ போய் 'செக் கெண்ட் கிளாசிலை' முண்டு எடு" சைக்கிள் இப்போ கோபி கையில்.

இப்போ 'தியேட்டரில்' பாடல் 'ஓடிற்றோறியத்துள்' ஒலிக்க ஆரம்பித்து விட்டது. பாடல் ஒன்று ஒலித்து ஓய்கிறது. மீண்டும் ஓர் பழைய பாடல்.

"கொப்பிகளை என்ன செய்யிறது?"

"இஞ்சை கொண்டு வாருங்கோ. பீடாக் கடை என்னத்துக்கு இருக்கு?"

"இண்டைக்குத் தான் கடைசி. நாளையிலையிருந்து படிக்கத் தொடங்க வேணும்", 'எதையோ' சிந்தித்தவாறே குமரன் கூறுகிறான்.

"ஒவ்வொரு நாளும் தானே உதைச் சொல்லுறாய்?" 'ரிக்கெட் பலன்ஸ்' பார்த்தவாறே அன்ரன் கூறுகிறான். "இல்லை, இண்டைக்குத்தான் கடைசி. இனிமேல் ஒழுங்காய் படிக்க வேணும். கிளாசுக்குப் போக வேணும். இல்லாட்டி வேலோனை வெல்லேலாது.

" 'கிளாசுக்குப்' போகவேணும் எண்டுறாய் 'ஃபீஸ்' கட்டிப் போட்டியோ?"

"இல்லை! மச்சான் அப்பர் மிளகாய் வித்துத்தான் காசு தாறன் எண்டவர்..... அது தான் யோசிக்கிறன்....." வெடிச் சிரிப்பு இப்போது வேதனைக் கலப்புடன் ஒலித்தது!

"அதுசரி அன்ரன். உனக்கு எங்காலை மச்சான் காசு?"

"எல்லாம் 'ரியூசன்' காசுதான்..... அதையெல்லாம் ஏன் இப்ப கேட்டு பரிசு கெடுத்திறாய்? ம்..... உன்ரை சரக்கு உள்ளிடுகுது மச்சான்". வெண்கலக் குரல் ஒலிக்க, கோபி ஒரு முறை தன் 'அழகை' 'பொக்கெற்'றி லிருந்த கண்ணாடியில் உறுதிப் படுத்திக் கொண்டான்.

"மாறுவம், 'ஃபெஸ்ட் பெல்'லும் அடிச்சிட்டுது போலை. வாசலுக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மான் இருக்கிறார்..... நான் மெதுவா மாறுறன்..... நீங்கள் பிறகு வாருங்கோ!"

'தியேட்டர்' வாசலில் இன்னமும் மின் விளக்குகள் அழுது வடிந்து கொண்டிருந்தன.

'செக்கண்ட் கிளாஸ்' நுழைவினை மூவரும் அடைகின்றனர்.

மூன்று 'ரிக்கெட்டும்' கிழிக்கப்படுகின்றன.

இருளினுள் மூவரும் வேகமாக நுழைகின்றனர்.

-"வீரகேசரி வாரவெளியீடு"

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979

தானம்

"எல்லாம் அமைதியாய் இரு. பந்தியைக் குழப்பாமல் எல்லாம் அமைதியாய் இரு". - ஆர்ப்பரிக்கின்ற ஆலய மணிகளிற்கு மேலாக அருணாசலத்தாரின் குரல் ஆவேசமாக ஒலித்தது.

"மூடல் இல்லாதவைக்குத்தான் இலை". - தேக்கமிலை தேகம் நிறைந்திருக்க, ஒரு கையால் இலைகளைப் பிய்த்தவாறே வரிசையில் அமர்ந்திருப்பவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார் அவர்.

"பொடியள் புறம்பான பந்தியிலை இருங்கோ. ஆரும் அங்கை யிங்கை கள்ளப்பந்தி மாறினது கண்டனோ கம்பாலைதான் விழும். சொல்லிப் போட்டன்". - அடிக்குரலில் அவர் கூறுகிறார்.

அப்போது தான் கோவிலடிக்கு வந்த செல்லன் மூடலைக் கமக்கட்டிற் குள் வைத்துக்கொண்டே தனது மூன்று பிள்ளைகளுடனே அவசர அவசர மாக ஆலய முன்றிலுக்கு ஓடிவந்தான்.

"செல்லன்..... உங்கடை பந்தி தேக்கமரத்துக்குக் கீழையெல்லே? பந்தியைக் குழப்பாமல் அங்கை போயிரு!"

"அங்கைதானாக்கும் போறன்..... ஒரு இலை தரவாக்கும்!"

"மூடல் இல்லாதவைக்குத்தான் இலை. ம்.... விலகு. நிண்டு மெனக் கெடுத்தாதை".

அந்த ஆலயத்தில் எவரது அன்னதானம் நடந்தாலும், முன்னின்று உழைக்கும் அருணாசலத்தார், இன்று தனது மைத்துனர் முருகேசரின் தானம், ஆகையால் சற்று உற்சாகமாகவே இயங்குகிறார்.

கேட்டது கிடைக்காது போகவே, அரையிலிருந்த சால்வைத் துண்டால் மூடலைத் துடைத்துத் தட்டிக் கொட்டியவாறே, தேக்க மரத்தடிக்குச் செல்கிறான் செல்லன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மா மணல் ஒண்டுமில்லை. கையிலையும் ஒரு சதத்துக் காசுமில்லை. இண்டைக்கு இரவைக்குப் பொடியளுக்கு என்னத்தைத் தேடுகிறது?" என்று துறையால் திரும்பும் போது ஆழ்ந்த சிந்தனையில் வந்தவனுக்கு, கந்தமுருகேசனார் சிலையடியில் வரும்போது, "இண்டைக்கு பிள்ளையார் கோயிலிலை முருகேசற்றை தானமாம்" என்று யாரோ கதைத்துக் கொண்டது தேனாகக் காதுகளில் பாய்கிறது. மூன்று பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்து விட்டு மாரடைப்பால் அவனது மனைவி மூன்று வருஷங்கட்கு முன்பு மாண்டதன் பிறகு, மாடாயுழைப்பதுடன் நித்தமும் மாலையில் தீன் தேடுவதும் அவனது தலையில் வீழ்ந்துவிட்டது. பத்து வயதும் நிரம்பாத மூத்த அவனது மகள், அடுத்தடுத்த வருடங்களில் பிறந்த இரண்டு மகன்கள்..... அவர்களால் தான் என்ன செய்ய முடியும்?

காலையில் உண்ட பழஞ்சோறு போக, ஆனைப் பசியுடன் அவனைக் காத்திருந்த பிள்ளைகள், அவன் வருவதைக் கண்டதும் காணாததுமாக ..... "ஐயா கோயிலிலை பூசையாம். வா போவம்" என்று சென்னபோதே அவர்களது அகோரப் பசியை அவனால் உணர முடிந்தது. வெளுத்து வந்த உடுப்புக்களைத் திண்ணையில் போட்டவன், மூடலை எடுத்துக் கொண்டே பெருமூச்சுடன்....

"பிள்ளையாரே!"- பூசை முடிந்து ஆலய வாசலில் அடியவர்கள் கைதட்டும் ஒலி செல்லனின் காதுகட்கும் பசுமையாகவே கேட்கிறது.

வெற்றிலைத் தாம்பாளத்துடன் குருக்கள் வெளியேறிய போது குறிப்புணர்ந்து, தீர்த்த மடத்தில் 'காட்ஸ்' விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களும், வடக்கு வீதியில் கிளித்தட்டாடிய பிள்ளைகளும் ஆட்டங் களை இடைநிறுத்திவிட்டே ஆலயத்தை நோக்கி ஓடி வருகின்றனர்.

காதுகளிரண்டினையும் செவ்வரத்தம் பூ அலங்கரிக்க, மார்பில் சந்தனம் பரிணமிக்க கோயிலுக்கு வெளியே வந்த முருகேசர், ஆலய முன்றலில் பந்திகளாகப் பரந்திருக்கும் சனங்களை ஒரு கணம் பார்த்து விட்டு, வரிசையில் நின்ற ஐந்தாறு இளைஞர்களை அழைக்கிறார். "தம்பியவை சோத்துப்பெட்டி பிடிக்க ஆள் தேவை. ஒல்லுப் போலை வாருங்கோடி".

சேட்டுடன் நின்ற இளைஞர்களில் சிலர் சேட்டைக் கழற்றி நண்பர் களிடம் கொடுத்துவிட்டு, சாரத்தை மடித்துக் கட்டியவாறே கோயிலுக்குள் நுழைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து நின்று கூத்தடிக்கும் சிறுவர்களைக் கம்பு கொண்டு கட்டுப்படுத்திக் கொண்டு நின்ற அருணாசலத்தாரை அழைத்த முருகேசர், ஆலய முன்றலில் பரந்திருக்கும் சனங்களைக் காட்டி காதில் எதையோ கூறுகிறார். அதைக் கேட்டு அருணாசலத்தாரும் தலை ஆட்டிவிட்டு மீண்டும் தனது கடமையில் ஈடுபடுகிறார்.

பந்திக்குள் புகுந்து வந்த அருணாசலத்தார் சோற்றுப் பெட்டிகளுடன் மூன்று இளைஞர்கள் வெளிவருவதைக் கண்டதும் ஆலய வாசலிற்கு ஓடுகிறார். "தம்பியவை! சனம் எக்கச்சக்கமாக வந்திருக்கு! சோத்தை அளந்து போடவேணும்!" என்று கூறியவாறே சோற்றுப் பெட்டிக்குள் தன் கையை வைத்து அளவு காட்டுகிறார்.

"மண்டலாய், நீ வடக்கை போ. சண்முகம், நீ பொடியளின்ரை பக்கம் போ. எட தம்பி வேலோன், நீ இங்காலை தேர்முட்டியடிக்குப் போ". - சோற்றுப் பெட்டிகளுடன் வந்த இளைஞர்களைப் பிரித்துவிடுகிறார் அவர். யாவற்றையும் மேற்பார்வை செய்து கொண்டு முருகேசர் உண்டியல் பெட்டிக்கருகில் கை கட்டியவாறே நிற்கிறார். அடிக்கொருதரம் அவரது கண்கள் தெற்கு வீதியில் 'எதையோ' எதிர்பார்க்கின்றன.

சகலதையும் கவனித்தவாறே.... தேக்க மரத்திற்குத் கீழே இருந்த செல்லனின் மகள்.... "ஐயா, எங்கடை பந்திக்கு ஏன் ஒருதரையும் விடேலை?" என்று ஏக்கத்துடன் கேட்டாள்.

"கடைசியாகத் தான் மோனை விடுவினம்."

அப்போ.... பெரிய கைப்பெட்டி நிறையச் சோறு, காய் கொண்டு வெள்ளை வேட்டியுடன் ஒருவர் கோயிலை விட்டு வெளியேறுகிறார்.

"அவையளுக்கு அவளவு சோறோ ஐயா?"

"ஓம் மோனை. அது படையல் சோறு. பரம்பரை பரம்பரையாக அவையளுக்குத்தான் முதல் சோறு குடுக்கிறது".

"அவை உவ்வளவு சோத்தையும் வைச்சிருந்து நாளை, நாளைண் டைக்கும் தின்னுவினம் என்னையா?" - ஊரில் எங்காவது சடங்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தால் வரும் குடிமைச் சோற்றை வைத்து 'தண்ணீர் ஊற்றி' நாலைந்து நாட்களுக்குத் தாம் வயிறாறுவதை மனதிருத்தி செல்லனின் இளையது வினவியது.

"பேக்கதை பறையிறாய். அவை வளவுக்கை நெல்லு மூட்டை மூட்டையாக் கிடக்கு. உதுகள் ஏன் அவைக்கு?" - செல்லனின் 'நடுவில்' இது.

"அப்ப என்ன செய்வினம்?"

"ஆடு, மாட்டுக்கு வைப்பினம்".

"உவ்வளவு சோத்தையுமோ?"

"சோறு ..... சோறு.....!" - வடக்குப் பந்திக்கு சோறு கொடுத்துக் கொண்டி ருந்த மண்டலாயர் சோறு அடிப்பெட்டிக்குள் போகவே அடிக்குர லெடுத்தார். அருணாசலத்தார் பெட்டி நிறைய சோறு கொண்டு வந்து மண்டலாய் வைத்திருந்த பெட்டியை நிரப்புகிறார். "தம்பி மண்டலாய், நீ கூடப் போடுறாய்.... அளந்து போடு. சோறு மட்டுமட்டு".

"சரியண்ணை வெல்லுவம்".

சற்றுத் தூரம் சென்று வந்த அருணாசலத்தார் திரும்பவும் மண்ட லாயின் அருகில் வந்து மெல்லிய குரலில் கூறுகிறார். "தம்பி.....பக்கத்திலை என்ரை மருமோள் பொடிச்சியிருக்கிறாள். பாத்து என்ரை பங்கையும் அந்த மூடலுக்கை போட்டுவிடு".

"ஓமண்ணை. போட்டுவிடுறன்".

"அரோகரா, அரோகரா".- கோபுரத்தில்பட்டு, குரல்கள் எதிரொலித்தன. இளைஞர் பந்திப் பக்கமாச் சொன்ற சண்முகம் வெற்றுப் பெட்டியை இரு கைகளாலும் தன் தலைக்கு மேல் உயர்த்தியவாறே கோவிலுக்குள் நுழைகிறார்.

இளைஞர் பந்தி சிதறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சனியனுகள், பந்தியளைக் குழப்புதுகள். இஞ்சை எங்கடை பந்திக்கு..." செல்லனின் அருகில் நின்ற கதிரன் இது.

"அதுகளுக்கென்ன? வீட்டிலை வேளா வேளைக்குச் சோறு கிடைக்கும். போதாக் குறைக்கு பூசைச் சோத்தையும் திண்டுட்டு நிண்டு குதியன் குத்துதுகள்." - செல்லன் அலுத்துக் கொள்கிறான்.

"அங்கையென்ன குழப்பம்?" வடக்குப் பந்தியைச் சிதறவிடாது அருணசலத்தார் மண்டலாயின் பக்கத்தில் நிற்கிறார்.

"அண்ணை இந்த மூடலுக்கை மூண்டு பேருக்கு".

"ஆரடா மூண்டு பேர்? ஆக்களைக் காட்டு".

"எனக்கும், இவனுக்கும், தம்பிக்கும்....."

"எங்கையடா மற்றவன்?"

"வீட்டை நிக்கிறான்".

"வீட்டையோ? ஏன் கொப்பு, கோத்தைக்குமா சேத்துத் தாறம். கொண்டு போவன்....." ஏதோ பகடி விட்ட நினைப்பில் அருணாசலத்தார் நிமிருகிறார். சற்று நேரத்தில் மண்டலாயர் சோற்றுப் பெட்டியைத் தன் தலைக்கு மேல் உயர்த்துகிறார்.

"அரோகரா, அரோகரா". - வடக்குப் பந்தியும் சிதறுகிறது.

"மண்டலாய், பெட்டியை உள்ளை கொண்டு போ". - தேக்க மரத்தடியில் மட்டும் இன்னும் தேங்கி நிற்கும் சனக்கூட்டம் பக்கமாக மண்டலாயின் பார்வை திரும்பிய போது அருணாசலத்தாரின் குரல் ஒலிக்கவே, அவர் பெட்டிப் பாம்பாகி கோவிலுக்குள் நடையைக் கட்டுகிறார்.

தேர் முட்டியடிப் பந்திப் பக்கம் சென்ற வேலோன் நிமிர்ந்த போது அருணாசலத்தார் அருகிலேயே வந்து விட்டார்.

"அரோகரா, பிள்ளையாருக்கு அரோகரா".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொறண்ணை. மரத்தடிப் பந்திக்கு இன்னும் சோறு வைக்கேல்லை".

"வேலோன், பெட்டியை இஞ்சை கொண்டா". - அருணாசலத்தார் அவசரங் காட்டினார்.

"தேக்க மரத்தடியிலையும் ஒரு பந்தியெல்லே அண்ணை இருக்கு?"

"சோறு மட்டுமட்டா தம்பி! பிறகென்ன.... மச்சான் வெறுங்கை யோடையே வீட்டை போறது?"

"அப்ப..... அதுகள் சோறு வாங்காமலே போறது?"

"அதுகள்..... அதுகள் எண்டு எளிய சாதியளுக்காக நீ ஏன் வக்காலத்து வாங்கிறாய்?"

"அத்தான், உங்கை என்ன சச்சரவு?.... பெட்டியை உள்ளை கொண்டு போங்கோ. தம்பிமார் உங்களைத்தான் உள்ளை போங்கோடியவை".- தெற்கு வீதியில் 'எதையோ' எதிர்பார்த்துக் கொண்டு நின்ற முருகேசர் விடயமறிந்து தேர்முட்டியடிக்கு ஓடி வந்து விட்டார்.

"அண்ணை, மரத்தடிப் பந்திக்கு இன்னும் சோறு வைக்கேல்லை".

"தம்பி.... சோறு மட்டுமட்டடி, அதுதான்..... அதுகளை விட்டுட்டு பெட்டியைக் கொண்டு உள்ளை வா மோனை".

"அண்ணை, தானமெண்டால் தானமாயிருக்க வேணும். எல்லாருக்கும் குடுத்திட்டு அதுகளுக்கு".

"தம்பி, நிலவரமறியாமல் பறையிறாய். சோறு மட்டுமட்டு. பந்திக்கு சோறு வைச்ச பொடியளுக்கும், இனிக் காத்தாலை தொடக்கம் பூசைக் காய்களரிஞ்சு பாடுபட்டவைக்கும் புறிக்கவேயடா சோறு மட்டுமட்டு".

"தானம் எண்டால் அதுதான். பாடுபட்டவைக்கு சோறு போடவேணு மெண்டால், நீங்களெல்லாரும் வீட்டை கூடியிருந்து ஒரு பெரிய பாட்டி வைச்சிருக்கலாமே".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தான், அவன்ரை விசர் ஞாயங்களை விட்டிட்டு பெட்டியை வேண்டிக் கொண்டு நீங்கள் உள்ளை வாங்கோ".

"இதுகளைப் போல ஒரு வேளை சோத்துக்காக அவலப்படுகிற சனங்களுக்கு ஒரு நேரமாவது வயிறாறச் சோறு போடுறதுக்குத்தான் தானம், அண்டை அயலார் கூடி வந்து அவிச்சுப் போட்டு புறிச்சு வீட்டை கொண்டு போறதுக்கில்லைத் தானங்கள். வீட்டிலை பண்டங்கள் நிரம்பியிருக்கிற வைக்குப் பெட்டி பெட்டியாச் சோறு அனுப்புறியளே..... பசிக்காகப் போரா டுற இதுகளுக்கு ஒரு வேளையாவது வயிறாறச் சோறு போடுறதுக்குத் தான் தானங்கள்".

"அத்தான், பெட்டியை வாங்கிக் கொண்டு நீங்கள் உள்ளை வாங்கோ. அவன்ரை வியாக்கியானங்களைக் கேட்டுக் கொண்டு நிக்க எங்களுக்கு நேரமில்லை. அலுவலுகள் கனக்கக் கிடக்கு". - குட்டிபோட்ட நாயானார் முருகேசர்.

"தானம் குடுக்கினமாம் கண்டறியாத தானம்....." பெட்டியை விட்டாலும் வேலோன் பேச்சை விடுவதாக இல்லை.

தெற்கு வீதியால் வந்த முருகேசரின் கார் மடைப்பள்ளி வாசலில் வந்து நின்றது. இப்போதுதான் முருகேசர் உசாரானார். கார் 'டிக்கி' திறக்கப்பட்டது.

"ஐயா, பசிக்குது..... சோறு" பொறுமையின் எல்லையைத் தாண்டிச் செல்லனின் இளையது அழ ஆரம்பித்து விட்டது.

தேக்க மரத்தின் கீழ் இருந்த ஐம்பது, அறுபது சனங்களும்..... சிதற ஆரம்பித்தனர். மூடலைத் தட்டிக் கொட்டியவாறே மடைப்பள்ளிப் பக்கம் செல்கிறான் கதிரன்.

"கதிரன் நில். எங்கை போறாய்? உனக்கு வெட்கமாயில்லையே? நடந்ததைப் பாத்த பிறகும் பிச்சைகேட்கப் போறியே? உன்னைப் போலக் குனியிறவங்களும் இருக்கிறதாலைதான் அவங்களும் குட்டிக் கொண்டி ருக்கிறாங்கள். என்ன பெரிய பட்டினி? இவ்வளவு நாளும் இருக்காததே? உதை விட ஈரத்துணியா ஒண்டை எடுத்து வயித்தை இறுக்கிக் கட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுக் கிடந்திடலாம்". - எழுந்து நின்று செல்லன் கூறுகிறான்.

"ஐயா சோறு....."

கார் 'டிக்கியும்', 'கரியரும்' சோற்றுப் பெட்டிகளால் நிரம்பின. கார் புறப்பட்டு விட்டது. இப்போது முருகேசர் வெளியேறுகிறார். பின்னே தலையில் பெட்டிகளுடன் அருணாசலத்தார் வெளிப்பட்டார்.

ஏதோ நப்பாசையில் மரத்தடியில் இன்னும் சிலர் சிதறியபடியே ..... நிற்கிறார்கள். ஆனால், கதிரன் அப்போதே சென்றுவிட்டான்.

பொழுதும்.... மைமலாகி விட்டது.

வெளியே வந்த முருகேசர் வாசலில் நின்றவாறே மூன்றுதரம் தோப்புக்கரணம் போடுகிறார்.

'பிள்ளையாரே'. - கைகளைத் தட்டி விட்டு நடையைக் கட்டுகிறார் அவர்.

தேக்க மரத்தடியில் ..... சனங்கள் மெல்ல, மெல்லக் கலைய ஆரம்பிக்கின்றனர்.

நடந்து கொண்டிருக்கும் முருகேசரை செல்லன் வெறித்துப் பார்த்தவாறே நிற்கிறான். வர. . . . . வர. . . . . முருகேசரின் உருவம் செல்லனின் கண்களில் குறுகிக் கொண்டே செல்கிறது!

-"மல்லிகை"

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984

புதிய பயணம்

"தம்பி, நேரம் பதினொண்டரையாச்சு, 'நேசறி' விடுகிற நேரம் வந்திட்டுது. ஒருக்கால்ப் போய் திரையனைக் கூட்டிக் கொண்டு வாறியே?"-ஆழ்ந்த நித்திரையிலிருந்து அப்போதுதான் பாயை விட்டெழுந்த என்னிடம் அக்கா வந்து கேட்டா.

"ம் . . . . எனக்கு முதலிலை ஒல்லுப்போலை தேத்தண்ணி போட்டுத் தா." என் பதில் கேட்டு அடுப்படிக்குள் செல்கிறா அக்கா.

கொழும்பிலிருந்து நேற்றுக் கருக்கலோடு புறப்பட்டு கொடிகாமம் வந்தடையப் பொழுது மைமலாகி விட்டது. வரணியில் கூட்டாளி ஒருவரது வீட்டில் தங்கிவிட்டு தட்டி வான் எடுத்துப் பின் ஊர் வந்து சேர காலை எட்டு மணியைத் தாண்டிவிட்டது. நெடு நாட்களாக உடன் பிறந்தவளைக் காணாமலிருந்த சோட்டை, அதிக நேரம் உரையாடிவிட்டு பிரயாண அசதியில் சற்று அயர்ந்து விட்டேன்.

"ஊருக்கு வந்து ஒரு வருடமாச்சு, அக்கா, உங்களையெல்லாம் காண ஆசையாக இருக்கு. தீபாவளிக்கு வரட்டோ?" என்று சில மாதங்களுக்கு முன்பு அக்காவைக் கேட்டெழுதியிருந்தேன்.

"என்ரை ராசா. . . . . இப்போதைக்கு உந்த எண்ணம் ஒண்டும் வேண்டாம். நிலவரங்கள் சரியில்லை. பிரயாணங்கள் செய்யிற நேரங்களிலைதான் வலு அவதானமாக நடக்கவேணும். தை பிறக்கட்டும் பார்ப்பம்' என்று அக்கா மறுமொழி போட்டிருந்தா.

கொழும்பு வாழ்க்கையை நினைக்கும் போது எனக்கு விசராக இருக்கிறது. விடிந்ததும் காரியாலயம். பின் இருண்டதும் அந்த அறையில் போயிருந்து தனிமையான சஞ்சாரம். மன ஆறுதலுக்கோ, அன்றி மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு உரிமையுடன் கதைக்கவோ எவருமோ இல்லாத அலுத்துப் போன பிரமச்சாரிய வாழ்க்கை. காசைக் கொடுத்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளும் கடைச் சாப்பாடு. தாகம் வந்தால் குடிக்கத் தண்ணீரே போதியளவற்ற தலைநகர வாழ்க்கை. இருபது வயதிலிருந்து கடந்த ஏழு வருடங்களாக இதே சுவையற்ற சுழல் சம்பவங்கள். கொழும்பில் குடும்பமாக இருக்கும் என்னையொத்த வாலிபர்களைப் பார்க்கும் போது எனக்குப் பொல்லாத எரிச்சலாகவும், ஏக்கமாகவும் இருக்கும். நான் அப்படியாக ஒன்றும் அனாதையல்ல. வயதான பெற்றோரும் உடன் பிறந்த அக்காவும், குடும்பமும் இருக்கும் போது, அவர்களுடன் ஒன்றாகக் கூடி வாழ முடியாதபடி எங்களது தொழில் நிலவரங்கள், வரும்படிகள், அடிக்கடி ஊர் வந்து சென்றால் எந்தவித ஏக்கமும் இருக்காது தான். ஆனால், இது பாதுகாப்பாகப் பிரயாணம் கூடச் செய்ய முடியாதபடி நாட்டு நிலவரங்கள், போக்குவரத்து வசதிகள், கிழமைகள் தவறாது அக்காவின் கடிதங்கள் வரும். என் சுகம் விசாரித்து, எனக்காகப் பிரார்த்தித்து. ஆனாலும்?

"தம்பி, வேலோன் வெள்ளனச் சொல்ல அயத்துப் போனன். 'மொண்ட சொறி' முன்னை மாதிரி நெசவுசாலைக் கட்டிடத்திலை இல்லை. இப்ப சாமியாற்றை மடத்திலை". தேநீர்க் கோப்பையை நீட்டியவாறே அக்கா சொல்கிறா.

"ஏன் நெசவுசாலைக்கு என்ன நடந்தது?"

"கடற்கரை கல்லூரிகளிலை இப்ப 'ஆமிக் காம்ப்' இருக்கு. அதனாலை இப்ப ஊர்ப் பள்ளிக்கூடத்தோடைதான் கல்லூரியையும் சேர்த்திருக்கினம். கொட்டில்கள், கட்டிடங்கள் போதாதெண்டு நெசவுசாலை, சுருட்டுத் தொழிற்சாலை, பனங்கட்டித் தொழிற்சாலை எல்லாம் இப்ப வகுப்புகள் நடத்துகினம். பத்தாததுக்கு கோயில் தீர்த்த மடத்திலையும், மகிழமரங்களுக்குக் கீழையும் கூட பொடியள் இருந்து படிக்குதுகள்".

இது எப்போதோ பத்திரிகையில் பார்த்த செய்தியும் கூட, இப்போதுதான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.

"பிரயாண அலுப்பு, நீயும் பஞ்சிப்படுகிறாய் போலை கிடக்கு. கொத்தானும் இண்டைக்குச் சுணங்கித்தான் வருவன் எண்டுட்டுப் போனவர். எனக்கும் ஏலாமல் கிடக்கு . . . அல்லாட்டி நானே பையப் பையப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் . . ." மிகவும் சங்கடப்பட்டு அக்கா விறாந்தையில் இருக்கின்றா.

அக்காவை உற்றுப் பார்க்கிறேன். "நாம் இருவர். நமக்கிருவர்". என வியாக்கியானம் சொல்லி வந்த அக்கா, இப்போ மீண்டும் தாய்மை யுற்றிப்பது எனக்கு வியப்பாக இருந்தது.

"எனக்கு இரண்டு பிள்ளைகளும் போதும் எண்டு சொல்லி மும்முரமா குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிச்சு வந்தாய் . . . இப்ப என்ன நடந்தது?" எனது மனதில் எழுந்த கேள்வியைக் கேட்கு முன்னதாகவே அக்கா சொல்கிறா . . . "இப்ப நாட்டிலை நடக்கிற முசுப்பாத்திகளைப் பார்க்கைக்குள்ளை குடும்பத்துக்கு இரண்டு பொடியங்களே போதாது போலக் கிடக்கு. அதனாலை இனிமேல் குடும்பக் கட்டுப்பாடுகளைத் தீவிரமாக ஆதரிக்க வேண்டியதிலை நியாயம் இல்லை. எவ்வளவுக் கெவ்வளவு குடும்பம் சடம்பமாயிருக்குதோ அவ்வளவுக்கவ்வளவு அது எங்கடை சந்ததிகளுக்கும் நல்லது". அக்காவின் கருத்து எனக்குப் புதிதாக இருந்தது. அது பிரச்சாரத்திற்குரியது போலவும் தெரிந்தது.

சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது.

"சுறுக்காப் போடா தம்பி. இன்னும் கொஞ்ச நேரத்திலை 'நேசறி' விட்டுடும். பொடியைக் கவனமாகக் கூட்டிக்கொண்டுவா. சரியான வெய்யிலாகவும் கிடக்கு. இணலான இடங்களாகப் பார்த்து வாருங்கோ". அக்காவின் அவசரமறிந்து இருக்கையை விட்டெழுந்து செல்கிறேன்.

பதினைந்து மாதங்களுக்குள் ஊர் மாறித்தான் போய் விட்டது. பாழடைந்து போயிருந்த பழைய வீடொன்று புதுப்பொலிவு பெற்று விளங்கியது. அந்த வீட்டினைச் சூழ மண்ணைப் பொட்டழிகளாக்கி மதில் போட்டிருந்தார்கள். உள்ளே சில புது முகங்கள். அந்த இளவட்டங்கள் என்னை வித்தியாசமாகப் பார்த்தார்கள். 'யார் இது பிறத்தியாள் போலக் கிடக்கு?' என்பதைப் போல.

அவ்வப்போது ஊர் வந்து செல்லும் நண்பர்கள் மூலம் இவை பற்றி நான் கேள்விப்பட்டாலும். இப்போதுதான் நேரில் தரிசிக்கிறேன்.

குச்சொழுங்கையால் மிதந்து இப்போ நான் பிள்ளையார் கோயில் வீதிக்கு வந்து விட்டேன். முச்சந்தி மதகிலிருந்த ஓர் கிழவி முகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடியிருந்த மூடலை எடுத்து விட்டு என்னைப் பார்த்தாள்.

"என்னணை பெத்தாத்தை. அப்பிடிப் பார்க்கிறியள்?" நான் தான் குரல் கொடுத்தேன்.

"ஆரது . . . கண் வலுவா மங்கிப் போனதிலை ஆளை மட்டுக் கட்டேலாமல் கிடக்கு".

"நான் தானணை".

என்னை உற்றுப் பார்த்த கிழவி, இனங்கண்ட பூரிப்பில் "எட எங்கடை கொத்திவளவில் உமையாத்தையின்ரை மூத்தவளின்ரை பொடியனே? அண்டைக்கு கொக்கை ராசேசு, கறி வேண்ட வந்த இடத்திலே சொன்ன வள் தம்பி வாற கிழமையளவிலே வாறானெண்டு. எப்பவடா மோனை வந்தனீ?"

"காத்தாலைதானணை".

"என்னடா மோனை கொய்யாவைப்போல வலுவாக் கொட்டுப்பட்டுப் போனாய்? ஆளும் கறுத்து, சரியான கேவலமா இருக்கிறாய்?"

"தெரியாதேயணை கண்காணாத இடத்திலையிருக்கிறது. கடைச் சாப்பாடு திங்கிறது".

"காலாகாலத்திலை ஒண்டைப் பார்த்து கொழுவிப் போட்டாயெண்டால் கொம்மாவை வருத்தம் பார்க்க போன இடத்திலை..... கொக்கை ராசேசுக்கும் அண்டைக்கு இதைப்பற்றி விளம்பரமாகச் சொன்னனான். ம் . . . . என்ரை பேரனும் இருந்திருந்தானெண்டால் . . . இவ்வளவுக்கு".

"ஓமணை பெத்தாத்தை நானும் கேள்விப்பட்டு வலுவாக் கவலைப்பட்டனான்".

"ஓ! அவனும் உன்னோட்டப் பொடியன்தானே? நாலு பெட்டை யளுக்குப் பிறகு அருமை பெருமையாய்ப் பிறந்து, முட்டுப்பட்டு வளர்ந்து, கடைசியிலை இப்படியா வாழ்மானம் வந்திட்டுது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னணை செய்யிறது. எங்கடை பொடியள் சிலருக்கு இது ஒரு நியதியாப் போச்சு".

"வெளிக்கிடவிடாமல் கடற்கரை காம்படியிலை காவலுக்கு நிண்டவன் மோனை. பின்னாலாலை வந்து வெடி வைச்சிருக்கிறாங்கள். பனையாலை விழுவாங்கள். பதறுவாங்கள். ஒரு ஈன இரக்கம் பார்க்கிறாங்களே? கடைசியிலை பொடியன்ரை பிரேதத்தைக் கூட ..... " கிழவியின் குரல் அடைத்து விட்டது.

"நெடுகவும் இப்பிடி அழிவு வருமெண்டில்லை. எதுக்கும் காலம் ஒரு நல்ல மறுமொழி சொல்லுமணை". தூரத்தே பல பாலகர்கள் மிக வேகமாக வருவது கண்டு என் மருமகனின் ஞாபகம் வந்தவனாக, கிழவியிடமிருந்து விடைபெற்று சாமியார் மடத்தை நோக்கிச் செல்கிறேன்.

கோவிலைத்தாண்டி மடத்தை அடைந்த போது அங்கு 'ரீச்சரும்' சில பாலகர்களும் மட்டுமே எஞ்சியிருந்தனர். என்னைக் கண்டதும் எனது மருமகன் "ரீச்சர் போட்டுவாறன்" என்று 'ரீச்சருக்கு' கையைக் காட்டிவிட்டு ஓடி வந்து என் கையைப் பற்றுகிறான்.

"மாமா எப்ப வந்தனீ?"

"காலமைதான் திரையன்"

"தம்பிக்கு என்ன கொணந்தனீ?"

"அப்பனுக்கு அப்பிள், ஜாம், கேக், மள்ளாக் கொட்டை சுவீற் எல்லாங் கொண்டு வந்தனான்'.

"வேறை . . . . ?"

"வேறை . . . . வேறை. . . தம்பி எழுதப் பேப்பர், பெஞ்சில், பேனை எல்லாங் கொணந்தனான்".

"அதை விட . . . ."

"அவ்வளவுதான் திரையனுக்கு. இனி அடுத்த முறை நீ கேக்கிற தெல்லாம் வாங்கி வருவன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ அடுத்த முறை வர நான் பெருத்திடுவன், என்ன மாமா?" எனக்குச் சிரிப்பாகி விட்டது. நான் அருமையாக ஊர் வருவது இந்தப் பிஞ்சு உள்ளத்துள் கூட எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

"ஓமப்பன். நான் அடுத்த முறைக்கு வர தம்பி பள்ளிக்குடத்திலை படிப்பான்" என்கிறேன் பதிலுக்கு நான்.

"அப்ப அது கொண்டு வருவியோ?"

"ஏது?"

"ஏகே போட்டி செவன்".

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒருவாறு சமாளித்தவனாக, "என்னத்துக்கு ராசா உனக்கு அது?" என்றேன்.

"அது எதுக்கெண்டு உனக்குத் தெரியாதே?"

"தெரியும் . . . . தெரியும் . . .

எப்படி, எதைச் சொல்லி இக்கதையை மாற்றலாம் என்று எண்ணிய வனாக, "அது சரி திரையனுக்கு இண்டைக்கு நேசறியிலே என்ன படிப்பிச்சவ ரீச்சர்?" என்று கேட்டேன்.

"குண்டு போடுகிற போது, 'ஷெல்' அடிக்கிற போது எப்பிடி நடக்க வேணுமெண்டு ரீச்சர் சொல்லித் தந்தவ".

"அதைவிட வேறை என்ன படிச்சனீங்கள்?" மருமகனின் கையி லிருந்த புத்தகப் பையையும், தண்ணீர்ப் போத்தலையும் வாங்கி என் தோளில் போட்டவாறே நான் கேட்டுக் கொண்டு நடந்தேன்.

"அதுகளைப் பற்றித் தான் இண்டைக்கு, வேறையும் நாலைஞ்சு அண்ணாமார் வந்து செய்து காட்டினவங்கள்".

கோயில் தேர்முட்டியை அண்மித்துக் கொண்டிருந்தோம். தூரத்தே அந்தியேட்டி மடத்தில் சில முதியவர்கள் ஏதோ விளையாட்டில் மூழ்கிப் போயிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமா அவை என்ன விளையாடியினம் தெரியுமோ?" என் கைகளை உலுப்பியவாறே மருமகன் கேட்டான்.

சற்றே உற்றுப் பார்த்து விட்டு, நான் சொல்கிறேன்...."நாயும் புலியும்."

மருமகனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. கைகளால் தன் வாயைப் பொத்தியவாறே அடக்கமுடியாத சிரிப்புடன் அவன் சொல்கிறான். "மாமா உனக்குச் சரியா மூளை கலங்கிப்போச்சு. அது 'ஆமியும், புலியும்' விளையாட்டு மாமா".

எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. யாரும் வருகிறார்களா என்று திரும்பிப் பார்க்கிறேன். நல்லவேளை எவருமே இல்லை. முருகனிடம் கைகட்டி பாடம் கேட்கும் சிவனின் சிற்பம், கோவில் ராஜகோபுரத்திலிருந்து கம்பீரமாக ..... என் கண்களில் திரையிட்டது.

தூரத்தே ..... தீர்த்த மடத்திலும், கோயிலைச் சுற்றிய மகிழ மரங்களுக்குக் கீழும் வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. ஆசன வசதிகள் இன்றி சிறுவர்கள் புற்றரையில் இருந்தவாறே பாடங்கள் பயின்று கொண்டிருந்தார்கள். இப்போ நாம் கோயிலைத் தாண்டி வீதிக்கு வந்துவிட்டோம்.

மருமகனைத் தமாஷ் படுத்த எண்ணியவனாக, "உனக்குத் தம்பியோ, தங்கச்சியோ பிறக்க வேணும்?" என்று கேட்கிறேன்.

"எனக்குத் தம்பிதான் மாமா வேணும்".

"என்னடா முந்தித் தங்கச்சி பெத்துத் தா எண்டு அம்மாவை உபத்திரப் படுத்துவாய். இப்ப தம்பிதான் வேணுமெண்டு நாண்டு கொண்டு நிக்கிறாய். ஏன் என்ன சங்கதி?"

"தம்பி எண்டால்தான் மாமா சண்டை போடுவான்".

இனி இவனுடன் பேச்சுப் பறைச்சல் வைத்துக் கொள்வதில்லை எனத் தீர்மானித்துக் கொண்டேன். அப்படி ஏதாவது கதைத்துக் கொண்டால் என் அறியாமையால் நான்தான் நாற வேண்டி நேரிடும் என்ற பயப் பிராந்தியே தவிர, எனது மௌனத்திற்கு வேறு காரணங்கள் ஏதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக இருந்த வானத்தில் திடீரென ஒரு விமானம், "தம்பி, அங்கை பாரடா ஏறோபிளேன்." பூரிப்புடன் வாயெல்லாம் பற்களாக நான் மருமகனுக்கு ஆகாயத்தைக் காட்டுகிறேன்.

"மொக்கு, அது பிளேன் இல்லை, 'பொம்மர்,' குண்டு எறிஞ்சு எங்களைப் பச்சடி போடப் போறாங்கள் மாமா. வா கெதியா வீட்டை ஓடுவம்". மருமகன் முன் சென்று என்னை இழுத்துச் செல்கிறான்.

பாடசாலைகள், கடைகள், வாசிகசாலை யாவும் அமைதியாகின்றன. நாமிருவரும் இப்போ கோயில் வீதியைக் கடந்து கந்தமுருகேசனார் சிலையையும் தாண்டி முச்சந்தி ஊடாகக் குச்சொழுங்கைக்குள் இறங்கி விட்டோம்.

ஒன்று இரண்டாகி இப்போ மூன்று 'பொம்மர்'கள் மிக அண்மையாக, நாலு பனை உயரத்தில் வானில் வட்டமிடுகின்றன. எனக்கு நடுக்கம் பிடிக்க ஆரம்பித்து விட்டது. "தம்பி, இப்ப என்னடா செய்யிறது?" நான் மருமகனை வினவுகிறேன்.

"மாமா, குண்டு போடத் தொடங்கப் போறாங்கள். இஞ்சை வா. . . . . ஓடிவா எனக்குப் பின்னாலை". அவன் முன்னே ஓடுகிறான். பின்னால் நான் செல்கிறேன்.

அப்போது எம்மை விலத்திப் பல இளைஞர்கள் கனத்த ஆயுதங் களுடன் கோயில் வீதிப் பக்கமாக ஓடுகிறார்கள். வரும்போது அந்தப் பழைய வீட்டில் நான் பார்த்த அதே புதுமுகங்கள். மிஞ்சி மிஞ்சிப் போனால் அவர்களுக்கு வயது இருபதுக்கு மேல் இருக்காது.

குச்சொழுங்கையில் உள்ள வீடொன்றின் பின் வளவால் மருமகன் என்னை அழைத்துச் செல்கிறான். வளவின் கோடிப்புறமாக ஒரு அகன்ற ஆழமான அகழி. அங்கே பெண்களும், பிள்ளைகளும், குழந்தைகளுமாகப் பலர். மருமகன் காட்டிய குழிக்குள் இறங்கி நாமும் பதுங்கிக் கொள்கிறோம். சூழ இருந்த சில பெண்பிள்ளைகள் என்னைப் பார்த்து ஏதோ முணு முணுக்கிறார்கள்.

'டும். . . டும்ம் . . . . 'வானைப் பிளக்கும் சத்தங்கள். "மாமா..... பொடியள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடத் தொடங்கி விட்டாங்கள், இனிப் பயப்பிடாதை, 'பொம்மர்' போய்விடும்." மருமகன் என் காதருகில் குசு குசுத்தான்.

இப்போதுதான் எனக்குத் தெம்பு வந்தது. எண்பத்திமூன்றின் ஆடிக் கலவரத்துக்குப் பின்பு இன்று தான் முதல் தடவையாக இப்படி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்திருக்கிறேன். ஆடிக் கலவரம் அந்நிய மண்ணில். ஆனால் . . . . இது? நாம் பிறந்த மண்ணில். எமது சொந்த மண்ணில். இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட. . . . .

"எழும்பு மாமா, 'பொம்மர்' போட்டுது, நாங்கள் இனிப் போவம். அம்மா பாவம் பயப்பிடப்போறா", மருமகன் ஏறி முன்னால் போக. நான் பின்னால் செல்கிறேன்.

உடுத்திருந்த அதே வீட்டுச் சேலையுடன் அக்கா எங்களை நோக்கி ஓடி வந்து கொண்டிருக்கிறா. அவவின் இடுப்பிலிருந்தவாறே இளையவன் பெருங்குரல் எழுப்புகிறான்.

"நான் பதறிப் போனன். என்ரை ரண்டு பிள்ளையளுக்கும் என்ன நடந்ததோ எண்டு. நான் சரியாப் பயந்து போனன்". இளைக்க இளைக்கத் திரையனின் முகத்தை தடவியவாறே அக்கா சொல்கிறா. சேலைத் தலைப் பால் எனது வியர்வையையும் துடைத்து விடுகிறா.

"மாமா வந்தது நல்லதாப் போச்சு, என்ன திரையன்?" திரையனை அணைத்தவாறே அக்கா கேட்டா.

"அக்கா, உண்மையிலை திரையன்தான் என்னைப் பவுத்திரமாக் கூட்டிக் கொண்டு வந்து உன்னட்டைச் சேர்த்திருக்கிறான். நான் வெறும் உருப்படிக்குப் போனனே தவிர, எனக்கு எல்லாம் சொல்லித் தந்தது, வழி காட்டினது உன்ரை மகன்தான், அக்கா. உண்மையிலை தம்பியட்டை யிருந்துதான் நான் அறிய வேண்டிய சங்கதிகள் நிறைய இருக்கு. இவ்வளவு காலமும் பயணம் வந்து போயிருக்கிறன். ஆனால். இந்தப் பயணம்தான் எனக்கு ஒரு புதிய படிப்பினையைத் தந்திருக்கு அக்கா".

அக்காவின் கண்களில் நீர் பனித்தது.

இப்போ நான் முன்னால் சென்று கொண்டிருக்கிறேன்.

-"மல்லிகை"

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986

பாரதி

"தொழிற்சாலை அலுவலர்களின் வேலை நேர முடிவினை உணர்த்தும் சங்கொலி கேட்டுக் கொண்டிருந்த போது பாதிப் பேருக்கு மேல் வாசல் 'கேற்'றைத் தாண்டி பஸ் தரிப்பிடத்தினை நோக்கி சாலை வழியே சென்று கொண்டிருந்தனர். இந்த வேகம் காலையில் வேலைக்கு வரும் போதே இவர்களுக்கு இருந்தால், அமெரிக்காவையோ, ஜப்பானை யோ இன்னமும் நாம் உதாரணம் காட்டிக் கொண்டிருக்கும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்காது என்று நினைத்தவனாக, வாசலில் இருந்த காவலாளர் காரியாலயத்தில் தனது இலாகாச் சாவியை ஒப்படைத்து விட்டு இவன் வீதிக்கு வருகிறான்.

கிழக்கு மேற்காக நீண்டு செல்லும் சாலையின் இரு பக்கமாகவும் தொழிலாளர் விரைந்து கொண்டிருந்தனர். வழமையாக மேற்குத் திசை நோக்கும் இவன், மாறாக, இன்று கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான். ஐந்து மணிக்கெல்லாம் சங்கொலியுடன் போட்டியிட்டு ஒரு பாட்டம் இறைக்கும் அந்தி மழை இன்று விடுமுறை பெற்றுக் கொண்டது, கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. ஆட்டோக்கள், கார்கள், பஸ்கள், லாறிகள் என இரைச்சல் சத்தத்தினால் தம்மை இனங்காட்டி வந்த வாகனங்கள் இவனை முந்தியும் நோக்கியும் சென்று கொண்டிருந்தன.

இரவிற்கு அறைக்குச் சென்று, அன்றாட அலுவல்களையெல்லாம் முடித்த பின்பாக அசோகமித்திரனையோ, வண்ண நிலவனையோ புரட்டுவது போக, இன்றைய முக்கிய வேலையாகச் செய்ய வேண்டியதாக, பல நாட்களாகவே திட்டமிட்டிருந்த பாரதி வீட்டு விஜயத்தினையே இப்போ இவன் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறான். இவன் தங்கும் அறையிலிருந்து பாரதி கணிசமானளவு தூரத்தே இருப்பதனால், சனி, ஞாயிறுகளில் அதனை வைத்துக் கொள்வதில் மேலதிகமாக ஐந்தோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தோ பஸ்ஸிற்கு விரையமாகுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே, தொழிற்சாலையிலிருந்து நடைதூரம் இருக்கும் இந்த விஜயத்தினை இன்று நிறைவேற்றுவதாகத் தீர்மானித்திருந்தான்.

பாரதி இப்போ வீட்டில் என்ன செய்து கொண்டிருப்பாள்? காரியாலயத்திலிருந்து திரும்பி வந்த கையோடு மாறனுக்கும் தேநீரைக் கொடுத்து விட்டுத் தானும் தேநீர் அருந்தியவாறு இன்றைய நிகழ்வுகளைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கலாம் அல்லது ஒரு பக்கமாக 'ரேப் ரெக் கோட்டரில்' ஏதாவது ஒரு இசைக் கச்சேரி போய்க் கொண்டிருக்க, மறுபக்கமாக அண்மையில் வெளியான ஒரு சிறுகதைத் தொகுப்பிலோ, நாவலிலோ மூழ்கிப்போய் இருக்கலாம். எந்த அலுவல்களையும் திட்டமிட்டுச் செய்வதும், தினமும் கொஞ்ச நேரமாவது வாசிப்பில் ஈடுபட்டு உண்மையான தேடலினை மேற்கொள்வதும் பாரதியின் பழக்கங்களில் போற்றத்தக்கது. அதுவே இவனுக்கும் அவள்பால் ஒரு ஈடுபாட்டினை ஏற்படுத்தியது!.

1984 தை மாதத்தில் ஒரு திங்கட்கிழமை. தொழிற்சாலையின் கணக்குப் பகுதியில் கணக்காளராக நியமனம் பெற்று பாரதி வந்த முதல் நாள் அது. தொழிலாளரது சம்பளத் திட்டம். தொழிலாளர் திறன் சம்பந்தமாக சில தரவுகளைப் பெறுவதற்காக தொழிற்சாலையின் தலைமை மேற்பார்வையாளன் என்ற முறையில் பாரதி இவனை அழைத்திருந்தாள். பரஸ்பர அறிமுகங்களின் பின் விடயங்களைப் பற்றி பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்த போது ஒவ்வொன்றையும் அவள் அணுகிய விதம் இவனை மிகவும் கவர்ந்திருந்தது. ஒரு அதிகாரி போலன்றி, விடயதானங்களை விரிவாக அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன், தக்க மரியாதையையும் இவனுக்குத் தந்து, அவள் தரவுகளைச் சேகரித்துக் கொண்ட முறைமை, ஆரம்பத்திலேயே இவனுக்குப் பாரதி மீது ஒரு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது.

வேலை விடயங்களுக்காக மட்டுமன்றி, தனிப்பட்ட நட்புரீதியிலும் சந்திப்புகள் தொடர்ந்தன. சில சமயங்களில் 'இன்டரர் கொம்' வழியாகவும் உரையாடல்கள் நிகழ்ந்தன. இருவருக்கு ஏதோ ஒரு விடயத்தில் அதிகளவில் ரசனை ஒத்துவரும் போது அவர்களில் ஒரு அந்நியோன்னியம் உருவாகுவது தவிர்க்க முடியாததுதான். அந்த வகையில் இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருக்கும் இலக்கியம் ஒரு சாதனமாக அமைந்திருந்தது. சதா நாட்டு நிகழ்வுகளையும், அரசியல் பிரச்சினைகளையும் அலசும் தொழிலாளர், இவனையும், பாரதியையும் அசாதாரணமானவர்களாக கணித்துக் கொள்ளு மளவிற்கு இலக்கியமே பேச்சாக இருவரும் ஓய்வு நேரங்களைக் கழித்தனர்.

பிரபஞ்சன், சுந்தர ராமசாமி, மௌனி, அம்பை என நிறையவே படித்திருந்தாள் பாரதி, தவிரவும் டானியல், ஜீவா, நந்தி, இளங்கீரன், சி.வி. எஸ். பொ, செ. கணேசலிங்கன், தெளிவத்தை ஜோசப், தெணியான், செங்கை ஆழியான், செ. யோகநாதன், நீர்வை பொன்னையன் என்று எல்லாமே அவளுக்கு அத்துப்படி. இதனால் அவளது இலக்கிய ரசனை இவனையும் விட விரிவடைந்திருந்தது. ஒரு தரமான விமர்சகராக நின்று பாரதி இவனது படைப்புகளையும் ஆராய்ச்சி செய்தாள். அபிப்பிராயங்கள் சொன்னாள்.

மார்கழி மாதத்து ஒரு ஞாயிறு விடுமுறை நாளின் மாலைப் பொழுது. இவன் தனது அறையிலிருந்த போது அண்மைக் கால நூல்கள் சிலவற்றினைப் பெற்றுக் கொள்வதற்காக இவனது 'அட்றஸ்' தேடியே பாரதி வந்து சேர்ந்திருந்தாள்.

பாரதியின் எதிர்பாராத வரவினால், உண்மையில் குழம்பிப் போய்விட்டது இவனது 'றூம் மேற்' ரஞ்சித்தான். வந்தவளை அமரவைத்து சிறிது நேரம் உரையாடிவிட்டு, சண்முகன், சட்டநாதன், சதாசிவம், சாந்தன், சுதாராஜ், மண்டூர் அசோகா, தாமரைச் செல்வி, கோகிலா மகேந்திரன் என இவன் வைத்திருந்த எல்லாவற்றையுமே கொடுத்து, அழைத்துச் சென்று பஸ் ஏற்றிவிட்டு வந்த போது, இவனைப் பார்த்து ரஞ்சித் சொன்னான். "மச்சான், உன்ரை ஊர் 'அட்றஸ்' ஒருக்கா எனக்குத் தேவை."

"எதுக்கு?" 'சேட்டை' கழற்றி கதவில் கொழுவியவாறே, இவன் கேட்டான்.

"இல்லை உன்ரை வீட்டுக்காரருக்கு ஒரு கடிதம் போடவேண்டி யிருக்கு. . . . அதுதான்".

"விடமாட்டியளே. . . ! ஒரு பெண் பிரசுகளோடை கதைக்கப், பழக விடமாட்டியளே".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாராளமாகக் கதைக்கலாம், பழகலாம் மச்சான். எதுக்கும் 'லிமிற்' எண்டு ஒண்டு இருக்குத்தானே? இப்பிடி வீடு தேடி வந்து வழியிற அளவுக்கு நீ வைச்சிருக்கக் கூடாது".

"அவ இப்ப வந்தது எதுக்கு எண்டு உனக்குத் தெரியும் தானே? அதுவுமல்லாமல் அவ என்னையும் விட மூண்டோ, நாலு வயதுக்கு மூத்தவ".

"தங்களை 'மெயின்ரெயின்' பண்ணிக் கொள்ளுறதுக்காக சில பெட்டையள், வயது குறைஞ்ச பொடியங்களிலை தான் 'இன்ரறஸ்ராக' இருப்பாகளவையாம்".

"உனக்கு அக்கா, தங்கைச்சி இல்லை எண்டது எனக்குத் தெரியும் மச்சான். அதை அடிக்கடி ஏன் எனக்கு உணர்த்திக் காட்டுறாய்?"

இந்த ரகமாக இருவரது கதைகளும் உச்சத்திற்குப் போய், காது என்று ஒன்றிருந்தால், அகராதி கூடக் கிடந்து முழிக்கும் மொழிகளின் துணையு டன், இறுதியில் அன்றைய பட்டிமன்றம் வெற்றி, தோல்வியின்றி நிறைவு பெற்றது.

அநேகமாக இப்போ இவன் பாதி வழி கடந்திருப்பான். சந்திக்கு வந்து விட்டதற்குச் சான்றாக ஒரு மூலையில் பொதுசன மலசலகூடம் கிடந்து நாறியது. வேகமாக அவ்விடத்தைக் கடந்து, முன்னே வழியை இடைமறித்திருந்த படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருந்தான்.

1985 ஆனி மாதத்தில் ஒரு வியாழன் மத்தியானப் பொழுது சாப்பாட்டுக்குப் பின்னதாக இவன் தொழிற்சாலை சாப்பாட்டறைக் கதிரையில் மூட்டைப் பூச்சிகளுக்கு இரத்ததானம் செய்து கொண்டிருந்த போது, அவசர அவசரமாக வந்த பாரதி, இவனருகே அமர்ந்து ஏதோ சொல்லத் தயங்கிக் கொண்டிருந்தாள்.

"இது என்னுடைய பேசனல் மற்றர்" என்று ஆரம்பித்து இறுதியில் "இதுக்கு உங்களின்ரை அபிப்பிராயம் என்ன?" எனக் கேட்டாள்.

"எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேணும் பாரதி" எனக் கூறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன், தனது இலாகா சென்று ஆற, அமர இருந்து யோசித்துப் பார்த்தான்.

பாரதியோ 'குவாலிபைட் எக்கவுண்டன்.' ஆனால் அவனைக் காதலிக்கிற, கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிற மாறனோ ஒரு சாதாரண 'சுப்பவைசர்'. இந்த ஏற்றத்தாழ்வு கல்யாணமான புதிதில், ஆரம்ப காலங்களில் ஒரு பொருட்டாகத் தெரியாவிட்டாலும், காலப்போக்கில் உளக்குமுறல்களை ஏற்படுத்தாதா? இப்படியான ஒரு வேறுபட்ட அமைப் பில் கூட வெற்றிகரமாக வாழும் பலரது பெயர்கள் பட்டியலாக இவன் முன் நீண்டு வந்தது. அந்த ரீதியில் இங்கும் ஒரு நல்ல வாழ்வினை அமைத்துக் கொள்ள பாரதியின் ஆளுமையால் முடியும் என்ற நம்பிக் கையே, முடிவில் இவனுள் மேலிட்டது.

மேலும் இதுபற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாது, வழிந்து கொண்டி ருந்த தேநீர் குவளையினை 'பியூன்' கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன கொஞ்ச நேரத்தில் 'இன்ர்காம் ரிசீவரை' இவன் எடுத்தான்.

"ஹலோ"

"யேஸ். பாரதி ஹியர். என்ன முடிவுக்கு வந்திருக்கிறீங்க வேலோன்?"

"நீங்களே முடிவாச் சொன்ன பிறகு, இதிலை நான் சொல்ல என்ன இருக்குப் பாரதி? 'பட் வண் திங்' வசதியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுறதுக்கு எவ்வளவோ 'சாண்ஸ்' இருந்தும் நீங்கள் இப்படியான ஒரு விஷப் பரீட்சையிலை இறங்கிக் கொள்ளுறது தான் எனக்கு வியப்பாக இருக்கு".

"அதைப் பற்றிய அபிப்பிராயத்தைத்தான் நான் உங்களைக் கேட்டி ருந்தன். எனக்குத் தேவையானதெல்லாம் சுதந்திரமான வாழ்வு. என்னு டைய இலட்சியங்களிலையோ, இலக்குகளிலையோ தலையிடாத ஒரு கணவன். எத்தனையோ பேர் கல்யாணத்துக்கு முன்னாலை பெண் சுதந்திரம், சம உரிமை, பெண்விடுதலை எண்டெல்லாம் வாய்கிழியப் பேசிப்போட்டு, கழுத்திலை தாலியேறினவுடனை பெண்ணுக்கென்ற ஒரு அளவிலை, ஒரு வட்டத்துக்குள்ளையே வாழ்ந்து கொண்டிருக்கினம். அதைத் தான் நான் வெறுக்கிறன். என்னுடைய ரசனையிலை, கொள்கை யிலை, எந்த விதத்திலையும் தலையிடாது, பாரதியைப் பாரதியாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ வைக்கிற ஒரு கணவனைத்தான் நான் விரும்புகிறன். அந்த வகையிலே, மாறன் என்னோடை கடைசி வரை 'கோப்பறேற்' பண்ணுவார் எண்டே நான் நினைக்கிறன்".

"அதாவது, மகாகவி பாரதியாரின்ரை கனவை நனவாக்கப் போறீங்க பாரதி".

"ஒவ் கோஸ். மற்றது இன்னொரு விசயம். ஆண்டாண்டு காலமா, பெண்கள் தான் விட்டுக் கொடுத்து வாழ வேணுமெண்டு நியதியில்லை. அப்படி வாழ ஆண்களும் பழகிக் கொள்ள வேணும். ஒவ்வொரு குடும்பத்திலையுமே இது ஒரு நடைமுறையாக மாறவேணும். இது தான் என்னுடைய பொலிசி".

"பாரதிப் பெண் போல் பலரும் பாரினில் புகழ் கொண்டாலும், 'றியலி' பாரதிப் பெண்ணுக்கு ஒரு வரைவிலக்கணமாக வாழ்ந்து காட்டப்போறது நீங்கள்தான் பாரதி. 'அட்வான்ஸ்' ஆகவே, எனது பாராட்டுக்கள்" என்றவாறே 'லயினைக் கட்' பண்ணி விட்டான் இவன்.

அன்றிரவு அறைக்குச் சென்றதும் ரஞ்சித்திடம் இது பற்றி இவனாகவே கதை எடுத்தான். சகலதையும் சுவரில் தொங்கிய சுகாசினியின் படத்தைப் பார்த்தவாறே கேட்டுக் கொண்டிருந்து விட்டு முடிவில் ரஞ்சித் எம். ஆர். ராதாவின் குரலில் சொன்னான். "பஸ் மிஸ்ஸிங்".

"மச்சான், 'அட்வான்ஸ் லெவல் பாஸ்' பண்ணிப்போட்டு 'வாசிற்றி' கிடைக்கும் எண்ட நம்பிக்கையிலை நான் ஊரிலை நிண்ட போது, கொஞ்ச நாள் கராட்டி பழகிறதுக்கு குட்டி மாஸ்ரரிட்டைப் போட்டு வந்தனான். . . தெரியுமோ?" என்று இவன் கேட்டுத் திரும்பிய போது, ரஞ்சித்தின் கட்டிலில் மூன்று நான்கு நுளம்புகள் மட்டும் பறந்து கொண்டிருந்தன. அதே சமயம் 'பாத் ரூமிற்குள்' ஏதோ 'கடபுடா' சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

இப்போதும் ஏதோ ஆரவாரச் சத்தம் கேட்டு இவன் நினைவு திரும்புகிறது. அருகே உள்ள விளையாட்டு மைதானத்தில் சிறுவர் சிலர் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ஒரு நோஞ்சான் பையன் 'சிக்சர்', 'போர்' என விளாசி ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986 தை மாதத்தில் ஒரு விடுமுறை நாள். பாரதி-மாறன் திருமணம், திருமணப்பதிவு காரியாலயத்தில் மிக எளிதாக நடைபெற்றது. தொழிற் சாலையிலிருந்து இவன் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தான். வேறும் ஒரு சில வெளியிடத்து நண்பர்களும் வந்திருந்தார்கள்.

திருமணம் முடிந்து கொஞ்ச நாட்களில் பாரதி தொழிற்சாலையை விட்டு விலகி, வேறொரு நிறுவனத்தில் சேர்ந்து கொண்டாள். தம்பதிகளாக ஒரே இடத்தில் தொழில் புரிவதைத் தவிர்த்துக்கொள்ளவே இந்த நட வடிக்கையாம். தொழிற்சாலையை விட்டுச் சென்றாலும், ஆரம்ப நாட்களில் தொலைபேசி மூலமாக இவனுடன் தொடர்பு கொள்ள பாரதி தவறுவதில்லை. கதைகள் பற்றிய விமர்சனங்களுடன் ஒரு சில கடிதங்களும் வந்ததாக இவனுக்கு ஞாபகம்.

சில நாட்களின் பின் மாறனுக்கும் வேறெங்கோ தொழில் வாய்ப்புக் கிடைக்கவே, அவனும் தொழிற்சாலையிலிருந்து விலகிக் கொண்டான். அன்று ஒரு முப்பதாம் திகதி. தொழிற்சாலையில் தனது இறுதி நாள் என்று இவனையும், கூடப் பணிபுரிந்த தனது நண்பர்களான இஸ்மைல், லயனல், லியனகே மூவரையும் அழைத்துத் தனது வீட்டில் ஒரு விருந்து வைத்தான் மாறன். உபசாரங்களில் மூழ்கிப் போயிருந்த பாரதியுடன் அன்று இவனால் அவ்வளவுக்குக் கதைக்க முடியாது போய்விட்டது.

கடந்த சில நாட்களாக தனது காரியாலய தொலைபேசி 'அவுட் ஓவ் ஓடர்' ஆக இருப்பதாகச் சொல்லி, இதனால் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை எனப் பாரதி இவனுக்கு ஒரு கடிதம் போட்டிருந் தாள். அந்தக் கடிதம் கூட வந்து இன்று மூன்றோ நான்கு மாதங்களுக்கு மேல் இருக்கும்.

அண்மைக் காலங்களாகத் தொடராகப் பத்திரிகையில் வெளிவந்து பெரிதும் 'பரபரப்பை' ஏற்படுத்திய இவனது குறுநாவல் பற்றிய எந்தவித அபிப்பிராயமும் பாரதியிடமிருந்து இன்று வரை வராதது பெரும் ஏமாற்றத் தை இவனுக்கு ஏற்படுத்தி விடவே, எப்படியாவது அவளை நேரில் சந்திக்க வேண்டும் என்ற அவா இவனுள் ஏற்பட்டது. அதன் பிரகாரமே இன்று பாரதி வீட்டுக்குச் செல்வதாக இவன் தீர்மானித்திருந்தான்.

பாரதியின் வீட்டுக்குப் போவதான தனது முடிவை இன்று காலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் ரஞ்சித்திற்கு சொன்னபோது பதிலுக்கு அவன் சொன்னது, இப்போ இவனுள் ஒலித்துக் கொண்டது. "பாரதியின்ரை 'ரெலிபோன்' மட்டுமல்ல, ஆளே இப்ப 'அவுட் ஒவ் ஓடர்' தான் எண்டு நாள் நினைக்கிறன். இதுக் குள்ளை நீ அங்கை இப்ப போய் வர வேணுமெண்டு அங்கலாய்க்கிறது, எனக்கெண்டால் அவ்வளவு நல்லதாகப் படேலை. கடவுளேயெண்டு உன்ரை முகரையிலை லட்சணமா, உருப்படியா இருக்கிறது மூக்கு ஒண்டு மட்டும் தான் வேலோன், வீணா அதையும் அங்கை போய் உடைச்சுக் கொண்டு வராதை. நீ ஒரு எழுத்தாளன். உனக்கெல்லாம் 'அட்வைஸ்' பண்ண வேண்டிய அவசியம் எனக்கில்லை. ஏதோ நீ இனி யோசிச்சுச் செய்".

மைதானத்தைக் கடந்து குச்சொழுங்கைக்கு வந்தவனை முகப்பில் ஒரு பெட்டிக் கடை வரவேற்குமாப் போல் அமைந்திருந்தது. அதனையும் கடந்து வீட்டு இலக்கங்களை எண்ணியவாறே முன்னேறிக் கொண்டிருந் தான். முன்னர் ஒரு தடவை வந்திருந்ததாலும், வீட்டு இலக்கம் ஞாபகத்தில் இருந்ததாலும், இடத்தைக் கண்டு பிடிப்பதில் சிரமமேதும் இருக்கவில்லை, வீதியால் இறங்கி, வீட்டுக் கதவோரம் சென்று ஓரிரு தடவைகள் தட்டினான்.

"செண்பகமே. . . . . செண்பகமே" என தனக்கும் தமிழில் பாடத் தெரியும் என்பதைப் பாரதி வீட்டு வானொலியில் ஆஷா போஸ்லி நிரூ பித்துக் கொண்டிருந்தாள்.

பாடல் சத்தம் தேய, இப்பொ யன்னலருகே "யேஸ்" என்ற குரலோடு ஒரு பருவக்குமரி பளிச்சிட்டாள். தான் தட்டிய கதவு சரிதானா என இவன் மீண்டும் ஒரு தடவை பார்த்தான். தலைகீழாகத்தான் என்றாலும் இலக்கம் சரியாகத்தான் இருந்தது. "ஐ வோன் ரு சீ மிஸிஸ் மாறன்" என்றான், குழம்பிப் போயிருந்த தன் தலைமயிரை கையால் கோதி விட்டவாறே.

அந்தப் பெண் கதவைத் திறந்து இவனை 'ஹோலிற்குள்' வரவழைத்து, "ரேக் யுவர் சீற் ஹியர், சீ வில் கம்" என்று சொல்லியவாறே; "பாரதி ஏ விசிற்றர் போர் யூ" எனச் சற்று உரக்கக் கூறிவிட்டு, முன்னறைக்குள் மறைந்து கொண்டாள்.

இந்தச் சிட்டு 'அட்வடைசிங் ஏஜன்சி' அல்லது வேறெங்காவது ஒரு நல்ல 'பேமில்' வேலை செய்பவளாக இருக்கலாம் என்று எண்ணியவாறே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வசதிக்காக முன்னறையை நோக்கியவாறே மூலையில் கிடந்த ஒரு கதிரையில் இவன் அமர்ந்து கொண்டான். ஆஷாவின் குரல் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. "செண்பகமே. . . . செண்பகமே." இவனது காற்சட்டைப் பொக்கெட்டிற்குள் இருந்த சீப்பு ஒரு தடவை வந்து தலையில் அமர்ந்துவிட்டு மீண்டும் மறைந்து கொண்டது.

"எட வேலோனே? 'விசிற்றர்' எண்டதும் இவரோடை 'பிறண்ட்ஸ்' ஆரோ ஆக்குமெண்டு நான் நினைச்சன். என்ன கனகாலத்துக்குப் பிறகு இந்தப் பக்கம்?" என்ற குரல் கேட்டு இவன் நிமிர்ந்தான்.

பாரதி முன்னால் நின்றாள். இவனால் அவளை மட்டுப்படுத்தவே முடியவில்லை. இந்தக் குறுகிய காலத்துள் என்னவாக மாறிவிட்டாள்? சற்றுத் தடித்து, முகமெல்லாம் பூரித்து கொஞ்சம் நிறம் மாறி . . . .

"என்ன நான் கேக்கிறன், நீங்கள் பேசாமல் இருக்கிறியள்" என்றவாறே எதிரில் இருந்த கதிரையில் வந்து அமர்ந்தாள் பாரதி.

"இல்லைத் தெரியாதே. . . . நாட்டு நிலவரங்கள் அதுகள், இதுகளாலை 'விசிற்றிங்' எண்டு நான் இப்ப அவ்வளவா ஒரு இடமும் வெளிக்கிடுகிற தில்லை. அது சரி எங்கை மாறன் அண்ணாவைக் காணேலை?"

"அவரென்னும் வரேலை. இன்னும் கொஞ்ச நேரத்திலை வந்திடுவார். முந்தி, ஒண்டாத்தான் வாறனாங்கள். இப்ப எனக்கு 'ஒவ்வீசிலை' வேய்கிள் புரவைட் பண்ணுறதாலை நான் கொஞ்சம் நேரத்தோடை வந்திடுவன்".

பாடல்கள் முடிந்து வானொலியில் செய்தி அறிக்கை ஆரம்பமாகிக் கொண்டிருந்தது.

"உங்கடை 'ஒவிஸ் ரெலிபோன்' இன்னமும் 'அவுட் ஒவ் ஓடர்' தானோ?"

"ம்! என்னுடைய டிறெக்ட் லைன்' அடிக்கடி 'அவுட் ஒவ் ஓடரா' கீடுது".

"இல்லை, என்ரை குறுநாவல் ஒன்று தொடரா வந்திருந்தது. அதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய விமர்சனம் ஒண்டும் நீங்கள் எனக்குச் சொல்லேல்லை. அது தான் கேட்டனான்".

இவன் சொல்லியும் பாரதி எதுவுமே பேசாதிருந்ததால், தான் சொன்னது அவளுக்குக் கேட்கவில்லையோ என்று நினைத்தவனாக, மறுபடியும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தான்.

"இப்ப கொஞ்ச நாளா இவர் 'ஐலண்ட் பேப்பர்' தான் எடுத்துக் கொண்டு வாறார். அதனாலை தமிழ்ப் பத்திரிகைகள் எதுவுமே எனக்கு வாசிக்கக் கிடைக்கிறதில்லை. சீ, நான் 'மிஸ்' பண்ணிட்டனே? எப்பிடி நல்லாச் செய்திருந்தியளோ?" தலைகுனிந்து இருந்தவாறே பாரதி கேட்டாள்.

"கதை தன்னுடைய மனதைத் தொட்டதாக தெணியான் விமர்சனம் எழுதியிருந்தார். கவனிப்பைப் பெறவேண்டிய எழுத்தாளர்களுள் இவரும் ஒருவர் எண்ட மாதிரி, தெளிவத்தை ஜோசப் சொல்லியிருந்தார்".

"முன்னோடி எழுத்தாளர்கள் குறிப்பிட்டுச் சொல்லுற அளவுக்கு கதை இருந்திருக்கு எண்டால் அப்ப அது ஒரு வெற்றிப் படைப்பாகத்தான் இருந்திருக்கும். 'கட்டிங்ஸ்' இருந்தால் தாருங்கோவன். நானும் ஒருக்கால் வாசிச்சுப் பாப்பம்".

"றூமிலை இருக்கு. வேணுமெண்டால் கொண்டுவந்து தாறன்".

"முந்தின மாதிரி இல்லை. உண்மையிலை இப்ப. . . . இப்ப நான் வாசிக்கிறதே வலு குறைவு. 'வேக்காலை' வந்து, பிறகு வீட்டு வேலைகள் எண்டு எங்கை நேரம் கிடைக்குது? 'வீக் எண்ட்ஸ்' வந்தால் 'விசிற்றிங்' அது, இது எண்டு இவர் எங்கையாவது இழுத்துக் கொண்டு போயிடுவார். தனிய வெளிக்கிட்டுப் பத்திரிகைகள், புத்தகங்கள் எண்டு ஒண்டுமே வாங்க முடியிறதில்லை. அவ்வளவு பிஸி. இன் பைக்ற். . . . . பழைய பாரதியாக இப்ப நான் இல்லை".

"கனத்தை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். மீண்டும் ஒரு தடவை அறியத் தருகிறேன்!" என வானொலியில் மரண அறிவித்தல் போய்க் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் தான் சொன்னது இவனுக்குக் கேட்டிருக்குமோ என்ன வோ என்ற ஒரு சந்தேகத்தில் பாரதி மறுபடியும் சொன்னாள் "இன் பைக்ற் பழைய பாரதியாக இப்ப நான் இல்லை. ஓரே பிஸி".

அப்போ கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே பாரதிதான் மெல்ல எழுந்து சென்று கதவைத் திறந்து விட்டாள். மாறன் வந்து நின்றான். "இங்கை பாருங்களண் ஆர் எண்டு". இவனைக் காட்டியவாறே பாரதி கணவனைப் பார்த்தாள்.

மாறன் இவனை நோக்கினான். பின் "ஹலோ மிஸ்டர் வேலோன், ஹௌவ் ஆர் யு?" என்றவாறே சிரித்தான். சிரிப்பில் ஒரு வரட்சி தெரிந்தது.

இவனும் பதிலுக்கு "எப்படி" என்று கேட்டுக் கொண்டே வகுப்பில் வாத்தியார் நுழையும் போது மாணவர் எழுந்து பின் அமரும் பாணியில் ஒரு முறை செய்து கொண்டான். எதிரே மாறனும், அவனருகில் பாரதியுமாக அமர்ந்து கொண்டனர்.

"இங்கை, வர்ற 'சண்டே' ஒருக்கா இவருடைய 'ரூமுக்குப்' போவ மே?" பிடரி மயிரை விரலால் வருடியவாறே பாரதி ஒரு பக்கமாக மாற னைப் பார்த்தாள்.

"ஏன் ஏதேனும் விஷேசமோ?" 'சேட்' மேல் பொத்தானைக் கழற்றி விட்டு, கதிரையில் சாய்ந்தவாறே, மாறன் பார்வையை பாரதி பக்கமாகத் திருப்பினான்.

"இல்லையப்பா. இவருடைய 'ஸ்ரோறி' ஒண்டு இருக்காம். அதை ஒருக்கா வாங்கி வர வேணும்".

"எட அதுக்கே? நான் நினைச்சன் ஆளுக்கு 'வெடிங்கோ', ஏதோ வாக்கு மெண்டு. ம்! 'சண்டே' தானே, பாப்பம்". தான் கொண்டு வந்த தோல்ப்பையினை பாரதியிடம் கொடுத்தவாறே, மாறன் இவனைப் பார்த் தான்.

"ரண்டு பேரும் கதைச்சுக் கொண்டிருங்கோ. நான் ஒருக்கா உள்ளை போயிட்டு வாறன்" என்றவாறே கணவன் கொடுத்த பையினைப் பத்திர மாக எடுத்துக் கொண்டு பாரதி உள்ளே சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்மைல், லயனல், லியனகே போன்ற தொழிற்சாலையின் சக சுப்பவைசர்கள், நிலவரங்கள் பற்றிக் கேட்டறிந்து கொள்வதில் மாறன் ஆர்வங் காட்டிக் கொண்டிருந்தான்.

லியனகேக்கு பேபி கிடைத்தது, இஸ்மைலின் சம்சாரம் மவுத்தாகிப் போனது, ஜி.எம். மோடு கொழுவுப்பட்டதாலை, 'மனேஜ்மன்ற்' லயனலை வேலையிலிருந்து 'சஸ்பென்ட்' பண்ணியது உட்பட, சகல செய்திகளையும் இவன் சொல்லிக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் "யஸ்ட் எ மினிட்" என்றவாறே மாறனும் உள்நோக்கிச் சென்றான்.

இப்போது இவனது பார்வை முன்னறைப் பக்கமாகத் திரும்பியது. கதவில் 'கேர்ட்டின்' ஓர் நிலையில் நில்லாது, முன் பின்னாக ஆடிக் கொண்டிருந்தது. "செண்பகமே . . . . செண்பகமே" பாடல் மீண்டும் ஒரு முறை இவனுள் ஒலிப்பதைப் போல் உணர்வு! அப்போ கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே, கேர்ட்டின் துணியை விலக்கியவாறே ஓடிவந்த அந்த யுவதி கதவைத் திறந்து விட்டாள். வந்தவன் 'ரெடிமேட் சேட்' விளம்பர 'மொடலி'ற்கு உகந்தவனாயிருந்தான். ஒரு புன்சிரிப்புடன் அவளிடம், தான் காவி வந்த பையினைக் கொடுத்துவிட்டு, வாசல் கதவை மீண்டும் தாளிட்டுக் கொண்டான். இருவருமாக முன்னறைக்குள் நுழைந்து கொண்டனர். அறையினுள் நுழைந்ததும் அவன் கதவை அடித்துச் சாத்தினான். கதவு இடைவெளிக்குள் கேட்டின் துணி அகப்பட்டு கசங்கியபடி தொங்கிக் கொண்டிருந்தது.

"வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா" என்று உள்ளிருந்த வானொலியில் பெங்களூர் ரமணியம்மாளின் பக்திப் பாடல் ஒன்று மிக சத்தமாக ஒலித்துக் கொண்டிருந்தது. இப்போது இவனுக்கு இடம் மாறியிருக்க வேண்டும் போல ஒரு உணர்வு. அதே சமயம் தட்டில் தேநீருடன் பாரதி உள்ளறையிலிருந்து வந்து கொண்டிருந்தாள். தொடாந்து மாறனும் வந்து அமர்ந்து கொண்டான்.

வழமையாக மாறனின் முகத்தில் தெரியும் வெளிச்சம் இன்று இல்லாததைப் போல இவனுக்குத் தென்பட்டது. 'ஆண்டாண்டு காலமாக நான் பாவிப்பது பனடோல்' என்ற விளம்பரப் 'போஸ்ரறில்' உள்ளவனைப் போல் காணப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ பாரதி தனது காரியாலய நடப்புகள் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். தனக்குக் கீழ் வேலை செய்யும் உதவியாளர்கள் யாழ்ப்பாணம் போனால் வேளை காலையுடன் திரும்பி வராது விடுவதனால் வேலைகள் எல்லாம் 'அரியேஸ்' ஆகி விடுவதாக, அவள் குறைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

வானொலியில் நிலைய வித்வான்கள் வயலின் வாசித்துக் கொண்டி ருந்தார்கள்.

மாறன் இன்னமும் வெளியில் எங்கோ வெறித்துப் பார்த்த படியே இருந்தான். உரையாடலில் பங்குபற்றுவதற்கான அறிகுறிகள் அவனில் தென்படுவதாக இல்லை. ஏழு மணியை அறிவிக்க வானொலி விட்டு விட்டு கூவிக்கொண்டிருந்தது.

"அப்ப நான் வரப் போறன்". எழுந்தவாறே இவன் கூறுகிறான்.

"பை த பை. . . வாற சண்டே இவருக்கு வேறை ஏதோ 'புறொகிறாம்' இருக்காம். அதனாலை நாங்கள் உங்களட்டை வர வசதிப்படாது எண்டு நினைக்கிறம். அடுத்தடுத்த கிழமைகளிலை ஒரு நாளைக்கு வர 'றை' பண்ணுறம்", எனக் கூறியவாறே பாரதி எழுந்து நின்றாள்.

"தற்ஸ் ஓகே". வழிந்து கொண்டிருந்த வியர்வையை கைக்குட்டையால் இவன் துடைத்துக் கொண்டான்.

"ஒருக்கால் வேலோனை சந்தியிலை கொண்டுபோய் விட்டுட்டு வாங்களன்." புருஷனைப் பார்த்து பாரதி சொல்கிறாள்.

"பரவாயில்லை, வந்து வந்து இப்ப எனக்கு இடம் நல்லாப் பிடி பட்டுட்டுதுதானே. . . . ஐ கான் மனேஜ்" என்றவாறே இவன் வீதிக்கு வருகிறான். "குட் பாய்". மூன்று குரல்கள் ஒலித்தன. மூன்றாவது குரல் சற்று உறுதியானதாக வெளிவந்தது.

குச்சொழுங்கையால் மிதந்து வேகமாகவே மைதான முன்றலுக்கு வந்து விட்டான். சன சந்தடியின்றி விளையாட்டு மைதானம் வெறிச்சோடிப் போய்க் கிடந்தது. விரைவாகக் கால்களை வைத்து முன்னேறிக் கொண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தான். வழியை இடைமறிக்குமாப் போல் முன்னே பத்துப் பதினைந்து படிக்கட்டுக்கள் மேலே உயர்ந்து சென்று கொண்டிருந்தன.

படிகளில் ஏறும்போது இவன் எண்ணிக் கொண்டான். 'இனி என் மூக்கைப் பற்றிக் கவலைப்படும் அவசியம் ஏதும் ரஞ்சித்திற்கு இருக்காது.' இறுதிப்படி கால்களில் தட்டுப்பட்டது. ஒருமுறை வந்த வழியைத் திரும்பிப் பார்த்தான். அந்த மைதானம், குச்சொழுங்கை எதையுமே இனங்காண முடியாதவாறு சகலதுமே இருளில் மூழ்கிப் போய்க் கிடந்தது.

-"மல்லிகை"

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987

தப்புக் கணக்கு

இன்று எப்படியும் நான் அவளிற்கு கூற நினைத்ததைக் கூறி விடவே வேண்டும்.

மேசை லாச்சிகளைத் திறந்து காசுப்புத்தகம், பேரேடு மற்றும் 'பைல்' களை எடுத்து மேசையில் அடுக்குகிறேன். 'பென்சில்', 'பேனா', 'கல்குலேட்டர்', 'கோலிங் பெல்' என ஒவ்வொன்றாகப் பரப்புகிறேன். நேரம் ஒன்பது என்பதற்கு அறிகுறியாக அடுத்த தெரு 'பிளாஸ்டிக் கம்பனி' சங்கு ஒலித்தோய்கிறது. வழமையில் இந்நேரமெல்லாம் வந்து 'குட்மோ ணிங்' சொல்லிவிட்டு 'பாத் ரூம்' பக்கம் சென்று விடும் அவளை இன்று மட்டும் இன்னமும் காணோமே?

நான் பணிபுரியும் இந்த ஸ்தாபனம் அப்படி ஒன்றும் பெரிதானதல்ல. எங்கள் 'பொஸ்', சகலதுக்கும் பொறுப்பாக நான், எனக்கு உதவியாளராக 'புக்கீப்பரான' அவள், இன்னும் ஒரு 'டைப்பிஸ்ட் கிளார்க்'. அவளது பெயர் கௌசிகாவோ அல்லது கௌரிகாவோ என்பதில் எனக்குப் பலத்த சந்தேகம் இருப்பதால் பொதுவாக 'மிஸ்' என்றே அழைத்து வருகிறேன். மற்றும் உள், வெளி வேலைகளைக் கவனிக்க செந்தில், உபாலி என இரு ஆபிஸ் பையன்கள். மொத்தம் ஐவருக்கும் மாதச் சம்பளமாக முப்ப தாந் திகதியோ, முப்பத்தோராம் திகதியோ 'பொஸ்' பதினையாயிரம் ரூபா காசோலையில் கையெழுத்திட்டு என்னிடம் தருமளவிற்கு..... இவ்வளவுக் குள் தான் எங்கள் வட்டம்.

இந்த 'ரேடிங் கம்பனி'யின் காரியாலயத்திற்கு நான் பணிபுரிய வந்தது ஒரு இருபத்தைந்தாம் திகதி என்பது மட்டும் எனக்கு நல்ல ஞாபகம். ஆனால், அது மாசியிலா, பங்குனியிலா என்பது அவளைக் கேட்டுத்தான் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் இப்போப்பட்ட விவகாரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உட்பட சகல விடயங்களிலும் சிறந்த ஞாபகசக்தி அவளிற்கே உண்டு. நான் பதவிக்கு வந்த முதல் நாள் நிகழ்ச்சி மட்டும் எனக்கு நல்ல ஞாபகமாக இருக்கிறது. என்னை தன் முன்னாலிருத்தி விட்டு 'பொஸ்' தனதறைக்கு இந்த நால்வரையும் அழைத்து ஒவ்வொருத்தராக எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஸ்தாபன நடைமுறைகளையும், தானில்லாத வேளைகளில் பொறுப்புகள் என் கைவசமே எனவும் கூறியவர், என்னை மணமகன் போல என் இருக்கை வரை அழைத்து வந்ததும், அவளை மட்டும் மீண்டும் அழைத்து "சில நாட்களுக்கு இவருக்கு ஹெல்ப் பண்ண வேண்டும்" எனக் கூறியதும், "ஓகே சேர்" என அவள் பவ்வியமாக உரைத்ததும் என் கண்களில் மறக்கப்பட முடியாத திரைப்பட விருந்துகள்.

வாரத்தில் எமக்கு ஐந்தரை நாட்கள் வேலை. ஆனாலும் எனக்கு ஏறத்தாழ எல்லா நாட்களுமே வேலையிருக்கும். வேலையினைப் பொறுப்பேற்ற முதல் நான்கைந்து கிழமைகளும் அவளும் தனது லீவில் அரைநாளை எனக்காகத் தியாகம் பண்ணிவந்ததும், சீறாமல் சினக்காமல் சகல நடைமுறைகளையும் எனக்கு எடுத்தியம்பிய அவளது பண்பும், பாங்கும், எனக்கு அவள்மீது ஒரு மதிப்பை ஏற்படுத்தியது. மற்றைய மூவரையும் விட அவளுடனேயே நான் அதிகம் கதைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததும் அவள்மீது நான் அந்நியோன்னியமாகிவிட இன்னொரு காரணமாக அமைந்தது.

வேலைக்கு வந்த மூன்றாம் மாத முடிவிலாக இருக்க வேண்டும். "ஒரு மணியாச்சு சாப்பிடக் கூட போகாமல் அப்படி என்ன வேலை வேண்டிக்கிடக்கு!", "என்ன மூட் அவுட் ஆக இருக்கிறீங்க, சுகமில்லையா? பனடோல் தரட்டுமா?" என்றெல்லாம் கேட்குமளவிற்கு அவள் என்னுடன் பழக ஆரம்பித்து விட்டாள்.

"உங்களுக்கென்ன வீட்டிலை 'பேறன்ஸ்', 'சிஸ்ரேஸ்', 'பிறதேர்ஸ்' என குடும்பமே கொழும்போடையிருக்கு. எனக்கு அப்பிடியா?" என்பேன். "ஓ! சூட்டிக்கு அம்மா ஞாபகம் வந்திடுச்சா?" என்பாள். "ஏன் உங்க அம்மாவையும், தங்கச்சியையும் கொழும்புக்கு 'கோல்' பண்ணுங்களன்?" என்றாள் இன்னொரு நாள். "குடும்பத்தைக் கூப்பிட்டுட்டு கொழும்பிலை எங்கை கோட்டை றெயில்வே ஸ்ரேஷனிலையா இருப்பது?" என்றேன்.

அன்றொரு வெள்ளிக்கிழமை. "உங்களுக்கு லஞ்ச் இண்டைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ரை பொறுப்பு" என்றாள். "ஏன் இண்டைக்கு உங்க பிறந்த நாளா?" என்றேன். "அப்பிடி எதுவுமில்லை. . . . நீண்ட நாளா கடையிலை சாப்பிடு றீங்களே. . . . ஒரு 'சேஞ்சுக்கு' இண்டைக்கு எங்கட வீட்டு சாப்பாட்டையும் ஒருக்கா 'ரேஸ்ட்' பண்ணிப் பாருங்களேன். . . " என்று கூறினாள்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. "நீங்கள் என்ன நம்பர்?" என்று கேட்டேன் நான் ஒருநாள். "என்ன நீங்கள் எண்டு எனக்கு பெரிய மரியாதை தரவேண்டியிருக்கு?" என்றாள் பதிலாக! "அப்ப, என்னடி என்று அழைக்கலாமா?" என்று கேட்டேன். "அது உங்க இஷ்டம்!" என்றாள்.

"என்ன கழுத்திலை சுழுக்கா?" என்றாள் இன்னொரு நாள். "எப்படி தெரியுது பார்க்க?" என்று கேட்டேன். "கண்றாவியா இருக்கு" என்றவள், ஆபீஸ் பையன்களில் உபாலி என்பவனை அழைத்து ஏதோ ஒரு 'பிளாஸ்டர்' வாங்கி வரும்படி தனது 'ஹாண்ட் பாக்'கிலிருந்து ஒரு பத்து ரூபாத் தாளை எடுத்து நீட்டினாள். "என்னுடலுக்கு ஒத்தடம் நீ தரலாம். என் உள்ளத்திற்கு ஒத்தடம் யார் தருவார்?" என்றேன். "பெரிய கண்ண தாசன் என்ற நினைப்பு" என்ற வசனம் பதிலாக வந்தது.

மற்றுமொரு நாள் அவள் இப்படிக் கேட்டாள். "மாசா மாசம் ஐயாயிரமோ ஆறாயிரமோ சம்பளம் எடுக்கிறீங்க. . . . இப்படிப் 'பாசமலர்' காலத்து 'றவுசரும்', 'பாட்டா சிலிப்பரும்மா' போடுவாங்க? செந்தில், உபாலியைக் கூடப் பாருங்க! எப்பிடி 'றெஸ்' பண்ணுறாங்க எண்டு". அதற்கு நான், "ஆக்களின்ரை பதவியும் அந்தஸ்தும் போடுகிற உடுப்பிலையா இருக்கு? இது என்னோடை பாணி. இதை மாற்ற எவராலும் முடியாது!" என்றேன். "என்னால் கூடவா?" என்றாள் முகத்தை கோணலாக்கியவாறே.

அவளுடன் பழக ஆரம்பித்து ஆறு மாதங்களின் பின். . . . அண்மையில் ஒருநாள் "எனக்கு இலங்கையை விட்டுச் செல்ல ஒரு சான்ஸ் கிடைச்சிருக்கு" என்றேன். "என்ன சொல்லுறியள்" என்றாள். "விரைவிலை எனக்கு நீ பிரியாவிடை தர வேண்டியிருக்கும்!" என்றேன், வேறொரு வழியாக. அவள் கண்களில் ஒரு நீர்ப்படலம் மிதந்து வந்தது. "என்ன நடந்தது உனக்கு?" என்றேன். " ஏனோ தெரியல்ல . . . . காலையிலை இருந்தே கண்கள் கலங்குது. . . . . தடிமன் குணமோ தெரியல்லை" என்றவள், "ஏன் அப்பிடி, எந்த நாட்டிற்குப் போகப்போறீங்க?" என்றாள். நான் மௌனமானேன். "அப்பிடி எதுவுமே செய்திடாதீங்க. அதுக்கப்புறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு விசரே வந்திடும்" என்றவள், தேநீர்க் குவளையுடன் 'பாத் ரூம்' பக்கம் சென்றுவிட்டாள்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த இரண்டொரு நாட்களின் பின்.... நாமிருவர் மட்டுமே தனியாக இருந்த ஒரு காலைப் பொழுதில், "எங்கள் இரண்டு பேரிற்கு மிடையிலை எவ்வளவு ஒற்றுமை பார்த்தீர்களா?" என்றாள். "அப்படி என்ன பெரிய ஒற்றுமையைக் கண்டுவிட்டாய்?" என்றேன். "என் பெயர் காவேரி, மூன்றெழுத்து. உங்க பெயர் வேலோன் அதுவும் மூன்றெழுத்து. அன்பு, பாசம், கருணை, நேசம், இவைகளும் மூன்றெழுத்து.... இதைக் கவனித்தீர்களா?" என்று கேட்டாள், கையால் மேசைமீது கிடந்த காகிதத்தில் கோலமிட்டவாறே. "ஏன்? பிரிவு, சோகம், அழிவு, நாசம் இவைகளுக்குக் கூடத்தான் மூன்றெழுத்து" என்றேன். "போடா விசரா!" என்பது பதிலாக வந்தது.

இந்த சம்பவங்களின் பின்பு தான் இனியும் காலந் தாழ்த்தாது நானாவது முதலில் 'அதை' அவளிற்குக் கூற வேண்டும் என்ற முடிவிற்கு வந்து, இன்று எப்படியும் கூறி விடவேண்டும் என்ற தீர்மானத்திற்கும் வந்திருக் கிறேன்.

நேரம் ஒன்பதரையைத் தாண்டி விட்டது. 'டைப்பிஸ்ட் கிளார்க்' கைப் பார்த்தேன். கேள்விக்குறியொன்றுடன் அவவும் என்னை நோக்கினா. "என்ன இண்டைக்கு உங்கடை காயைக் காணேலை?" என்று கேட்குமாப் போலிருந்தது அந்தப் பார்வை. பின்னால் உபாலி எதையோ 'பைல்' பண்ணிக் கொண்டிருந்தான். முன்னால் செந்தில் 'பொஸ்'சின் 'றூமை' துப்புரவாக்கிக் கொண்டிருந்தான். மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தேன். பத்துமணிக்கு பத்து நிமிடங்கள் மட்டுமே இருந்தன. "ஏன் மிஸ். இண்டைக்கு காவேரி வரமாட்டாவா?" என்றேன், 'டைப்பிஸ்டை'ப் பார்த்தவாறே. "ஏன் உங்களுக்குத் தானே தெரிய வேணும்" என்பது பதிலாக வந்தது. கேட்கா மலே விட்டிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டேன். வந்த எரிச்சலை எவர் மீதாவது கொட்டித் தீர்க்க வேண்டும் போலிருந்தது. தூசி துடைத்து முடித்து விட்டு வளமாக செந்தில் வந்து கொண்டிருந்தான். "என்னப்பா செந்தில் இன்னும் 'ரீ பிறிப்பயர்' பண்ணேலையா?" என்றேன். "ரீக்கு லக்ஸ்பிறே தீர்ந்து போச்சு சேர்!" என்றான். 'பெற்றிக்காஷில்' இருந்து ஒரு நூறு ரூபாத் தாளை எடுத்து நீட்டியவாறே, "ஏன் இதை முன்னமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வித் தொலைக்கக் கூடாதா?" என்றேன். "சேருக்கு இண்டைக்கு 'மூட் அவுட்' போலை" என்று கதவுக்கு அப்பால் சென்று, அவன் 'முணு முணு'த்துக் கொண்டது 'டைப்பிஸ்டிற்கும்' கேட்டிருக்கலாம்.

வானொலி காலைத் தமிழ் வர்த்தக நிகழ்ச்சிகள் நிறைவுற்றதற்கான சாத்தியக் கூறுகள் அடுத்ததாயுள்ள 'கொமினிக்கேஷனிலிருந்து' ஒலித்தது. எவரோ கதவடியில் வரும் ஓசை கேட்டது. நிமிர்ந்து பார்க்கிறேன். அவள்தான். காவேரியேதான் திருமணப் பெண்ணாக மெல்ல. . . . மெல்ல. . . . அடியெடுத்து வந்து கொண்டிருந்தாள். என்னையறியாமலே என்னுள் ஒரு உற்சாகம் ஊற்றெடுத்தது. "குட்மோணிங்" என்றவாறே என்னைக் கடந்து பின் சென்றாள். "குட் ஆவ்ரநூன்" என்றேன் என் கடிகாரத்தைப் பார்த்தவாறே. "கோயிலுக்குப் போட்டு வந்தன். அதுதான் கொஞ்சம் 'லேட்' டாப் போச்சு" என்று கூறிக் கொள்வதும், என் காதில் வந்து விழுந்தது.

"இனி ரீ தேவையில்லைத் தானே?" என்றான் பில்லையும் மீதிப் பணத்தையும் நீட்டியவாறே செந்தில். "என்ன நீ சொல்லுறாய்?" என்றேன். "இல்லை சேர் 'லஞ்ச் அவர்' ஆகுது அதுதான்" என்றவன், மேலும் என் கண்களில் படாது பின்பக்கமாகச் சென்றுவிட்டான்.

திரும்பி, "இங்கை ஒருக்கா வாங்கோ. இந்த 'காஷ்புளோ இஸ்ரேட் மெண்டை' ஒருக்கா 'பிறிப்பயர்' பண்ணித் தாங்கோ" என்றேன். பேனையும் 'பைலுமாக' வந்து என் முன் அமர்ந்து கொண்டாள். "அதுக்கு முன்னாடி ஒரு விசயம் சொல்லவேணும்" என்றேன். "நான் கூட ஒரு 'நியூஸ்' உங்களுக்குச் சொல்ல வேணும்" என்றாள். முதலில் சொல்வது யார்? ஒரு வேளை 'அதையே' சொல்ல வருகிறாளா? ஆண்டவா! அதற்குள் நான் முந்திக் கொள்ள வேண்டுமே?

"வயதுக்கு மூத்தவன் நான். அதனாலை முதலிலை நான் சொல்லுறன். அப்புறம் நீ சொல்லு!" என்றேன். "நோ . . . நோ. . . முதலிலை நான் தான் சொல்ல வேணும். முதன் முதலா உங்களுக்குத்தான் சொல்லவும் வேணும்" என்று சிணுங்கினாள். "சரி சொல்லடி" என்றேன். என் நெஞ்சு 'படக்.....படக்' கென்று சத்தமாக அடிப்பது அவளுக்கும் கேட்டுவிடும் போலிருந்தது.

"எனக்கு வர்ற சண்டே, என்கேஜ்மெண்ட்!' அதுதான் இண்டைக்கு வர லேட்" என்றாள் குனிந்தவாறே. "என்ன நீ சொல்லுறாய்?" என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமான என் குரல்கேட்டு 'டைப்பிஸ்ட்' ஒரு தடவை தன் வேலையை நிறுத்திப் பின் தொடர்ந்தா. "எனக்கும் என்னோடை போய் பிரண்டிற்கும் வர்ற சண்டே சிம்பிளா 'என்கேஜ்மெண்ட்' நடக்க இருக்கு எண்டு சொன்னன்" என்றாள். "இதை ஏன் இவ்வளவு நாளாய், எனக்குச் சொல்லேல்லை?" என்று கேட்டேன். "எதையும் முடிவானதுக்கு அப்புறம் தானே சொல்லவேணும்! அதுதான் இண்டைக்கு முதன் முதலாக உங்களுக்கு சொல்லுறன்" என்றாள் என்னைப் பார்த்தவாறே.

அப்ப நான் சொல்ல நினைத்தது.....? நான் சொல்லத் துடித்தது.....? அதற்கு இனி அவசியமே இல்லை!

"ஓகே . . . நீங்க என்ன சொல்ல வந்தீங்க," அவளது குரல் என்னை நினைவுக்குக் கொண்டு வந்தது. 'அது. . . அது. . . . எனக்கும் என்ரை கசின் சாந்திக்கும் மே மாசம் இருபத்தைந்தாம் திகதி 'றிஜிஸ்ரேஷன்' நடக்க இருக்கு. அதைத்தான் 'அட்வான்ஸ்' ஆகவே உனக்குச் சொல்ல நினைச்சன்!' என்ற உண்மையை நான் சொல்ல நினைத்தாலும் எதையுமே கூறாது, கூற வேண்டிய அவசியங்கள் ஏதும் இல்லாது புரட்டிக் கொண்டிருந்த புதிய 'பைலை' எடுத்து அவள் முன்னால் போட்டேன்.

இரண்டு கப் ரீயை செந்தில் கொண்டு வந்து என் மேசை மீது வைத்துச் சென்றான். "என்ன சொல்லுங்களேன்!" என்றாள், கால்களை நிலத்தில் அடித்தவாறே.

"ஆறேழு மாதங்களுக்கு முந்தி நாங்கள் கொள்முதல் செய்த பொருளொன்றை நீ 'பிக்ஸ்ட் அசெட்ஸ்' ஆகப் பற்றுவைச்சாயோ எண்டு நான் போட்ட கணக்குத்தான் தப்பாயிட்டுது. நீ அதை 'கறண்ட் அசெட்ஸ்' ஆகச் சரியாத்தான் பற்றுவைச்சிருக்கிறாய் எண்டு இப்ப இந்த 'பைலை'ப் புரட்டின போது தான் எனக்குப் புரியுது. . . ஒரு நிம்மதியாவும் இருக்கு!" என்றேன் நான். புருவத்தை உயர்த்தியவாறே, "என்ன நீங்கள் சொல்லுறீங்க?" என்று கேட்டாள்.

"ஒரு முறைதான் சொல்லமுடியும். நீ ஒரு 'குவாலிபைட் புக்கீப்பர்' எண்ட முறையிலை புரிஞ்சாப் புரிஞ்ச கொள்" என்றவாறே தேநீர்க் குவளையைக் காலியாக்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அட் லீஸ்ட் நீங்க சொன்ன 'என்றி'யை 'லெட்'ஜரிலையாவது காட்டுங்களன்" என்றாள். "ஐ ஆம் வெறி சொறி மைடியர். இது லெட்ஜருக்கு வராத டபிள் என்றி" என்று நான் சொன்ன போது, முன்னால் வெளிச்சம் தெரிந்தது. தனது அறை 'ரியூப் லைட்டை'ப் போட்டுவிட்டு 'பொஸ்' தான் தனது இருக்கையில் அமர்ந்து கொள்கிறார்.

"ரீயைக் குடிச்சிட்டு நீ ஸ்ரேட்மண்டைப் பிறிப்பயர் பண்ணு. நான் பொஸ்ஸை ஒருக்கா பார்த்திட்டு வாறன்" என்ற போது, இந்த 'ஸ்ரேட் மெண்டிற்கு' இப்ப என்ன அவசரம்? வழமையாக இருபது இருபத்தைந்தாந் தேதிகளிலை தானே 'பிறிப்பயர்' பண்ணிக் குடுப்பன்.. . ஏன் இந்த மாசம் இப்பவே கேக்கிறீங்க?" என்றாள் வியர்க்கும் முகத்தை கைக்குட்டையால் துடைத்தவாறே.

"எதையும் முன்னரே செய்து வைச்சிட்டால் அல்லது சொல்லி வைச்சிட்டால்.... தப்பான கணக்குகள் உருவாக வழி இருக்காது இல்லையா?" என்றேன்.

"புரியாத ஆள் தான். போங்க நீங்க" என்றவள் புதிய 'பைலை'த் திறந்து, அமைதியாகத் தன் வேலையை ஆரம்பித்தாள்.

'நான் மட்டுமா?' என்று சொல்ல நினைத்தாலும் எதையுமே கூறாது, கையொப்பமிடப்பட வேண்டிய கடிதங்கள், காசோலைகள், 'வவுச்சர்களை' எடுத்த வாறே, நான் 'பொஸ்'சின் அறைக்குச் செல்லத் தயாராகுகிறேன்.

-"வீரகேசரி வாரவெளியீடு"

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988

தேன் சிந்துமோ வானம் ?

ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு கோவிலின் வெளிவாசல் பக்கதமாக செருப்புகள் வைத்த இடத்திற்கு வந்தபோது தான் என் பெயரை அழைத்த வாறே தூரத்தே எவரோ ஓடி வருவதை என்னால் அவதானிக்க முடிந்தது.

"எட சீலன்! கனகாலத்துக்குப் பிறகு". அண்மித்தவனைப் பார்த்துக் கூறியவாறே செருப்புக்களைத் தேடிப் பிடித்து காலில் மாட்டிக் கொள் கிறேன்.

"உள் வீதியிலையே உன்னை நான் கண்டுட்டன். நீ கும்பிட்டு முடியக் கதைப்பம் எண்டிருந்தன், அதுக்கிடையிலை வெளிவீதிக்கு வந்திட்டாய்". மூச்சிரைக்க சீலன் கூறுகிறான்.

"இவ்வளவு காலமா நீ எங்கை இருந்தாய்?" அவனது தோளில் கையைப் போட்டவாறே நான் கேட்கிறேன்.

"எயிற்றித் திறீ கலவரத்தோடை சவுதிக்குப் போய் போனமாதம் தான் திரும்பி வந்தனான்."

"ஓ! அப்ப நீ அதிஷ்டசாலி தான். இப்ப சில வருஷங்களா நாங்கள் பட்ட துன்ப துயரங்கள் எல்லாம் உனக்கு கதைகளாகத்தான் அங்கை வந்திருக்கும். இலங்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் எல்லாத்தையும் நீ 'பீ.பீ.சி. நியூசிலை' தான் பார்த்திருப்பாய்".

"இன்னும் உன்ரை சில குணங்கள் மாறேலை வேலோன்".

"கொண்டு பிறந்த கொள்கையும் குணங்களும், கட்டையிலை போகு மட்டும் மாறாது சீலன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ என்ன என்னை 'றோட்'டுக்கு கூட்டிக் கொண்டு போறாய் போலை?" வாசலை அண்மித்துக் கொண்டிருந்தபோது சீலன் கேட்டான்.

"பிறகுமென்ன கோயிலுக்குள்ளேயே தஞ்சம்? அந்த நிலை இப்ப எங்கடை சொந்த ஊர்களிலே தான்".

"நிகழ்காலங்களை பற்றி நீ சொல்லுகிறாய். என்னை நிலையைப் பற்றி நான் சொல்லுறன். கோயிலுக்குள்ளை அம்மாவும். 'சிஸ்ரேசும்' நிற்கினம். கொஞ்சம் பொறு. அவையளும் வரட்டும்".

"அப்ப குடும்பமே கொழும்பிலை தானோ?"

"இரண்டு 'சிஸ்ரேஸ்' இங்கை 'வேக்' பண்ணுகினம். அதனாலை துணைக்கு அம்மாவும் வந்து நிக்கிறா. கொட்டகேனாவிலை 'அனெக்ஸ்' எடுத்த இருக்கிறம்".

நடந்து சென்ற நான் வாசலோடு அமைந்த இருக்கையில் அமர்கி றேன். அருகில் சீலன் வந்து இருந்தான். எங்களூர் கல்லூரியிலும் ரியூசன் சென்ரரிலும் பின்னர் கணக்கியல் நிறுவகத்திலும் இவன் என்னருகே இருந்த அந்த நாட்கள் மின்னலாக ஒரு கணம் மனதில் ஒளிர்ந்தது. 'சாட்டெட் எக்கவுண்டன்சி' படிப்பை ஆரம்பித்த சில மாதங்களுக்குள்ளேயே கலவரம் வெடித்தது. பின்பு தொடர்புகளே இன்றி உறவுகள் விடுபட்டுப் போனது. ஐந்து வருடங்கள் கடந்து பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலில் இன்று.

"என்ன நீ செய்யிறாய்? 'எக்சாம்' ஏதாவது 'பாஸ்' பண்ணினியோ?"

"'சாட்டெட்டிலை பிறிலிமினெறி பாஸ்' பண்ணி இப்ப 'லைசன்சியேட்' படிக்கிறன். அத்தோடை வேலையும் பார்க்கிறன். அது சரி சவுதியிலை உன்ரை முயற்சி என்ன மாதிரி?"

"ஹொட்டேல் ஒண்டிலை 'நைற் ஓடிற்றரா' இருந்தனான் மச்சான். ஐந்து வருஷத்திலை உழைச்சதிலை ஒரு மாதிரி சாவகச்சேரியிலை இரண்டு 'சிஸ்ரேசுக்கும்' வீடுகட்டி, சின்னவளுக்கும் அத்திவாரம் போட்டுட்டன். அத்தோடை ஆளுக்கு இரண்டு லட்சம் 'பாங்கிலையும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிருக்கிறன். இனித் திரும்பப் போய்த்தான் எச்ச சொச்சங்கள். அது சரி உன்ரை 'லைவ்' எப்பிடி, வேலோன்?"

எண்பத்திமூன்று ஆவணியில் கொழும்புத் துறைமுகத்திலிருந்து கப்பல் ஏறிப்போய் காங்கேசன்துறை மண்ணில் காலடி வைத்தது தொட்டு, எண்பத்தியேழு 'மே' யில் நடந்த வடமராட்சித் தாக்குதல் வரை என் வாழ்வில் நிகழ்ந்த மாறுதல்களை ஒன்றுமே விடாது இவனுக்கு ஒப்பு வித்தேன்.

கதைகளைக் கேட்டதும் நண்பன் எனக்கு வாழ்த்துக் கூறும் தோரணையில் கை கொடுத்தான். "என்னடாப்பா? இன்னமும் உயிர் பிழைச்சு இருக்கிறதுக்கா கை கொடுக்கிறாய்?" என்று நான் கேட்ட போது, அமைதி யாகச் சிரித்தவாறே தனது சரிதையையும் சொல்ல ஆரம்பித்தான்.

கலவரத்தில் இவனது தந்தை தவறிப்போனது. அதனால் படிப்பைத் தொடர முடியாத நிலையில் தந்தையின் பொறுப்பை தான் ஏற்று அதை நிறைவு செய்யும் நோக்கிற்காக சவுதி சென்றது. இப்போ சகோதரிகளின் சங்கதிகளைப் பார்க்க லீவில் வந்திருப்பது.

"இவதான் அம்மா. இது வான்மதி. இவள் பாமினி. அம்மா நான் முந்தி அடிக்கடி சொல்லுவன் வடமராட்சிப் பொடியன் ஒண்டு என்ரை 'பிறண்ட்' எண்டு. அவன்தான் இவன்". பரஸ்பரம் நிகழ்ந்த அறிமுகங்களின் பின்னர் அமர்ந்திருந்த இருவரும் எழுந்து நின்றோம்.

ஆலய வளவை விட்டு வெளியேறி கொச்சிக்கடைச் சந்தியால் இடது பக்கமாகத் திரும்பி சீலனின் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தோம்.

எனது தொழில் நிலவரங்கள் பற்றி சிரத்தையுடன் சீலனின் அம்மா கேட்டு அறிந்து கொண்டா. என் வயதை ஒத்த எங்களூர் பையன்கள் சிலரது பெயர்களைச் சொல்லி அவர்களது இனத்தவரா நான் என்றும் வினவினா. அவவிற்குத் தெரிந்த ஒரு பொடியனின் பெயரை அடிப் படையில் வைத்து ஓரளவிற்கு என் குடும்பத்தை இனங்காட்டினேன்.

"உம்மடை 'பிறண்ட்' சீலனாலை தான் நாங்கள் இப்ப தலை நிமிர்ந்து நடக்கிறம் தம்பி. பாருமன் இந்த முறை வந்து நிக்கிறதுக் கிடையிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்ரை சகோதரிகளின்ரை அலுவலுகளையும் முடிச்சுப்போட வேணு மெண்டு வலு பிரியப்படுகிறார். கடவுளே எண்டு இதுகளை இந்த முறை கரைசேர்த்துப் போட்டாரெண்டால் இனி 'ஜவ்னாக் கம்பஸ்சிலை' படிக்கிற இளைய பொடிச்சியின்ரை அலுவல் ஒண்டுந் தானே? அதை ஆறுதலா கவும் முடிக்கலாந் தானே?"

காவல் நிலையம், அரச மரம் ஆகியவற்றைத் தாண்டி இப்போ வாகன இரைச்சல்கள் சற்றுமே இல்லாத குச்சொழுங்கை வழியாக நாம் திரும்பிக் கொண்டிருந்தோம். பொழுது சற்று இருட்டி விட்டிருப்பதைக் கூட இந்த ஒழுங்கைக்குள் வந்த பின்புதான் நான் உணர்ந்து கொண்டேன். குச்சொழுங்கை சிறிது தூரம் சென்றதும் ஒடையாக உருமாறியது. இரண்டு பக்கங்களிலும் சுவர்கள் நிமிர்ந்து நிற்க நிலத்தில் வலது பக்கமாக சாக்கடை ஒன்று நீண்டு சென்றது. சிறுநீர் நெடி மிக்க தாராளமாகவே சாக்கடை யிலிருந்து மிதந்து கொண்டிருந்தது. சிவப்புத் தகரக் 'கேற்'றுக்களில் வெள்ளை இலக்கங்கள் தம்மை வெவ்வேறு வீடுகளாக வேலி போட்டுக்கொண்டு வந்தன. ஏழாம் இலக்கம் 'ஐ' ப்பிரிவு என வந்ததும் எங்கள் குழுவின் வேகம் குறைந்தது. நீண்ட நேர மௌனத்தை சீலனின் அம்மாதான் முதலில் கலைத்தா. "தம்பி, நாங்கள் கதவைத் திறந்து கொண்டு உள்ளை போறம். நீ போய் சந்திக்கடையிலே ஒரு 'பக்கெட்' பால் வாங்கி வா. நீங்கள் இரண்டு பேரும் போனால் இப்போதைக்கு வரமாட்டியள். இவர் நிக்கட்டும். நீ மட்டும் போட்டு ஓடிவா".

'கேற்'றைத் திறந்து உள்ளே நுழைகிறோம். வாசல் கதவையும் திறந்த போது தான் அந்த 'அனெக்ஸ்' தன் அழகை அள்ளிக் கொட்டியது. ஒரு பெரிய 'ஹோல்' பின்பக்கமாக அறைக்கு வழி விட்டிருந்தது. அறையின் வாசலில் அழகான கோட்டின் துணி ஒன்று தொங்கிக் கொண்டிருக்க, 'ஹோலின்' வலது பக்கமாக வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. இடது புறத்தே 'சோக்கேஸ்', குளிர்சாதனப் பெட்டி, மேசை, எதிரும் புதிருமாகக் கதிரைகள். முன்பக்கத்தில் வட்டமாக நான்கு பெரிய நாற்காலிகள். நவீன ஓவியங்கள் சுவரை நிரப்ப, சுவர் ஓரங்களை 'ஓக்கிட்ஸ்" செடிகள் அலங்கரித்தன.

முன்புறமாக இருந்த ஒரு நாற்காலியில் நான் அமர்ந்து கொண்டேன். பெண்கள் அனைவரும் உள் சென்றனர். சிறிது நேரத்தின் பின் சீலனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா வந்தா. தொடர்ந்து வந்த பாமினி மூலையில் இருந்த ரெலிவிசனை 'ஓன்' பண்ணி, சத்தத்தைச் சரி செய்துவிட்டு, மீண்டும் உள் நுழைகிறாள். 'ரி.வி.' யில் விளம்பரங்கள் போய் கொண்டிருந்தன.

"இவ, மகள் வான்மதி. 'வெற்னறி சேஜன்ரா' மொரட்டுவவில வேலை பார்க்கிறா. இனிச் சம்பளமும் ஆறுக்கு மேலை எடுக்கிறா. நாங்கள் 'டொக்டர்,' 'என்சினியர்' எண்ட 'லெவல்'களிலே எல்லாம் எதிர்பாக்கேலை. உமக்குத் தெரிஞ்ச இடமேதாவது இருந்தால்...."

எனது மூளைக்குள் 'சட்'டென எந்த இடமும் தட்டுப்படவே இல்லை. எனது வயதை ஒத்தவர்கள் இவவுக்கு தோதுவராது. இனி என்னை விட சற்று வயதில் கூடிய பலரும் குடியும், குடித்தனமுமாக இருப்பவர்கள். எஞ்சியிருப்பவர்கள் சிலருக்கு அசைய முடியாத குடும்பப் பொறுப்பு. இந்த லட்சணத்தில் நான் யாரை என சிபார்சு செய்வது?

எதையுமே சொல்ல முடியாதவனாக நான் இருந்த போது, கேர்ட்டினை விலக்கியவாறே தட்டில் பிஸ்கட், பழங்கள் சகிதம் பாமினி வந்தாள். என் அருகிலிருந்த மேசையில் அவற்றை வைத்த போது ரி.வி.யில் அடுத்த விளம்பரம் ஒளிர்ந்தது.

"இவ சீலனுக்கு நாலு வயது இளையவ. 'கொம்பனியில' 'எக்கவுண்ஸ் கிளார்க்கா' வேலை பார்க்கிறா. அத்தோடை இப்பத்தான் 'ஏ.ஏ.ரி' எண்டு 'எக்கவுண்டன்சி கோஸ்' செய்ய ஆரம்பிச்சிருக்கிறா. 'அட்வான்ஸ் லெவலிலை கொமேஸ்' செய்ததாலை முதலாவது சோதனை எடுக்கத் தேவையில்லையாம். இப்ப இரண்டாவது சோதனைக்கு 'அப்பிளை' பண்ணியிருக்கிறா. 'எக்கவுண்சிலை' கொஞ்சம் கஷ்ரப்படுகிறாள் தம்பி. நீர் 'சாட்டெட்' தானே செய்யிறீர்! முடிஞ்சால் இடையிடை வந்து கொஞ்சம் ஹெல்ப் பண்ணுவீரோ?"

"ஓ! யேஸ் எனக்குப் 'புறப்ளம்' இல்லை. ஆனால், 'எக்சாம் வருகிற நேரங்களிலைதான் கொஞ்சம் சிரமமாக இருக்கும். மற்றபடி வந்து சொல்லிக் குடுக்கிறன்". நான் சொன்னதை உள்வாங்கிய பாமினி ஒரு புன் சிரிப்புடன் உள்சென்று விடுகிறாள். வலது பக்க மூலையிலிருந்து மின் விசிறி திடீரென சுழல ஆரம்பிக்கிறது. அப்போ சீலன் உள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைந்தான். சிகரெட் 'மணம்' அவனில் 'குப்' பென வீசியது. "அம்மா பக்கட் பால் முடிஞ்சு போச்சுதாம்."

"பரவாயில்லை. நேற்று உடைச்ச 'ரின் மில்க், பிறிச்'சுக்குள்ள கிடக்கு. நான் போய் 'ரீ' போட்டுக் கொண்டு வாறன். நீ உன்ரை 'பிறண்டோடை' கதைச்சுக் கொண்டிரு. ஏன் தம்பி, நீர் 'பிஸ்கட்' எடுக்கலையே? பழங்களும் இருக்கு. பார்த்து எடும்".

"ஓ, எடுப்பம்.... என்ன அவசரம்?"

சீலன் மீண்டும் கதைக்க ஆரம்பித்தான். எனது மட்டுப் படுத்திய வருமானத்தை வைத்து நான் வாழ்க்கை நடத்தும் விதம் இவனுக்கு வியப்பாக இருந்தது. இவனது வெளிநாட்டுப் பார்வையில் இது வில்லங்க மான விடயந்தான்.

"என்னடாப்பா வேலோன்? 'கொலிச்சிலை' எங்களோடை படிச்ச ஒரு பொடியங்களையுமே இப்ப கொழும்பிலை காணேலை? கட்டை ரவி, சடையப்பன், சிங்கன், வேல்முருகன், முத்துலிங்கன், மூத்தண்ணன், தவத்தான், குகதாசன், குணட்டி, தங்கராசன் எண்ட எங்கடை 'கிளிக்'கையே காணக் கிடைக்குதில்லையே!"

"ஒருத்தருமே இப்ப இங்கை இல்லை சீலன். இயக்கமெண்டு கொஞ்சப்பேர் போனாங்கள். வெளிநாட்டுக்கு சிலர் பறந்தாங்கள். கலவரங் களிலை சிலர் காணாமல் போயிட்டாங்கள். இப்ப தங்கராசன் என்னைப் போல ஒண்டு, ரெண்டு பேர் தான் மிஞ்சியிருக்கிறம். மேலும், நாங்களும் இருக்கப் போகிறதும் எத்தனை நாளைக்கெண்டதை நிச்சயமாக சொல்ல முடியாது. ஒரு வேளை நீ அடுத்த தடவை வரக்குள்ளை நான் கூட இல்லாமல் போய்விடலாம் சீலன்".

"ஏன் வேலோன், அப்பிடி விரக்தியாகச் சொல்லுறாய்? அதுபோக நீயும் ஏன் வெளிநாடு போக 'றை' பண்ணக்கூடாது?

"அதுக்குப் பல காரணங்கள் சீலன். ஆறு, ஏழு எண்டு கட்டி அகதிகளாக, வெளிநாட்டுக்குப் போறளவிற்கு எனக்கு வசதியில்லை. சவுதிப்பக்கம் போகிறது பற்றியதும் இன்னமும் தீர்மானிக்கேல்லை. அதுசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்ரை 'சிஸ்ரேசின்ரை' பிரச்சினைகளை எப்படி நீ 'டைக்கிள்' பண்ணப் போகிறாய்?"

"நானும் சிலோனுக்கு வந்து இண்டையோடை மூண்டு கிழமை முடியுது. சம்மந்தம் ஒண்டுதானும் பொருந்தி வருகுதில்லை. கடைசி வான்மதியின்ரை விஷயத்தையாவது முடிப்பமெண்டு பார்த்தால், வாற 'புறப்போசல்கள்' எல்லாம் பாதியோட போயிடுது?"

"ஏன் என்ன பிரச்சனை?"

"சாதி, சாதகம், பதவி, அந்தஸ்து எண்டு நாங்களே 'கிறியேற்' பண்ணுகிற பிரச்சனைகள் தான். கலியாணத்தை முடிச்சு வைக்க வேண்டுமெண்டு அவசரங் காட்டுகிறாவே தவிர, அம்மா இன்னும் பழைய நுணுக்கங்களை கைவிடுகிறாவே இல்லை" என்று சீலன் சொன்ன போது, சற்றே செருமியபடி தாயார் வந்து எதிரில் அமர்ந்தா.

'சட்'டென சீலன் எழுந்து உள்ளே செல்ல, தாயார் கதையை ஆரம்பித்தா. "தம்பி என்ன கடைச்சாப்பாடு தானே? ஆளைப் பார்க்கத் தெரியுது. நாளைக்கு நீர் 'பிறீ' தானே? மத்தியானம் 'லஞ்சுக்கு' வாருமன்".

தாயை மறைத்த படி என்முன் பாமினி வந்த போது சற்று நிமிர்ந்து பார்த்தேன். முகங்களில் புன்சிரிப்பும், கைகளில் தேநீர்க் குவளையும் பரிமாறின.

தாய்க்குப் பதில் சொல்ல நான் வாயெடுத்த போது, சிகரெட்டும் கையுமாக இருமியபடி சீலன் உள்ளிருந்து வந்தான். 'ரி.வி.'யில் நிகழ்ச்சி ஒன்று மாறிக் கொண்டிருந்தது.

"அம்மா, நான் அப்போ சொல்லவே மறந்து போனன். இவனுக்கு போன மாதம் ஒரு பெண் குழந்தை கிடைச்சிருக்கு. மீரா எண்டு பெயர் வைச்சிருக்கிறான். தொடக்கு கழிய குழந்தையை கோயிலுக்குக் கொண்டு போக வேணுமாம். முப்பத்தொண்டுக்கும் போகேலாமல் போச்சுதாம். இரண்டுக்கும் பொதுவா நாளைக்கு காலமை ஊருக்குப் போகிறானாம்".

சிரிப்பும், கதையுமாக இருந்த சீலனின் அம்மாவின் முகம் திடீரென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சீரியசான' பாவம் காட்டியது. ஒருசில விநாடிகள் மௌனம். பின் வார்த்தைகளைக் கூட்டிக் கதைக்க ஆரம்பித்தா. வார்த்தைகளில் ஒரு தொய்வு தெரிந்தது. "எட உமக்கு 'வெடிங்' முடிஞ்சுதே? அப்ப உன்ரை 'பிறண்ட்' பெரியாள் தான் சீலன்".

"சாந்தி எண்டு ஒன்று விட்ட மாமன்ரை மகளைத் தான் 'மறி' பண்ணியிருக்கிறானாம். வடமராட்சி 'அற்றாக்குக்'குள்ளை தான் ஆளுக்கு 'வெடிங்' நடந்ததாம். கலியாண வீடு நடந்த அடுத்த நாளே 'பங்கருக் குள்ளை' போக வேண்டி வந்துட்டுதாம்." சொல்லியவாறே சீலன் சிரித்தான். ஆனால், தாயோ பாமினியோ அதை ரசிக்கவில்லை. மூலையில் ஒளிர்ந்த 'ரெலிவிஷனை', 'ஓவ்' பண்ணிவிட்டு தாய் உள்ளே சென்றா. தொடர்ந்து பாமினியும் சென்றாள். சற்று நேரத்தில் சுழன்று கொண்டிருந்த மின் விசிறியும் ஓய்வுக்கு வருகிறது.

"போறதுக்கு இன்னும் கொஞ்ச நாள் தான் இருக்கு வேலோன். அதுக்கிடையிலை வான்மதியின்ரை விஷயத்தை எப்படித்தான் ஒப்பேற்றப் போகிறேனோ?" அமைதியைக் கலைத்தவாறே சீலன் தான் ஆரம்பித்தான். சிகரெட் புகை வளையம், வளையமாக வெளி வந்தது.

"கறண்ட் புறபுளம் இதுதான் மச்சான். வீடு 'ரெடி', 'டவுரி' 'டொனேசன் ரெடி,' காணி பூமி, நகை நட்டு எல்லாமே 'ரெடி.' ஆனால், மாப்பிள்ளை தான் இல்லை. பொடியங்களின்ரை பற்றாக்குறையை நிகழ்ந்து போன அழிவுகளை இப்பத்தான் உணர முடியுது சீலன்". காலியான தேநீர்க் குவளையை மேசையில் வைத்து விட்டு, சீலனின் முகத்தைப் பார்த்தவாறே நான் நிமிருகிறேன். இப்போ சற்று புழுங்க ஆரம்பிக்கிறது.

"திரைகடலோடி எல்லாம் திரவியங்களைத் தேடிக் கொள்ள முடியுது. பொருளாதாரம் வசதிகளையெல்லாம் பெருக்கிக் கொள்ள முடியுது. ஆனால், எங்களாலை அக்கா தங்கைகளுக்கு ஏற்ற மாப்பிள்ளைகளைத் தேடி கொள்ளேலாமல் இருக்கே?" நீண்ட பெருமூச்சொன்றுடன் சீலன் சொல்கிறான்.

"எங்கடை சமூகத்திலை வந்திருக்கிற இந்தச் சாபக்கேட்டிற்கெல்லாம் ஆர் சீலன் காரணம்? இதுகளுக்கெல்லாம் ஒரு முடிவு ஆருடைய கையிலை தங்கியிருக்கு?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் பேசாமல் சீலன் எழுந்து உள் சென்று இன்னொரு சிகரெட்டினைப் பற்ற வைத்தபடி வருகிறான். மூலையில் கிடந்த 'கசெற் றெக்கோடர்' இப்போ இவனால் இயங்க ஆரம்பிக்கிறது.

"பழங்கள் எல்லாம் அப்பிடியே இருக்கு. நீ 'ரச்' பண்ணவே இல்லை போலை கிடக்கு?" என்று கேட்டவாறே, சீலன் இப்போ என்னருகே கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்து கொள்கிறான்.

"பரவாயில்லை. இப்ப இதுகளை எடுத்தால் பிறகு இரவைக்குச் சாப்பிடேலாது, மச்சான்".

'ரேப்பில்' மேளக் கச்சேரி ஒன்று மெதுவான சத்தத்தில் போய்க் கொண்டிருந்தது. என் குடும்ப வாழ்க்கை பற்றி, எதிர்காலத் திட்டங்கள் பற்றி இப்போ எமது உரையாடல் அமைந்திருந்தது. உள்ளிருந்து சமையல் வாசனை இதமானதாக வெளி வந்து கொண்டிருந்தது.

"உன்னரை 'மறேச்' என்ன மாதிரி சீலன்?"

"உனக்கு, விளக்குமாறு காவின மூஞ்சூறுவின்ரை கதை தெரியுந் தானே?" கேட்டவாறே சீலன் சிரித்தான்.

"தம்பி, நீர் இங்கை எங்கை இருக்கிறனீர்?" கேட்டினை விலக்கிய வாறே தாயார் வந்தா. இப்போ உள்ளிருந்து வந்த பொரியல் வாசனை மூக்கைத் துளைத்தது.

"வெள்ளவத்தையிலை".

"பிறகேன் மினக்கெடுறீர்? இந்த நாளையிலை வேளை காலை யோடை வீட்டுக்குப் போயிட்டால் வீணான பிரச்சனைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். மற்றது நீர் வெள்ளவத்தையிலிருந்து இஞ்சை வந்து போறது உமக்கும் சிரமமாயிருக்கும். அதோடை நீரும் 'எக்சாம்' எடுக்கிறனீர். இவ பாமினி தான் 'கிளாஸ்மேற்றோடை', 'கொம்பயின் ஸ்ரடி' போட்டு 'மனேஜ்' பண்ணுகிறாவாம்".

"அப்ப சரி..... நான் போயிட்டு வாறன்". எழுந்தவாறே நான் செல்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரு சாப்பிட்டுட்டுப் போகலாம்". என்றவாறே சீலன் தாயைப் பார்த்தான். "ஓம்... உமக்காகத்தான் இவ்வளவு அவசரப்பட்டு சமையல் முடிச்சனாங்கள். சாப்பிட்டுட்டுப் போம்". வார்த்தைகள் இழுபட்டன.

"நான் வரக்குள்ளை 'றூம் மேற்' ரஞ்சித்திட்டை எனக்கும் 'டினர்' எடுத்து வைக்கச் சொல்லி போட்டு வந்தனான். பிறகு அது வீணாப் போயிடும். பிறகு ஒரு நாளைக்கு வாறன்". சொல்லியவாறே நான் வாசல் கதவைத் தாண்டுகிறேன்.

"ஊருக்குப் போய் நீ எப்ப திரும்புகிறாய்?" வாசலைத் தாண்டி வந்து சீலன் வினவினான்.

"அடிக்கடி பிரயாணம் பண்ணுறதாலை அதிக நாட்கள் அங்கை நிக்கேலாது. அடுத்த கிழமைக்குள்ளை திரும்பி விடுவன்". மழை மெதுவாகத் தூறிக் கொண்டிருந்தது.

"அப்ப, இனி அடுத்த சந்திப்பு எப்ப?"

"இனி நீ வெள்ளவத்தைப் பக்கம் வந்தால் என்ரை 'றூமுக்கும்' ஒருக்கால் வந்து போவன்" என்று சொன்னபடி எனது முகவரியைக் கூறுகிறேன்.

"தற்செயலாக வரக்கிடைக்காட்டிலும் சவுதிக்கு போனவுடனை உனக்கு லெட்டராவது போடுவன".

மழைத் தூறலின் பாரம் சற்று அதிகரிக்கவே "சீ யூ" பரிமாறிக் கொண்டு, சீலனை விட்டு விலகுகிறேன்.

பேரிரைச்சலுடன் மழை பொழிய ஆரம்பிக்கிறது. அப்போ வெள்ள வத்தைக்கான பேரூந்து ஒன்று வலு வேகமாக வந்து கொண்டிருந்தது.

-"வீரகேசரி வாரவெளியீடு"

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989

விடியலுக்கு முன்.....!

மினிபஸ்ஸின் வாசலில் குவிந்து நின்ற சனங்களை இடித்து, விலக்கி வெளியில் கால்களை வைத்த போது தோளில் தொங்கிய 'றவலிங் பாய்க்கை' உரசிக் கொண்டு "உர்ர், உர்ர்" என பஸ் தன் பயணத்தைத் தொடர்ந்தது. சனநெரிசலால் விலகியிருந்த 'பெலிற்றையும்', 'றவுசரையும்' சரி செய்தவாறே கையை உயர்த்தி கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் பத்து மணியைத் தாண்டியிருந்தது. பூட்டிய கடைகள் முன்னால் பழைய பேப்பர் விரித்து படுத்திருந்த பிச்சைக்காரர்களில் சிலர் பஸ்ஸின் இரைச்சலால் ஒரு முறை நெளிந்து, பின் திரும்பி மறு பக்கம் படுத்துக் கொண்டனர்.

வீதியைக் கடந்து கடல் பக்கமாக நடந்தான். கிரிக்கெட்டோ, கிளித்தட்டோ விளையாடலாம் போல விளையாட்டு மைதானமாக காலி வீதி ஓரே வெளியாய் ஓய்ந்து கிடந்தது. இவன் திரும்பும் குச்சொழுங்கை யின் பெயர்ப் பலகையுடன் பச்சையும், சிகப்புமாகப் பிணைந்து இருக்கும் தபால் பெட்டிகளின் பின், அரசியல் வாதிகளின் தொனியில் ஏதோ சதா பேசிக் கொண்டிருக்கும் அந்தப் பைத்தியக்காரன் கூட உடுத்திருந்த ஊத்தைச் சாரத்தினால் தன்னை மூடி சுருண்டு படுத்து விட்டான்.

குச்சொழுங்கையில் வெளிச்சம் கொஞ்சம் குறைவாகவே இருந்தது. நிதானமாக நடந்தும் ஒரு குழியில் காலை விட்டு நிரம்பியிருந்த தண்ணீரைத் தெறிக்க வைத்து ஒரு கணம் தன் 'பலன்ஸை' இழந்து திடீரென சுதாகரித்து மீண்டும் நடக்க ஆரம்பித்தான். இன்றும் அந்திமழை தன் சேவையை செவ்வனே நிறைவேற்றித்தான் இருக்கிறது. இவன் தங்கியிருக்கும் வீட்டின் முன்புறத்தே கிழக்குப் பக்கமாக ஓர் அறையில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது. 'கேற்' பூட்டி விட்டார்களோ? என்னவோ?

மதிலோரம் ஒட்டிய தொலைபேசிக் கம்பத்தைத் தேய்த்தவாறே வேகமாகச் சென்று 'கேற்றில்' கை வைத்தான். கொழுவித் தான் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசைபடாது கொழுக்கியை எடுத்து உள்நுழைந்து மீண்டும் கொழுவும் போது இவனையும் மீறி "டொங்" எனச் சத்தம் கேட்டது. வாசலில் சுருண்டு படுத்திருந்த 'றெக்சி' திடீரென எழுந்து உச்சிமுதல் கால்வரை பார்த்துவிட்டு கழுத்தைத் திருப்பி, உடலை ஒருமுறை உதறி மீண்டும் முடங்கிக் கொண்டது.

முன்னறையில் இருந்து 'நியூஸ்பேப்பரும்', மூக்குக் கண்ணாடியுமாக ஓடிவந்த முதியவர் "எட வேலோனே?" என்று விட்டு, கொஞ்ச நேர இடை வெளியின் பின், "பஸ்ஸோ, றெயினோ" என்று கேட்டார். "வவுனியா பஸ் கனகராஜன் குளத்தடியிலை 'செக்கிங்' காலை கொஞ்சம் 'டிலே'யாப் போச்சு. 'றெயினை மிஸ்' பண்ணிட்டன். பிறகு அநுராதபுரத்துக்கு வந்து வாறன்" என பாடமாக்கி வைத்த தேவாரமாக வார்த்தைகளை ஒப்புவித்து விட்டு பதிலுக்காகப் பார்த்திராதவனாக ஓடைப்புறத்தால் பின் வாசல் நோக்கி நகர்ந்தான்.

இப்போது 'றூம்மேற்' ரஞ்சித் என்ன செய்கிறானோ? 'லங்கா புவத்'தின் ஆதார செய்திகளையும், பீ.பீ.சி.யையும் கேட்டு விட்டு யாழ்ப் பாணத்திலுள்ள தனது தாயாருக்கோ, அல்லது வேறு 'எவருக்காவதோ' கடிதம் எழுதிக் கொண்டிருக்கலாம். இல்லாவிடின், வானொலி ஒரு பக்கமாக சீர்காழியின் குரலிலோ அல்லது பெங்களூரின் குரலிலோ இரைந்து கொண்டிருக்க மறுபக்கமாக வளைந்து, குறட்டை விட்டுக் கொண்டிருக்க லாம்.

ஓடையால் மிதந்து பின் புறத்தை அடைந்தான். 'றூமில்' இன்னும் 'லைட்' எரிவதை கதவின் கீழ் இடைவெளி வீட்டுக்காரனுக்குக் கோள் சொல்லிக் கொண்டிருந்தது. "மச்சான், இன்னும் படுக்கேல்லை!" என்று நினைத்தவனாக, மெலிதாக கதவில் "டொக். டொக்" எனச் செய்தான். ரஞ்சித் குதித்தெழுந்ததால் கட்டில் ராகமிசைத்தது. உள்புற பூட்டை அழுத்தி திறந்து கதவை இழுத்தான். உதறியபடி கதவு "ஆ" வெனத் திறந்து கொண்டது. "லபக்" என உள் நுழைந்தவன் கதவைச் சாத்தியவாறே, ரஞ்சித்தின் முகத்தைப் பார்த்தான்.

"வருக! வருக!! சாந்தி மணாளனே வருக!!! என்ன புதன்கிழமை வேலைக்கு வாறனெண்டுட்டுப் போனாய். இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமையுமாச்சு...." கையில் வைத்திருந்த குமுதத்தையோ, விகடனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒன்றை தனது மேசையில் போட்டவாறே ரஞ்சித் கேட்டான்.

"என்னடாப்பா செய்யிறது? ஹர்த்தால், கடையடைப்பு எண்டு ரண்டு நாள் கழிஞ்சுது. 'கேவியூ' போட்டு 'றவுண்ட்டப்' பண்ணி கலாதிப் படுத்தினதிலை ரண்டு நாள் வெளிக்கிடேலாமல் போச்சுது. இண்டைக்குத் தான் ஒரளவுக்காவது நகர முடிஞ்சுது!" 'ரவலிங் பாய்க்'கை கட்டிலில் 'தொம்'மென வைத்தவன், தனது மேசை மீதிருந்த கடிதங்கள் மீது பார்வையைத் திருப்பினான்.

"ஓவ்வீசிலை இருந்து உனக்கு 'ரெலிகிறாம்' வந்திருந்தது. வேலைக்கு வரச் சொல்லி. 'சிக். பெக் லீவ்' எண்டு வழமை போலை உன்ரை 'பொஸ்' சில்வாவுக்கு 'நிப்ளை' பண்ணியிருக்கிறன்".

"எங்கடை பிரச்சினைகள், கஷ்ரங்கள் அவங்களுக்கு எங்கை விளங்கப் போகுது? ஏதோ வேணுமெண்டு அங்கை படுத்துக் கிடக்கிறம் எண்ட மாதிரி அவங்களின்ரை நினைப்பு. நாட்டு நிலைவரத்தை சாதகமாக்கி சீவிக்கப் பாக்கிறம் எண்ட மாதிரி ஒரு சந்தேகம்".

"நாங்கள் இப்பிடியே 'சபர்' பண்ண வேண்டியது தான். அது போக மகள் மீரா எப்பிடி?"

"சீ ஸ் ஒல்றயிற். உடம்பு பிரள ஆரம்பிச்சிருக்கிறாள். பத்து நாளும் அவளை மடியிலை வைச்சிருந்தது தான் உருப்படியாக நான் செய்த ஒரே வேலை".

"அப்ப நான் நினைச்சதுக்கு மாறாக, சாந்திக்கு பெரிய ஆறுதல்தான் குடுத்திட்டு வந்திருக்கிறாய்" என்று கூறிச் சிரித்தவாறே நண்பன் இவனது மேசை விளக்கினை ஒளிரவிட்டு, அறை விளக்கினை அணைத்துவிட்டு படுக்கையில் சென்று விழுந்தான்.

வானொலியில் இனிய புல்லாங்குழல் இசை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. ரி. ஆர். மகாலிங்கமோ அல்லது வேறொரு தமிழ்நாட்டு கலைஞனோ வாசித்ததாக இருக்கலாம்.

இவனது பார்வை மீண்டும் மேசைப் பக்கமாகத் திரும்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசைவிளக்கில் சிலந்தி வலை பின்னியிருந்தது. ஒட்டடையும், தூசியும் மேசையினை மொத்தமாகக் குத்தகை எடுத்திருந்தது. சப்பாத்துத் துடைக்கும் பழைய 'பெனியனை' எடுத்து எல்லாவற்றையும் துடைத்தெடுக்க வேண்டுமெனத் தான் நினைத்தான். ஆனால், எழும்ப முடியாதவாறு தோள்மூட்டு "விண் விண்" என வலித்தது. முதுகெலும்பு, இடுப்பு யாவும் உடைந்து விட்டதோ போன்ற ஒரு உணர்வு.

கட்டிலில் இருந்தவாறே எட்டி மேசைமீதிருந்த கடிதங்களை இழுத்தெடுத்தான். மேசைமீது படிந்திருந்த தூசியில் கோடிட்டவாறே கடிதங்கள் யாவும் கட்டிலில் வந்து குதித்தன.

காரியாலயத்திலிருந்து வந்த தந்தி, மக்கள் வங்கியின் மாதாந்தக் கூற்று, சவுதி சென்ற நண்பன் சீலனின் கடிதம், அந்த மாதத்திற்கான 'மல்லிகை' இதழ், பண்டாரவளையிலிருந்து வந்த தாய் மாமனார் கடிதம் ஆக ஒவ்வொன்றும் தம்மை இனங் காட்டிக் கொண்டன.

புல்லாங்குழல் இசைக்கு போட்டியாக ரஞ்சித் "குர், குர்" என குறட்டை வாசித்துக் கொண்டிருந்தான்.

போட்டிருந்த 'ரீசேட்', 'பிசு, பிசு'ப்பாக உடலோடு ஒட்டி ஒரே அரியண்டமாக இருந்தது. பதினாறு மணித்தியால வியர்வை அல்லவா? கட்டிலை ஊன்றி மெல்லென எழுந்து, உடுப்புக்களை களைய ஆரம்பித்தான். கொடியில் தொங்கிய சாரத்தை உருவி எடுத்து, உடுத்துக் கொண்டான்.

'குளிப்பு ஒண்டு அடிச்சால் நல்லாத்தான் இருக்கும். ஆனால் தண்ணிச் சத்தம் கேட்டு வீட்டுக்காரன் எழுந்துவிட்டால்?' முகமாவது கழுவி வரலாம் என குனிந்து கட்டிலுக்கடியில் இருந்த 'சோப் கேசை' இழுத்தான். இழுத்த இழுவையில் 'கேஸ்' மூடி வந்து இவன் காலடியில் விழுந்தது. ஐம்பது சத நாணயமளவில் அல்லது அதற்கு சற்று குறைவானதாக மூன்று, நான்கு துண்டுகள் மட்டும் மூச்சுச்சளியாக பெட்டிக்குள் இழுபட்டன. ஊருக்குப் போன போது பெட்டிக்குள் புதிதாக 'சோப்' வேண்டிப் போட வேண்டுமென எண்ணிக் கொண்டது இப்போது தான் நினைவுக்கு வந்தது.

உடுப்புகளுக்குத் தேய்க்கும் சவர்க்காரத்தையும், கருவாடாகக் காய்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரண்டு சொந்த நிறமே தெரியாது மங்கிப்போன தனது துவாயையும் எடுத்தவாறே 'பாத் ரூம்' போனான். ஏறத்தாழ வீட்டின் எல்லா அறைகளி லிருந்தும் "குர், குர்" சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

'பைப்'பினைத் திறந்து விட்டு, அதன் கீழ் குந்தியிருந்தான். மெல்லிய சூடாக வந்த தண்ணீர் உடலுக்கு இதமாக இருந்தது. 'இந்தச் சத்தம் வீட்டுக்காரனுக்கு, அதுதான் 'பீறிஸ் மாத்தயாவுக்கு' எங்கே கேட்கப் போகிறது?' என்ற தைரியத்தில், உடல் சூடு தணியும் மட்டும் குளித்தான். உடலில் வழுவழுத்த எண்ணெய்த் தன்மையை உப்புச் சவர்க்காரம் சுத்தமாக எடுத்திருந்தது.

மீண்டும் அறைக்கு வந்த போது வானொலி 'நமோ, நமோ' இசைத்துக் கொண்டிருந்தது. அதை 'ஒவ்' பண்ணி மேசையில் வைத்துவிட்டு, கொண்டு வந்த 'ட்ரெவலிங் பாக்'கை 'கிளியர்' பண்ணினான். மனைவி சாந்தி 'அயன்' போட்டு வைத்த இவனது உடுப்புகள், "ஒவ்வீசாலை வந்து 'ரீ' போட்டுக் குடிக்கைக்குள்ளே இதுகளிலையும் ஒவ்வொண்டு எடுத்தியள் எண்டால் பசியும் அடங்கும். உடம்பும் உறுதியாகும்" என்ற முன்னுரையுடன் வைக்கப்பட்ட தட்டை வடை, பொரி விளாங்காய், புளுக்கொடியல் பார் சல்கள், யாவற்றையும் எடுத்து உரிய இடங்களில் அடுக்கி வைத்தவன் அடியில் கிடந்த ஒரு கட்டு கடிதங்களை எடுத்து மேசையில் போட்டான். வெளிநாட்டிலிருக்கும் தனது மகனுக்காக பக்கத்து வீட்டு தங்கம் மாமி தந்த கடிதம் உட்பட கொழும்பு, பண்டாரவளை என உள்நாட்டுக்குரிய கடிதங்களுமாக ஏறத்தாழ இரண்டு டசின் அதில் இருந்தது.

வெறுமையாகி விட்ட 'ட்ரெவலிங் பாய்க்'கை சுவரில் நீண்டிருந்த ஆணியில் கொழுவிவிட்டு குனிந்த போது காரியாலயத்திலிருந்து வந்த தந்தி கட்டிலில் கிடந்து மீண்டும் பயம் காட்டியது. அதை எடுத்து கசக்கி மூலையில் போட்டதில் மனதில் 'ரென்ஷன்' கொஞ்சம் குறைந்ததைப் போல் இருந்தது.

மின்விளக்கில் தொங்கிக் கொண்டு தந்தி மீட்டிக் கொண்டிருந்த சிலந்தி வலையும் மேசையை ஒட்டி ஆக்கிரமித்திருந்த ஒட்டடை, தூசியும் மனதுக்கு என்னவோ செய்தது. ஓசைபடாது மேசைப் பொருட்களை எடுத்து கட்டிலில் வைத்து மேசையைச் சுத்தம் பண்ணி பின்னர் கட்டிலையும் சுத்தமாக்கி பொருட்களை அடுக்கி விட்டு நிமிர்ந்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் பின்புற வாசல் பூட்டு திறபடும் சத்தம் கேட்டது. கையிலிருந்த பழைய பெனியனை சடாரென தூரத்தே போட்டுவிட்டு, எட்டி மேசை விளக்கினை அணைத்தான்.

இவன் எதிர்பார்த்ததை உறுதிப்படுத்துமாப் போலவே, 'பீறிஸ் மாத்தயா'தான் காறித் துப்பும் சத்தம் வெளியில் கேட்டது.

கட்டில் மேல் மெதுவாக இருந்து பின் மெள்ள மெள்ளமாக சரிய ஆரம்பித்தான். தனக்கென காத்துக் கிடந்த கடிதங்கள், மாதத்துக்கான 'மல்லிகை' எவற்றையுமே பிரிக்கக் கூட முடியாத தன் துர்அதிர்ஷ்டத்தை எண்ணினான். இன்னும் ஒரு பத்து நிமிடமோ அல்லது கால் மணித்தியால மோ அவகாசம் இருந்திருந்தால் மேலோட்டமாகவாவது சகலதையுமே பார்த்திருக்கலாம் தான். அதற்குள் இந்த வீட்டுக்காரன்?

காலி வீதி வழியே இரைந்து செல்லும் வாகனச் சத்தம் இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தது. காலி, மாத்தறை போன்ற வெளியிடங் களிலிருந்து கொழும்புக்கு வந்து சேரும் மினி பஸ்களாகவோ, பொலிஸ் ஜீப்புகளாகவோ அல்லது இராணுவ டிரக்குகளாகவோ அவை இருக்கலாம்.

படுக்கும் போது நேரம் பார்க்கக் கூட மறந்து போன தன்னை நொந்து கொண்டான். நேற்று இந்நேரம் மனைவியின் அருகாமையில் உறங்கியதும், மகளுக்காக மாட்டப்பட்டிருந்த அந்த மங்கிய மின்னொளியின் அருகில் கடிகாரத்தைப் பிடித்து அடிக்கடி நேரம் பார்த்துக் கொண்டதும் நினைவுக்கு வந்தது. அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் எழுந்து சோற்றுடன், உருளைக்கிழங்குப் பிரட்டல், பருப்பு என இவனுக்குப் பிடித்தமான தெல்லாம் சமைத்து பகலுக்கும், இரவுக்குமென இரு 'பார்சல்'களாக பொலித்தீன் தாள்போட்டு பழுதுபடாதவாறெல்லாம் கட்டித் தந்த சாந்தியின் கடமை உணர்ச்சியை வியந்து கொண்டான். பத்து நாட்களும் வேளைக்குச் சாப்பாடும் மகளுக்குப் பராக்குமாக நேரம் போனதே தெரியவில்லை. உள்நாட்டில் நிகழும் பதற்ற நிகழ்வுகள் போக, உணவுக்காகவோ அன்றி வேறு எவற்றுக்காகவுமோ மனதைப் போட்டு அலைக்கழிக்க வேண்டாத சீவியம். ஆனால் இனி?

காலையில் ஆமர்வீதி சைவக் கடைகளில் ஒன்றில் நான்கு, ஐந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியப்பம், மத்தியானம் காரியாலயத்திற்கு வரும், 'பொல் சம்பல்,' ஈரப் பலாக்காய் கறியோடு அரைவயிற்றை மட்டும் நிரப்பிக் கொள்ளும் அவிந்தது பாதி அவியாதது மீதியுமான சம்பா அரிசிச் சோறு, இரவில் பாணும் பட்டரோ, முட்டையோ ஏதோ ஒன்று. இதற்குள் "கண்டபடி முட்டை எடாதையுங்கோ 'பிறசர்' வரும். 'ரீ'யுக்கு சீனி குறைவாய் போடுங்கோ. பிறகு 'டயபிற்றிக்' வந்தால் ஒண்டுஞ் செய்யேலாது!" என வாரந் தவறாது கடிதங்கள் மூலம் சாந்தியின் அட்வைஸ் வேறு.

வவுனியா பஸ்ஸை பிடிப்பதற்கென ரவுணடி 'டிப்போ'விற்கு கொண்டு சென்று இவனைச் சேர்ப்பிப்பதற்காக, அதிகாலை ஐந்து மணிக்கு 'கேற்'றடியில் வந்து நின்று இவனது மருமகன் திரையன் சைக்கிள் 'பெல்'லடித்த போது, 'ரெடி'யாகி வெளிக்கிட்டு வந்தவனை வாசல் வரை வந்து வழியனுப்புகையில் "ஐடென்ரிக் காட் பொக்கெற்றுக்குள்ளை தானே?" என்ற வார்த்தையை மட்டும் சாந்தி இறுதியாகச் சொல்லிக் கொண்டாள். 'இந்த அடையாள அட்டையிலை மூன்று உயிர் தங்கியிருக்கு' என அப்போ இவன் நினைத்துக் கொண்டான்.

இன்று உடம்பு பிரட்டி எக்காளமிட்டுச் சிரித்து, முத்தந் தந்த மீரா அடுத்த முறை இவன் செல்லும் போது தவழ்ந்து வரலாம். ஒருவேளை வண்டிலை உருட்டி நடையும் பயிலலாம். கடந்த முறைக்கும், இந்த முறைக்கும் குழந்தையில் தான் எத்தனை வித்தியாசம்? இந்த வளர்ச்சி, பூரிப்பு எல்லாவற்றையுமே அடிக்கடி பார்த்து மகிழ இவனுக்குக் கொடுத்து வைக்கவில்லையே.

இவன் சிறுவனாக கிராமத்துப் பள்ளியில் சின்ன முதலோ, பெரிய முதலோ படித்த போது கிழமை தவறாது கொழும்பிலிருந்து வந்து சென்ற தனது தகப்பனாரை எண்ணிக் கொண்டான். வெள்ளிக்கிழமை இரவுகளில் இடியப்பமும், முருங்கைக்காய் சொதியோ, முட்டைப் பொரியலோ தயார் செய்து விட்டு அம்மா பத்து மணி வரை ஐயாவுக்காகத் தூங்கி வழிந்தது. இவன் மனதில் பசுமையாக இன்னமும் அழியாதிருக்கிறது. அப்போ சனி, ஞாயிறுகளில் ஐயாவோடு தான் இவன் இருப்பான், உண்பான், உறங்குவான்.

ஆனால், இப்போ? வெள்ளி இரவு பஸ் எடுத்தால் கூட சனி பகலில் தான் ஊர் செல்ல முடிகிறது. அதற்குள் இடை வழியில் கண்ணிவெடி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரடங்கு, ஹர்த்தால் என்று ஏதாவது நிகழ்ந்தால், வவுனியா ஆச்சிரமமோ, அல்லது வரணியில் யாராவது தெரிந்தவர்கள் வீடோ கதியெனக் கிடந்துவிட்டு செவ்வாயோ, புதனோ தான் வீடு செல்ல முடிகிறது. போய் அடுத்த சனியோ, ஞாயிறோ சந்தர்ப்பம் பார்த்து இங்கு வந்து சேர வழமை போல் காரியாலயத்திலிருந்து தந்தி வந்து மேசையில் கிடக்கும். இனி மூன்றோ, நான்கோ மாதங்கள் பொறுத்துத் தான் அடுத்த பயணம் பற்றி அதிகாரியுடன் 'பேச்சுவார்த்தை' நடத்த முடியும். அதுவும் மனைவிக்கு உடல் நலக் குறைவென்றோ அல்லது குழந்தைக்கு சோறுதீத்து, காது குத்து என்றோ 'காதுகுத்தி' சமயங்களில் வயதான அம்மா, ஐயாவுக்கு வலு 'சீரியஸ்' என்பது போல முகாரி ராகத்தில் முகத்தை வைத்திருந்து ஊரில் 'சென்ரர்' 'தியேட்டரில்' சிவாஜி கணேசனது பழைய படங்கள் பெருமளவில் பார்த்து வைத்திருந்ததில் இவனுக்கு அதெல்லாம் அத்துபடி.

நாளைக்கு காரியாலயத்தில் நடப்பதைக் கூட இவனால் தீர்க்க தரிசனம் பண்ண முடிகிறது. எட்டரைக்கு மட்டுமட்டாக 'அற்றண்டென்ஸ் சீற்றில்' கையெழுத்து வைத்து விட்டு இருக்கையில் இருந்ததுமே, இவனது பெயர் சத்தமாக அழைக்கப்படும். கண்ணாடிக் கதவைத் திறந்து உள்நுழைந்ததும் அதிகாரியின் கடுகடுப்பான முகம் தலைகீழாக இவன் விழித்திரையில் விழும். "வட் ஹபன்ட் ரு யூ?" என்பதே ஒரே கேள்வியாய் அமையும். இனி நடந்தவற்றை ஆங்கிலப்படுத்தி, அதிகாரிக்குப் புரிய வைத்து, அவரது அபிப்பிராயங்களையும், 'அட்வைஸ்'களையும் 'சிவனே' எனக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு இறுதியாக, அரோகராப் பரியாரியாரின் 'மெடிக்கல் சேட்டிபிக்கட்டை' 'சப்மிற்' பண்ணி 'லீவ் சிற்றில்' கையெழுத்தும் வாங்கி மேசைக்கு வர 'லஞ்ச் பார்சல்' இவனுக்காகக் காவலிருக்கும்.

பின்னர் தான் புத்தகங்களைத் திறந்து 'அரியேஸ்' வேலை பற்றி சிந்திக்க வேண்டும். அவற்றினைச் செய்து முடித்து, வழமைக்குத் திரும்ப நாட்களை 'அலோக்கேற்' பண்ண வேண்டும்.

பால் விநியோகிக்கும் லொறி பெருஞ் சத்தத்துடன் காலி வீதியில் சென்று கொண்டிருந்தது. இப்போ மணி பன்னிரெண்டரையாகவே அல்லது ஒரு மணியாகவோ ஆகியிருக்கும். மூன்று மணிக்கெல்லாம் எழுந்து குளிக்கும் 'ஐயா' என அங்கு தங்கியிருப்பவர்களால் அழைக்கப்படும் முன்னறை முதியவர் இன்னும் கொஞ்ச நேரத்தில் 'பாத் ரூமில்' தண்ணீரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரப்ப தகரத்தை நிமிர்த்தலாம்.

இவனுக்கு நித்திரை இன்னும் வருவதாக இல்லை. பயணம் வந்த இரவில் இப்படிப் படுத்துப் புரண்டு சிந்திப்பதும், இனி அடுத்த பயணம் பண்ண எத்தனை மாதங்கள் செல்லுமோ என அங்கலாய்ப்பதும், திருமண மான பின் இவன் வாழ்வில் இன்றொடு பதினாறாவதோ, பதினேழாவதோ தடவையாக நிகழ்கிறது. 'இந்த பஸ், ரெயின் எல்லாம் ஒழுங்காக ஓடி கொடிகாமத்தில் போய் பிரதி வெள்ளி இரவுகளும் இறங்கும் நாள் வரும் போது மன அலைச்சல், உடல் அலைச்சல் இன்றி எப்படியாக நிம்மதியாக வாழலாம்?" என்று கூட, சற்று மிகையான எதிர்பார்ப்புத் தான் ஆனாலும் முடிவில் இவன் எண்ணத் தவறுவதில்லை.

வடக்குத் திசையில் ஜன்னலூடே வெகு உயரத்தில் ஏதோ வெளிச்சம் தோன்றி, மறைந்தது போல இவன் உணர்ந்தான்.

"கூ..... கூ....." இரவைக் கிழித்துக் கொண்டு எரிபொருள் 'றெயினோ,' சரக்கு 'றெயினோ' ஏதோ ஒன்று தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிப்பது, மிக அண்மித்ததாகவே இப்போ இவனுக்குக் கேட்கிறது.

வடக்கில் அதே வெளிச்சம் இன்னோர் தடவை மிக அருகாமையில் தோன்றி மறைந்தது.

-"வீரகேசரி வாரவெளியீடு"

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995

இருட்டினில் வாழும் உயிர்களுக்கு..!

"சொல்லடா வாய் திறந்து அப்பா என்று! சொல்லடா!" என 'நீலவானம்' திரைப்படத்தில் தேவிகா 'பாடியது' போலக் குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு பாடவேண்டும் போல இருக்கிறது எனக்கு.

"பின்னை என்ன? கொழும்பிலிருந்து வந்து ஏழோ எட்டு நாட்க ளாகியும் இன்னமும் இந்தப் 'பயல்' என்னுடன் சேரவோ, என்னுடன் பழகவோ மறுக்கிறானே?"

"அவன் உடம்பு பிரட்டும்போது ஊரிலிருந்து போனியள். அவன் தவழ்ந்து, நடந்து, கதைக்க ஆரம்பிச்சதற்குப் பிறகு இப்ப திரும்ப வந்திருக்கிறயள். ஏறத்தாழ ஒண்டரை வருஷ காலமாக உங்கடை அரவணைப்பில்லாமலேயே வளர்ந்தவனைப் பார்த்து, இப்ப திடீரென்று 'அப்பா எண்டு சொல்லடா' எண்டால், எப்படி..... அப்பா?" இது என் மனைவி சாந்தியின் சமாதானம்.

நேற்று காலையிலாக இருக்க வேண்டும். நிவாரண உலர் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கென கூட்டுறவுக் கடைக்குச் செல்வதற்காக சாந்தி புறப்பட்ட போது, மகனை என்னிடம் தந்து விட்டு, வீட்டுக் கேற்றைக் கூடத் தாண்டியிருக்க மாட்டாள். அழுது குளறி அயலில் உள்ள சனங்கள் எல்லோரையுமே கூட வைத்து விட்டான் மகன். பக்கத்து வீட்டுத் தங்கம் மாமி வந்து குழந்தையை என்னிடமிருந்து வாங்கியது தான் தாமதம்....., அவனது அழுகை, குளறல் எல்லாமே பறந்து விட்டது.

இந்தப் பதினாறோ பதினேழு மாதங்களும் அப்படி எங்கும் வெளிநாட்டில் இருந்து விட்டு வந்தவனல்ல நான். இதே நாட்டில் ஒரு நானூறு கிலோமீட்டர்கள் தூரத்திற்கு அப்பாலில் தான் இருந்து விட்டு வந்திருக்கிறேன். இந்தக் குறுகிய தூரமே எப்படியாக எம்மை அந்நியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி வைத்திருக்கிறது?

வாழ்வில் திருமணத்தின் பின் போராட்டமோ என்னவோ, எனது திருமணம் நடந்தது ஒரு போராட்ட கால சூழலில் தான். மண முடித்த மறுநாளே வடமராட்சித் தாக்குதலால் பிறந்த மண்ணுக்குள்ளேயே இடம் பெயர ஆரம்பித்தோம். அன்று தொட்டு இன்று வரை இந்த பத்து வருட காலமும் வடக்கிலும், தெற்கிலுமாக அகதியும், பயணியுமாகத்தான் காலங்கள் கடந்திருக்கிறது.

"இஞ்சாருங்கோ அப்பா, தம்பியை ஒருக்கால் பார்த்துக் கொள்ளுங்கோ. நான் ஓடிப்போய் நல்ல தண்ணி அள்ளிக்கொண்டு ஓடி வாறன். பிறகு 'ரியூசன்' முடிஞ்சு மீராவும் வந்திடுவள். எல்லாரும் ஒண்டாகச் சாப்பிடலாம்" என்றவாறே ஒரு நாரியில் வெறுங் குடமும், மறு நாரியில் மகனுமாகச் சாந்தி என் முன் வந்து நின்றாள்.

"என்னாலை ஏலாதப்பா! வேணுமெண்டால் நல்ல தண்ணியள்ள நான் போட்டு வாறன். உந்தப் பயல் அழ வெளிக்கிட்டானெண்டால் என்னால ஆத்தேலாது. அயலையே கூட்டி விடுவான். பிறகு மரியாதை கேடு!"

"கதையை விட்டுட்டு பேசாமல் பொடியைத் தூக்கி வைச்சிருங்கோ. அவன் அழான். அழுறான், அழுறான் எண்டு கொண்டு இப்படியே விலகியிருந்தியள் எண்டால் எப்ப அவன் உங்களோட அணையிறது? எப்ப சேருறது?" சாந்தி கூறும்போது 'கேற்' திறந்து யாரோ வளவுள் நுழையும் அரவங் கேட்டது.

மகள் மீரா தான் 'ரியூசன் கிளாஸ்' முடிந்து ஓடி வந்து கொண்டி ருந்தாள். "நாலாம் ஆண்டுக்கே நாளைக்கு நாலு மணித்தியாலங்கள் 'ரியூசன்' வைக்கினமே. என்ன படிப்பப்பா இது? கொஞ்ச நாளைக்காவது பொடியளோட சந்தோசமாக இருக்கலாமெண்டு பள்ளிக்கூட விடுமுறை யாகப் பார்த்து வந்தன். இதென்னடா எண்டால் பள்ளிக்கூட காலங்களிலை வந்திருந்தால் இன்னும் நல்லாயிருந்திருக்கும் போலை கிடக்கு".

"அப்பா! அப்பா!! 'ரீச்சர்' கேட்டுக் கொண்டு வரச் சொன்னவா..... நீங்கள் எப்ப கொழும்புக்குப் போறியளாம் எண்டு". வீட்டு முன் தாழ் வாரத்தில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்த, எனது மடி மீது வந்தமர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறே மகள் கேட்கிறாள்.

"ஏனாம் மகள்? 'ரீச்சரும்' அப்பாவோட கொழும்புக்குப் 'பிளேனிலை' வரப்போகிறாவாமோ? அப்பா கொழும்பிலையிருந்து வரைக்குள்ளேயே போறதுக்குமாகச் சேர்த்து 'ரிக்கட்' எடுத்துக் கொண்டு வந்தனான் எல்லே? பிறகு என்னெண்டு மகள் 'ரீச்சரையும்' கூட்டிக்கொண்டு போறது?"

"இல்லை அப்பா! 'ரீச்சர்' கனடாவுக்கு ஆருக்கோ 'லெட்டர்' அனுப்ப வேணுமாம். உங்களட்டைத் தந்து போடுவிக்கவாம்", புத்தகப் பையினை அருகிலிருந்த வாங்கிலில் வைத்தவாறே மகள் கூறுகிறாள்.

"இன்னும் ஆறேழு நாளைக்குள்ளை அப்பா போயிடுவார் எண்டு 'ரீச்சருக்கு' நாளைக்குச் சொல்லுங்கோ மகள்" என்று நான் கூறியபோது "சரி சரி..... அப்பாவும் அக்காவுமாகத் தம்பியைப் பார்த்துக் கொண்டிருங்கோ. நான் ஓடிப்போய் நல்ல தண்ணி அள்ளிக்கொண்டு ஓடி வாறன்" என்றவாறே மீராவுக்கருகில் மகனை இறக்கிவிட்டுச் சாந்தி வெறுங் குடத்துடன் வெளியே சென்று கொண்டிருந்தாள்.

நானில்லாத காலங்களில் நடைபெற்ற மாறுதல்களை மகள் என்னிடங் கூறிக் கொண்டிருந்தாள். "அப்பா, எங்கட வீட்டுக்குப் பின்னால நிண்ட பனை மரங்கள் எல்லாத்தையும் 'புள்டோசர்' போட்டுத் தறிச்சுப் போட்டங் கள் எண்ட கவலையிலை அம்மா இரண்டு மூண்டு நாட்களாகச் சாப்பிடா மல் அழுது கொண்டிருந்தவ. பனையெல்லாந் தறிச்சு பிறகு பெரிய வரம்பும் போட்டு 'சென்றியும்' போட்டதுக்குப் பிறகு அஞ்சாறு மாதங்களாக இங்கை இருக்கப் பயந்து நாங்கள் எல்லாரும் அப்பம்மா வீட்டிலை போயிருந்தம் அப்பா. இந்த 'சென்றியை' எடுத்து வல்லிபுரக்கோயி லடியிலை போட்டதுக்குப் பிறகுதான் இப்ப திரும்பவும் எங்கட வீட்டிலை வந்திருக்கிறம்".

அவ்வப்போது சாந்தி கடிதங்களில் எனக்கெழுதிய விடயங்களை தனது அனுபவங்களாக இப்போது மீரா கூறிக்கொண்டிருந்தாள்.

"தம்பி அழேலையோ?" கேட்டுக்கொண்டே நிறை குடத்துடன் சாந்தி வந்து கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்காவின்ரை கதைகளைத் தம்பியும் கேட்டுக்கொண்டிருந்தான். அதால இண்டைக்கு ஊரைக் கூட்டேல்லை" என்று நான் கூறியபோது "அப்பா, அப்பா வாங்கோ தம்பியோடை ஒழிச்சு விளையாடுவம்" என்று எனது கைகளை உலுப்பிக் கொண்டிருந்தாள் மகள்.

"இப்ப வேண்டாம் மகள். வெய்யில் தணியட்டும் பின்னேரம் விளையாடுவம்".

"அப்பா! அப்ப இப்ப எனக்கு ஏதாவது சோதனை வையுங்கோ".

"ஏன் மகள் உள்ள சோதனைகள் போதாதெண்டோ?"

"என்னப்பா சொல்லுறியள்?"

"இல்லை மீரா. பள்ளிக்கூடத்திலை மீரா தானே முதலாம் பிள்ளை. பேச்சுப் போட்டி, விளையாட்டுப் போட்டி எல்லாத்திலையும் மகளுக்குத் தானே முதலாமிடம்? பிறகுமேன் அப்பா சோதனை வைப்பான்?"

"சும்மா புகழாதையுங்கோ. சின்னப் பருவத்துக் கெட்டித்தனமும் ஒரு கெட்டித்தனமே? ஏன் நீங்களும் கூடத்தான் அந்த நாளையிலை 'ஸ்கொலஷிப்' எல்லாம் பாஸ் பண்ணினியள். பிறகு என்ன நடந்தது?" சாந்தி எப்போதும் இப்படித்தான். மகள் முதலாம் பிள்ளையாக வந்தாலும்..... அதற்கு மேலும் ஏதோ கிடைக்க வேண்டும் என்பது போல!

"ஓகே மகள். இப்ப அப்பா மீராவுக்கு ஒரு சோதனை வைக்கப் போறன். ஒரு 'பேப்பரும்', பென்சிலும், கொண்டு வாங்கோ பார்ப்பம்" என்று நான் கூறியதுமே, தம்பியையும் தள்ளி விட்டு விட்டு துள்ளித் குதித்தவாறே மீரா எழுந்து சென்று 'பேப்பரும்', 'பென்சிலும்' எடுத்து வந்து பரீட்சைக்கு ஆயத்தமானாள்.

நான் வைக்கப்போகும் பரீட்சை என்னவாக இருக்கலாம்..... என்ற ஆர்வம் மேலிட தம்பியையும் தூக்கியவாறே சாந்தியும் என்னைப் பார்த்தாள்.

"இப்ப ஒரு எழுத்தை நான் சொல்லுவன். அதைக் கொண்டு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணின் பெயரும், ஒரு பெண்ணின் பெயரும், ஒரு இடத்தின் பெயரும், ஒரு பொருளின் பெயரும் எழுத வேணும். சரி தானே மகள்? உதாரணத் துக்கு 'து' எண்ட எழுத்தை நான் சொன்னன் என்டால், ஒரு ஆணின் பெயருக்குத் தம்பியின்ரை பெயரையும் அது தான் துவாரகன் எண்டும், ஒரு பெண்ணின் பெயருக்குத் துளசி எண்டும், ஒரு இடத்தின் பெயருக்கு துன்னாலை எண்டும், ஒரு பொருளின் பெயருக்கு தும்புக்கட்டை எண்டும், எழுதலாம். விளங்குது தானே மீரா?" என்று நான் சொன்ன போது "இதிலை என்னப்பா திறமை இருக்கு? அப்படி என்ன புதுமை இருக்கு?" என்பது போலச் சாந்தி என்னை நோக்கினாள்.

"இப்படிப்பட்ட பரீட்சைகளாலை வளரிளம் குழந்தைகளின் அனு பவங்களை, எண்ணங்களை, அந்த குழந்தைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு களை, பிடிப்புகளை அறிந்து கொள்ள முடியும். எதிர்காலச் சமுதாயத்தை, ஏன் எதிர்கால நிகழ்வுகளைக் கூட ஊகிக்க முடியும்" என்று நான் கூறினேன்.

"அப்ப ஒரு எழுத்தைச் சொல்லுங்கோவன் பாப்பம்", என்றாள் சாந்தி.

"மீரா பரீட்சைக்குத் தயார் தானே? இப்போ உனக்குத் தரப்பட்டுள்ள எழுத்து கீ அல்ல கி" என்றேன். வானொலியில் பாட்டுக்குப் பாட்டு நாடாத் தும் பி. எச். அப்துல் ஹமீட் பாணியில்.

"என்னப்பா கினாவோ?" என்று கேட்டாள் மீரா.

"ஓம் மீரா கி ! கிளிக்கு வாற கி" என்றேன்.

மகள் சிந்திக்க ஆரம்பித்தாள்

ஏறத்தாழ சாந்திக்கு மட்டுமே கேட்கும் வகையிலே சொல்கிறேன். "சாந்தி இந்த எழுத்தை வைச்சுக்கொண்டு சாதாரணமாகவுஞ் சிந்திக்கலாம். சர்வதேச மட்டத்திலையும் சிந்திக்கலாம். இதே எழுத்தை கொழும்பிலை ஒரு நாள் ஐந்தாம் ஆண்டு படிக்கிற உன்ரை கொண்ணற்றை மகனுக்கும் குடுத்தன். அவன் கிளிங்டன், கிளியோபாத்ரா, கிரீஸ், கிற்றார் எனச் சர்வதேச மட்டத்திலை சிந்திச்சு எழுதியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரிவி பார்த்து, ரேடியோ கேட்டு வளருகிற பிள்ளையள் அதுகள். அழகு ராணிப் போட்டியையும், கிரிக்கெட் மச்சையும் அன்றாடம் இருந்த இடத்திலேயே இருந்து பார்க்கிறதுகள்..... அப்படிச் சிந்திக்கிறதிலை என்ன வியப்பு? ஆறேழு வருஷங்களாக, பிறந்ததிலையிருந்தே இருட்டுக்குள் ளேயே வாழுகிற சீவன்கள் எங்கட பிள்ளையள். இதுகளட்டை அப்படி யெல்லாம் எதிர்பார்க்க முடியுமா?" என்பது சாந்தியின் அங்கலாய்ப்பு.

"பாப்பம் இந்த மண்ணிலை படிக்கிற ஒரு முதல்தர மட்டத்திலை இருக்கிற பிள்ளை எப்படிச் சிந்திக்குது எண்டு?" என்றவாறே திரும்பி மகளை நோக்கினேன்.

"சரியா அம்மா?"

"ஓமப்பா எழுதிப்போட்டன்".

"எங்கை மகள் எழுதினதை வாசியுங்கோ பாப்பம்".

"கி' னாவிலை ஆணின் பெயர் கிட்டு, பெண்ணின் பெயர் கிருஷாந்தி, இடத்தின் பெயர் கிளாலி, பொருளின் பெயர் கிரனைட்டு.

சாந்தி என்னை நோக்கினாள் 'இதுவும் சர்வதேச மட்டத்து சிந்தனை தானே?' என்பது போலிருந்தது அவளது பார்வை.

நான் அண்ணாந்து வானத்தை நோக்கினேன். பெருமழை ஒன்றைப் பொழிந்து ஓய்ந்திருந்தாலும் மறுபடியும் பெய்வேன் எனப் பயங் காட்டிக் கொண்டிருக்கிறது நீலவானம்.

-"வீரகேசரி வாரவெளியீடு"

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002

வருக்கள்

வெய்யில் அதி உக்கிரமாகக் கொளுத்திக் கொண்டிருந்தது.

மண்டையைப் பிளக்கிற தலைவலி. 'அட்வான்ல் லெவலில்' ஆழ்வாப்பிள்ளை சேர் 'ஓகனிக் கெமிஸ்றி' படிப்பிக்கும் போது வருமே..... அந்த மாதிரி.

வீதியோரம் குடைவிரித்திருந்த அந்த ஆலமரத்தடியில் சிறிது நேரம் தரித்து நிற்கின்றேன். தஞ்சமென வருவோர்க்கு எல்லாம் தாராளமாகவே இடம்கொடுப்பதற்கென நிறையவே கிளைகளைச் சுமந்துகொண்டு நின்றது அந்த மரம்.

இன்னும் ஒரு மைல் தூரமாவது சைக்கிளை மிதிக்க வேண்டும். அதன் பின்னர் தான் ஓவியர் பரசுராமன் வீட்டிற்குப் பிரிந்து செல்லும் முடக்கு வரும்.

ஆறு வருடங்களுக்கு முன்னர், இறுதியாக ஊர் வந்து நின்றபோது, பரசுராமனைச் சந்திக்கக் கூடவே தங்கராசனும் வந்திருந்ததில், பிரதான வீதியிலிருந்து கோபித்துக்கொண்டு போகுமாப் போல் இருண்ட, ஒடுங்கிய பனங்கூடல் பாதையொன்றில் போய் முடியும் அவரது வீட்டிற்குச் செல்லும் வழியினை இனங்காண அதிகளவில் சிரமம் இருக்கவில்லை.

அந்த மைமல் பொழுதிலும் தங்கராசன் என்ன மாதிரி பனங்காணி களினூடாகக் கூட சைக்கிளை வேகமாக ஓட்டிச் சென்றான். ஈடுகொடுக்க முடியாது 'சைக்கிள் பெடல்' தடக்கி நாலைந்து தடவைகள் பனை மரங்க ளோடு மோதியபடியே நான் அவன் பின்னால் சென்றேன்.

தண்ணி பட்டபாடாகச் செல்லுமளவிற்கு அந்தப் பாதைகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கராசனுக்கும் அப்படி ஒரு காதலா? என்று கூட நான் வியந்ததுண்டு.

ஆனால், காதல் அப்பாதைகளுக்கும் அவனுக்கும் அல்ல, கிளாலிக் கடலேரிக்கும், அவனுக்குமே என்பதை நிரூபித்தது அவனது அகால மரணம்.

வடமராட்சிச் சனங்களெல்லாம் கால்நடைகள் சகிதம் இடம்பெயர்ந்து வன்னி சென்ற காலகட்டத்தில் தான் கிளாலிக் கடற்பரப்பில் தங்கராசனின் மரணம் நிகழ்ந்தது.

'தங்கராசன் என்ன ஆனான்?' என்று பரிதவித்த அவனது குடும்பத்தினருக்கு சன்னங்கள் துளைத்த அவனது உடல் பூநகரிக்கரையில் ஒதுங்கியது என்ற தகவல் மட்டுமே கிடைத்தது.

'சைக்கிள்' மீண்டும் ஓடத் தொடங்குகின்றது.

கற்றாளைகளும், காரை முட்செடிகளுமாக காடுபத்திப்போயிருந்த நிலங்களிலெல்லாம் குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. சில குடிசைகளின் ஒத்தாப்புகளிலிருந்து வானொலிப் பெட்டி 'விக்கி, விக்கி' செய்தியை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. அருகே 'சைக்கிளை' கவிழ்த்து வைத்து கைகளால் 'பெடலைச்' சுழற்றி வானொலிப் பெட்டிக்கு சக்தியூட்டியவாறே புன்னகை கழன்ற முகங்களுடன் சிலர்.

'ஏ நயின்' பாதைபோல் எங்கள் நிலங்களுக்கான பாதை எப்போ திறக்கும்? என்ற ஆசுவாசப் பெருமூச்சுடன் அவர்கள்.

வீதியின் இரு மருங்கிலும் இடையிடையே கிடுகுக் கொட்டிலினால் அமைக்கப்பட்ட சிறு சிறு கடைகள்.

தேங்காய்களோ, மரக்கறிவகைகளோ, விறகுக் கட்டுகளோ குவிக்கப்பட்டும், வாழைக்குலைகள் தொங்கிக்கொண்டும், மண்ணெண்ணெய் போத்தல்களில் அடைக்கப்பட்டும் அக்கடைகளில் இருந்தன. "வா, வா" என அழைத்தவாறே இளநீர் குலையும் ஓரிடத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால், பெரும்பாலும் எல்லாக் கடைகளிலும் அதன் சொந்தக்காரர்கள் கொட்டாவி விட்டபடியே இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய்களையும், காய் பிஞ்சுகளையும் குவித்து அன்றாட சீவிய த்துக்காக இம் மண்ணில் இந்த நிமிடங்களில் கடை விரித்திருக்கும் இவர்கள் தங்களது சொந்தத் தேசங்களில் தென்னந்தோப்புகளின் சொந்தக்காரர் களாகக் கூட இருந்திருக்கலாம்.

தனது முகப்பு வேலி முட்கம்பிகளை எங்கோ ஒரு 'சென்ரிப் பொயிண்டிற்காக' தாரை வார்த்துக் கொடுத்த நிலையில் ஒரு சிறிய பள்ளிக் கூடம். ஏதோ ஒரு கனிஷ்ட வித்தியாலயம் என வானவில் வடிவில் சுவரில் எழுதியிருந்தார்கள். துப்பாக்கி, குண்டுமாரி பொழிந்ததில் பாடசாலையை இனங்காட்டும் பெயரும், கூடவே சரஸ்வதி சிலையின் முடியும் உடைந்து கம்பியில் தொங்கிக் கொண்டிருந்தன.

அப்பாடசாலை அகதிகளால் நிரப்பி வழிந்து கொண்டிருந்தது. வகுப் பறைகளில் சேலைகளும். பாவாடை, சட்டைகளும் உலர்ந்து கொண்டி ருந்தன.

பள்ளிக்கூடத்தில் ஒரு குழாய் கிணற்றடி. அதனருகில் மரக்கறிச் சமையல் மணத்தது. கோயில்களில் அன்னதானத்திற்கு காய்கறி அவிக்கு மாப்போல சிலர் நீள அகப்பை கொண்டு அடுப்பிலிருந்த கிடாரத்தினைத் துளாவிக் கொண்டிருந்தார்கள்.

என் நினைவு சரியானதெனில் இடது பக்கமாக அடுத்துவரும் முச்சந்தியே பரசுராமனின் வீட்டிற்குச் செல்லும் திருப்பமாக இருக்க வேண்டும். தங்கராசன் தவறிவிட்ட செய்தியினை நானறிந்த பின்னர், ஐந்தாறு தடவைகள் இதே பாதையூடு பரசுராமனிடம் அவனோடு செல்வது போன்ற கனவு வரும் போதெல்லாம்..... பரசுராமனின் வீட்டுக்கு செல்லும் முடக்கு வருமுன்னரே கனவு குழம்பிப்போவது..... ஏனோ இப்போது நினைவில் வந்து தொலைக்கிறது.

எதிரே குரோட்டன் செடிகளுடனும், சில அசோக மரங்களுடனும் கூடிய அமெரிக்கன் 'பாஷன்' வீடொன்று 'வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமென்பதில்லையே!' என்ற பாரதியின் வரிகளுக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருந்தது.

'இந்தப் பானை வற்றினால்தான் எங்கள் வயிறு நிரம்பும்' என்று எழுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டியதைப் போன்ற முகத்துடனும், மோர்ப் பானை ஒன்றுடனும் பேரூந்து தரிப்பில் ஒரு சிறுவன். பாடசாலைச் சீருடைத்துணியில் தைத்த அரைக் காற்சட்டையை அவன் அணிந்திருந்தான்.

'இதமான சவாரிக்கு இச் சைக்கிளைத் தேர்ந்தெடுங்கள்!' என்று ஏதோ ஒரு 'சைக்கிளிற்கு' பத்திரிகையில் வந்த விளம்பரத்தினை ஞாபகமூட்டுமாப் போல், நாலைந்து பெண்பிள்ளைகள் வீதியின் பெரும் பகுதியினை குத்தகைக்கு எடுத்த நிலையில் என்னை ஓரங்கட்டி, நான் வந்த திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு வழிவிட்டு என் 'பலன்ஸ்சை' சரிசெய்து; 'பெடலினை' மிதித்தபோது அந்த முச்சந்தி என்னை நிலப்பாவாடை விரித்து வரவேற்றது.

ஆனால், அந்த முச்சந்தி முடமாக்கப்பட்டிருந்தது.

அதனை மையங்கொண்டு பெரிய 'பண்ட்' ஒன்று பின்னால் தோட்டத்தை ஊடறுத்துச் செல்கிறது.

புகையிலையும், மரவள்ளியுமாக அப்போதெல்லாம் காட்சியளித்த தோட்டத்தறையில் புல் பூண்டுகளும், செடிகளும் பச்சைக் கம்பளம் விரித்திருந்தன.

முடிச்சவிழ்ந்த மண் மூடைகளும் முக்கோணமாக சரிந்த பச்சைப் 'பெயிண்ட்' அடித்த தகரப் பீப்பாக்களுமாக 'சென்றிப் பொயிண்ட்' ஒன்று உருக்குலைந்து போயிருந்தது.

'மிதிவெடி கவனம்' என்ற அறிவிப்புப் பலகை ஒன்று நிலத்தில் சிரசாசனம் செய்து கொண்டிருந்தது.

வீதியெங்கும் 'ஓ' என்ற ஒருவித அமைதி.

குரக்கன் பிட்டு வாசனை எங்கிருந்தோ வந்து மூக்கைத் துளைத்தது. கீரி ஒன்று பற்றைகளைப் பிய்த்தவாறே பாய்ந்து சென்றது.

வீதியின் மறுபுறத்தே மாடி வீடொன்றின் கூரையும், படிகளும் இந்நிமிடமே நியூட்டனின் புவியீர்ப்புக் கோட்பாட்டினை நிரூபித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவோம் என அடம்பிடித்துக் கொண்டிருந்தன.

அவ்வளவின் மூலையில் உக்கிப்போன கூரைக்கு ஈடுகொடுத்தவாறே ஒரு கொட்டில். நாலைந்து மாடுகள் இரைமீட்டவாறே அக்கொட்டிலில் 'அகதிகளாகி'யிருந்தன.

வீட்டு முற்றத்தில் எரிந்து கருகிய 'கார்' ஒன்று கோணலாக நின்றது.

'சைக்கிளைத்' திருப்ப எத்தனித்தேன்.

"அண்ணை, ஆரைத் தேடுறியள்?" உடைந்த குரலொன்று. அவ் வீட்டினை ஒட்டினாற் போல் அமைந்திருந்த குச்சொழுங்கையில் இருந்து மிதந்து வந்து என்னைத் திடுக்கிடவைத்தது.

உருக்குலைந்த காட்சிகளில் ஸ்தம்பித்து நின்றதில் மாடுகளை மேய்த்தவாறே ஒழுங்கைக்குள் இருந்த அந்த நடுத்தர வயது மனிதர் மீது இதுவரை என் கவனஞ் செல்லவில்லை.

எண்ணெய், தண்ணீர் கண்டு நாளாகிவிட்ட தலைமயிர், ஒடுங்கிய தாடை விழுந்த முகம், 'நீர்க் குமிழி' நாகேஸை நினைவூட்டும் தோற்றம். சாரத்தை மடித்துக் கட்டியிருந்தார். இரு கால்களையும் நீட்டிக்கொண்டு விழுந்த மதில் கல்லில் இருந்தவாறே இன்னமும் என்னையே பார்த்த வண்ணமிருந்தார்.

"இந்த ஒழுங்கையிலை இருக்கிற ஒருவரை சந்திக்கவெண்டு வந்தனான்". வலது காலை நிலத்தில் ஊன்றியவாறே அவரது பதிலுக்காகக் காத்து நின்றேன்.

"நீங்கள் கனகாலமாக ஊரோடை இல்லையோ?"

"ஓமோம். நான் கொழும்பிலை வேலை செய்யிறனான். ஏழெட்டு வருசத்துக்கு பிறகு 'ஏ நயின்' பாதை திறந்த கையோடை..... இப்பதான் வந்திருக்கிறன்".

"அதுதானே பார்த்தன். இப்ப ஐஞ்சாறு வருஷமா, அதுதான் ஆமிக்காறன் வந்ததுக்குப் பிறகு உந்தப் பகுதியில் சனங்கள் இடம்பெயர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறை எங்கையோ இருக்குதுகள். ஆனால், எங்கையெங்கை இருக்கினமோ தெரியாது. கொஞ்சச் சனம் வன்னிக்கும் போயிட்டுதுகள் எண்டு அறிஞ்சன்".- இன்னமும் கால்களை அகல விரித்தபடி இருந்தவாறே அவர் சொன்னார்.

அப்போதுதான் எனது பார்வை அவரைத் துழாவியது.

அவரது காலின் வலதுபுறத்தே 'ஜெய்ப்பூர்' கால் பொருத்தப் பட்டிருந்தது. 'சைக்கிளை' விட்டிறங்கி நான் அவரது பக்கமாகச் செல்கின் றேன்.

"நீங்கள் இங்கைத்தையில் ஆளோ?"

"இல்லைப் பாருங்கோ. நான் தென்மராட்சியைச் சேர்ந்தனான். எங்கடை பகுதியில் சனங்கள் இடம் பெயர்ந்ததோடை இப்பிடித்தான் அலைஞ்சு திரிஞ்சு கடைசியிலை 'பங்கார்' அந்த வளவுக்கை வந்தி ருக்கிறம்" என்றவாறே பின்னால் இருந்த குடிசை ஒன்றைக் காட்டினார்.

"அப்ப இந்த விபத்து....."

"அதை ஏன் அண்ணை கேக்கிறியள்?" நீட்டிய ஜெய்ப்பூர் கால் அப்படியே இருக்க இடதுகாலை இழுத்து கல்லோடு சேர்த்துக் கொண்டார்.

"இல்லை..... உங்களுக்குச் சொல்லுறதிலை சங்கடம் எண்டால் பரவாயில்லை" என்றவாறே எனது விபரங்களையும் பரசுராமனைத் தேடிவந்த தேவையினையும் அவருக்கு கூறிக்கொண்டிருந்தேன்.

"ஓ! அந்த எழுத்தாளர் நீங்கள் தானோ?" என்றவர், என்ன நினைத் தாரோ, நீண்ட பெருமூச்சுடன் தனது மறுபக்கத்தைப் புரட்ட ஆரம்பித்தார்.

❖

தென்மராட்சி மண்ணில் வசதியான வீடொன்றில் மனைவி, இருபெண் பிள்ளைகளுடனும் நிறையக் கற்பனைகளுடனும் இவர் வாழ்ந்து வந்தார். அவ்வூர் சங்கக் கிளை ஒன்றில் 'மனேஜர்' வேலை இவருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய வேளையில்.....

அசாதாரண புதிய கோலங்களுடன் அன்றைய காலை புலர்ந்தது. குண்டுகளை அம்புகளாகப் பொழிந்து கொண்டு வானில் ஏழெட்டுப் 'பொம்மர்'கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

'பட, பட'வென ஏதோ முறிந்து விழுகின்ற சத்தம் ஊரெங்கும் ஒலித்தது.

ஏணையில் படுத்திய குழந்தைகளைக் கூட தூக்க அவகாசமில்லாமல் சனங்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர்.

அவர்களோடு சேர்ந்து குடும்பத்தினருடன் இவரும் இடம்பெயர ஆரம்பித்தார்.

"வந்திட்டாங்கள்..... வந்திட்டாங்கள்..... கெதியாப் போங்கோ".

பின்னே வந்தவர்கள் அவசரம் காட்டினார்கள். வானம் வேறு இன்னமும் உறுமிக்கொண்டிருந்தது.

ஒவ்வொருதர் முகத்திலும் பெருங் குழப்பம்.

குடிமனைகளைக் கடந்து வெளியினூடாக, வடமராட்சியை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

வானிலிருந்து 'பொம்மரும் ஹெலியும்', குண்டுகளையும், சன்னங்களையும் மூர்க்கத்தனமாகப் பொழிந்து கொண்டிருந்தன. சீறிக்கொண்டு அருகேயே குண்டு வந்து விழுவது போன்ற பிரமை. செவிப்பறை வெடித்துத் தொங்குவதைப் போன்ற உணர்வு.

கடந்து வந்துகொண்டிருந்த வெளியிலேயே சனங்கள் விழுந்து படுத்தனர். குஞ்சு, குருமனுகளின் 'கீயோ மாயோ' குரல்கள் காற்றில் கலந்து அந்த வெளியெங்கும் ஒலித்தது.

சிறிது நேரத்தில் வானம் ஓய்ந்தது.

சனங்கள் கண்களை விழித்தவாறே எழுந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் கொண்டு வந்த மூட்டை முடிச்சுகள் எல்லாம் சிதறிப் போய்க் கிடந்தன.

முதலில் இவர் எழுந்தார்.

தலையை வெளியே நீட்டிப்பார்த்தவாறே பதினாறு வயதுடைய மூத்தமகள் பின்பு எழுந்தாள்.

கீச்சுக்குரலுடன் இளையவள் அடுத்ததாக எழுந்தாள்.

ஆனால் இவரது மனைவி....

"அம்மா.... அம்மா.... எழும்புங்கோ..... அப்பா! அம்மா எழும்பாவாம் எழுப்புங்கோ!"

இளையவள் சத்தமிட்டாள்.

மூட்டை முடிச்சுகளைச் சரிசெய்து கொண்டிருந்தவர் ஓடிவந்து குனிந்து பார்த்தார். அவளது கண்கள் மூடியிருந்தன. வயிற்றுப்பக்கத்தில் சேலை பிசுபிசுத்தது. நிலத்தில் இரத்தம் சொட்டுச் சொட்டாகச் சிந்திக்கொண்டி ருந்தது. உடலைத் திருப்பிப் பார்த்தார். நெஞ்சில் குண்டு பாய்ந்திருந்தது.

"அம்மா.... என்ரை அம்மா....." இளையவளின் ஒலி வெளியில் முன்னால் சென்று கொண்டிருந்தவர்களையும் திரும்பவைத்தது.

மீண்டும் வானத்தில் ஒலி கேட்க ஆரம்பித்தது.

"ஆள் முடிஞ்சு போச்சு. பிரேதத்தை விட்டுட்டு பிள்ளையளையும் புருஷனையும் இழுத்துக்கொண்டு வாருங்கோ. பிறகும் பொம்மர் வரப்போகுது."

❖

"அப்பா.... அம்மா எழும்பாவாம்.... எழுப்புங்கோ..... அப்பா..... அம்மா எழும்பாவாம்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவிலிருந்து வந்த குரல் கேட்டு மெல்ல எழுந்து அவர் உள்ளே செல்கிறார். 'சைக்கிளை' குச்சொழுங்கையின் முகப்பில் விட்டுவிட்டு நானும் அவரைப் பின் தொடர்கின்றேன்.

அந்தக் குச்சொழுங்கைக்குள் பூவரசம் சருகுகள் மாநாடு நடாத்திக் கொண்டிருந்தன. நான்கு, ஐந்து நாட்களாக சாணி அள்ளப்படாது அப் படியே வரண்டு போய்க்கிடந்தது.

"அப்பா... அம்மா.... எழும்பாவாம்".

பத்து வயது மதிக்கத்தக்க பெண்பிள்ளை ஒன்று குடிசைக்குள் இருந்து கீச்சுக்குரல் எழுப்பிக்கொண்டிருந்தது.

"என்ன அண்ணை பார்க்கிறியள்? தாய் செத்த நாளையிலையிலிருந்து இந்தப் பிள்ளையின்ரை நிலையும் இப்பிடியாப் போச்சு".

அது பனையோலையால் வேயப்பட்ட ஒரு பழைய குடிசை. கூரை யின் சில இடங்களில் தகரம் செருகப்பட்டிருந்தது.

வாங்கில் ஒன்று, குடிசையின் பெரும் பகுதியை ஏப்பம் விட்டிருந்தது.

குடிசையின் ஒரு மூலையில் ஒரு பழைய கள்ளிப்பெட்டி. அதன்மேல் பிடி கழன்ற ஒரு 'சூட்கேஸ்.'

மாலின் மறுபுறத்தே மூட்டிய அடுப்பில் சோற்று உலை கொதித்துக் கொண்டிருந்தது.

நிலத்தில் ஒரு 'பிளாஸ்டிக்' வாளி நிறைய நீருடன்.

அருகே அரிக்கன் சட்டியில் வெள்ளை அரிசி. மூடலொன்றில் முறிக்கப்பட்ட பயிற்றங்காய்கள். கீரைக்கட்டு ஒன்று சருவச் சட்டியிலிருந்து தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

சவரம் செய்யப்படாத முகத்தைப்போல வேப்பமிலைகளும், பூக்களும் முற்றத்தை நிரப்பியிருந்தன.

"எங்கை உங்கடை மூத்த பிள்ளையைக் காணேலை? பள்ளிக்கூடம் போயிருக்கிறாவோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை, அவள் பொடிச்சி வன்னியிலை".

"ஏன் ஆரும் சொந்தக்காரறோடையோ?"

"இல்லை..... போராளியளோடை!" அமைதியாகக் கூறிவிட்டு அவர் என்னை உற்றுப்பார்த்தார்.

நான் அவரது முகத்தை நேருக்கு நேர் நோக்கும் சக்தியற்றவனா கின்றேன்.

குடிசையின் கப்பினைப் பிடித்தவாறே மெல்ல மெல்ல அவர் அடுப்பின் அருகே உள்ள குந்தில் அமர்கின்றார்.

"அண்ணை, உந்த வாங்கிலிலை ஒல்லுப்போலை இருங்கோ. மிச்சக் கதையையும் கேட்டுப்போட்டுப் போங்கோ".

வாங்கிலில் அந்தப் பிள்ளையின் அருகே சென்று இருந்தேன். அண்ணாந்து பார்ப்பதும் நிலத்தைப் பார்ப்பதுவுமாக அப்பிள்ளை. அதன் கண்கள் பயத்தால் விரிந்திருந்தன. முகத்தில் சொல்ல முடியாத சோகம் குடிக்கொண்டிருந்தது.

"இந்தப் பிள்ளைக்கு நான் செய்யாத வைத்தியமில்லை. பாராத டாக்குத்தருமில்லை. மந்திகையிலை கூட ஒண்டரை மாதம் மறிச்சு வைச்சிருந்து பார்த்தினம். ஒண்டுமே சரிவரேல்லை. இப்ப கடவுளிலை பாரத்தைப் போட்டிட்டு இருக்கிறன். வைத்திய செலவுக்கு உள்ளதெல்லாம் போக. வைச்சிருந்த நகை, நட்டை வித்து நாலைஞ்சு மாடு வாங்கினன். அந்த வருவாயிலைதான் இப்ப எங்கடை சீவியம் போகுது. ஒரு நாள் முன்னுக்குள்ள 'ஆமிச் சென்றி'க்குள்ளை மாடொண்டு போட்டுது. அதைப் பிடிக்கவெண்டு பின்னாலை நானும் போனன். பாழாப்போன மிதிவெடி ஒண்டு கிடந்து வெடிச்சதிலை மாடும் போய்ச்சு, என்ரை ஒரு காலும் போய்ச்சு".

சட்டென்று அவரது முகம் எனது பக்கமாகத் திரும்பியது. அதில் ஒரு வரட்டுக் குறுநகை.

"வேலோன் அண்ணை, ஏதோ கதைப் புத்தகம் போடுறதாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னியளே. அதிலை எங்கடை இந்தக் கதையையும் எழுதுங்கோ.... பரசுராமனைப் போல புத்தகத்துக்கு முகப்புப் படம் தான் என்னாலை தர முடியேல்லை. ஆனால், முகப்புப் படத்துக்கான கதையைத் தந்திருக்கிறன்".

அவரது கண்களில் ஆயிரங்காலத்து நட்புத் தெரிந்தது.

அந்தப் பிள்ளையின் பக்கமாகத் திரும்புகிறேன். இன்னமும் அது ஆகாயத்திலும், தரையிலும் அம்மாவைத் தேடிக் கொண்டே இருந்தது.

அரிசியைக் கிழைந்தவாறே அவர் சமையலைத் தொடரும் பணிகளில் இறங்கலானார்.

வாங்கிலிருந்து நான் எழுகின்றேன்.

"அப்ப நான் போட்டு வரப்போறன் பாருங்கோ....."

"ஓ..... ஓ..... இந்த வெய்யிலுக்குள்ளாலை மூண்டு நாலு கட்டை 'சைக்கிள்' உழக்க வேணுமெல்லே..... வெளிக்கிடுங்கோ!"

அவருக்கு ஏதாவது உதவவேண்டும் என மனம் கூறிற்று.

புத்தக அட்டைப் பட ஓவியம் வரைவதற்கு பரசுராமனுக்குக் கொடுப்பதற்காக வைத்திருந்த ஆயிரம் ரூபா சட்டைப் பைக்குள் இருப்பது நினைவிற்கு வந்தது.

அதைக் கையில் எடுத்தவாறே அவரை அணுகினேன்.

"என்ரை ஒரு சின்ன அன்பளிப்பாக இதை வைச்சிருங்கோ".

"என்னண்ணை அது?"

"காசு ஆயிரம் ரூபா. மகளுக்கு ஏதாவது வாங்கிக் குடுங்கோ".

"இப்ப எங்களுக்கு வேண்டியது உதில்லை அண்ணை..... நீங்கள் போட்டு வாங்கோ. அது சரி கொழும்புக்கு எப்ப போறியள்?"

"படிக்கிற இரண்டு பிள்ளையளோடை குடும்பம் கொழும்பிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டபடியாலை வலு கெதியிலை போயிடுவன். உங்களுக்கும் இன்னும் கொஞ்ச நாளையிலை சொந்த இடத்துக்குப் போயிடலாம் எண்டு நினைக் கிறன்".

"இழந்த பூமி திரும்ப வந்திடலாம். பாதை திறந்து நாங்கள் பயணமும் செய்யலாம். ஆனால், போன உயிரும், உடைமைகளும். நினைவிழந்த இந்தப் பிள்ளையின்ரை நினைவும், நிம்மதியும், என்ரை காலும் திரும்ப வந்திடுமோ?" அவரது கண்களில் இப்போது சொல்லமுடியாத வன்மம் தொனித்தது.

நான் மௌனியாக நின்றேன்.

"அப்ப சரி வேலோன் அண்ணை.... நீங்கள் நடவுங்கோ!" கிழைந்த அரிசியை உலையில் போட்டார் அவர்.

அவருக்குக் கொடுக்கவென்று எடுத்த காசை மீண்டும் சட்டைப் பைக்குள் வைத்தவாறே .... குடிசையை விட்டு குச்சொழுங்கையில் இறங்கி சைக்கிள் விட்ட இடத்தை நோக்கி நடக்கின்றேன்.

"அப்பா ..... அம்மா எழும்பாவாம்.... எழுப்புங்கோ!"

அந்தக் கீச்சுக்குரல் காற்றில் மிதந்த வந்து என் காதுகளில் மோதியது.

வந்த வழியே சைக்கிளைத் திருப்பி பெடலை மிதிக்கிறேன்.

வெய்யில் இன்னும் விட்டபாடில்லை.

ஆனால், அந்த வெய்யில் அதி உக்கிரமாகக் கொளுத்திக் கொண்டிருப் பதாக என்னால் இப்போ உணரமுடியவில்லை.

-"ஞாயிறு தினக்குரல்"

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002

வேட்டை

"என்ன இவனை இன்னுங் காணேலை?"

படலையடியில் படரும் மல்லிகைக்கொடி பத்தாவது தடவையாக பகவதியின் புலம்பலைக் களைப்புடன் உள் வாங்கிற்று.

கையில் அகப்பட்ட மல்லிகைப் பூ ஒன்றினை ஆய்ந்தவாறே பகவதி திரும்பி மீண்டும் 'போட்டிக்கோவை' நோக்கி நடந்தாள்.

"அம்மாளாச்சி! இவன் தம்பி நல்ல செய்தி கொணர்ந்தான் எண்டால் உனக்கு மடைவைச்சுப் பொங்குவன்" வடக்கே இரண்டு பனங்காணி களுக்கு அப்பால் வானோங்கி நிற்கும் கோயில் கோபுரத்தைப் பார்த்து பகவதி சிரமேல் கைகளை வைத்துக் கூப்ப ஏதுவாக பனை மரங்கள் காவோலைகள் சரசரக்க விலகி இடங்கொடுத்தன.

"என்னடி பிள்ளை உதிலை நிண்டு கும்பிடுறாய்? கோயிலடிக்கு வரேலையே?" அணிந்து வந்த சோடி மாறிய 'பாட்டா' செருப்பினை கழற்றி படலைக்கு மேலாக மல்லிகைப் பந்தலடியில் எறிந்து விட்டு பகவதியின் கண்களை உற்றுப் பார்த்தவாறே கோணாத்தை ஆச்சி வின வினாள்.

"வேட்டைத் திருவிழாவுக்கு அம்மாளாச்சி நாலு மணிக்குத் தானேய ணை வெளிக்கிடுவா. நீயென்ன நேரத்தோடை போறாய்?" குரலில் உடைவுகளை ஏற்பட விடாது மிக்க அவதானமாக அதேசமயம் அமைதி யாகவே பகவதி கேட்டாள்.

"வேட்டையாடிப் போட்டு ஆறு மணிக்கிடையிலை திரும்பி விட வேணு மெண்டு அவங்கள் சட்டம் போட்டிருக்கிறாங்களாம். அதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூண்டு மூண்டரைக்கே அம்மாளாச்சி வேட்டைக்கு வெளிக்கிட்டுடுவா எண்டு நேற்றைக்குக் கோயிலடியிலை பறைஞ்சினம்". கோடிச்சேலை கமகமக்க, கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது கோயிலடிக்குச் செல்லவென நடுத்தெருவுக்கு இறங்கிய கோணாத்தை ஆச்சி தெருவின் இரு மருங்கும் நோட்டமிட்டாள்.

பின்னால் இரண்டு கவடு தூரத்தில் வேலிப் பூவரசு நிழலில் இலை யான்களை விரட்டுவதில் வலு மும்முரம் காட்டியவாறே படுத்திருந்த கட்டாக்காலி மாட்டைத் தவிர, ஒரு சீவனுமே கண்ணுக்குத் தென்பட வில்லை.

குசுகுசுத்த குரலில் பகவதியை படலையடிக்கு மெதுவாக அழைத் தாள் ஆச்சி.

"பிள்ளை, உன்ரை பொடிச்சியைப் பற்றி சங்கதி ஒண்டு கேள்விப் பட்டன் மெய்யே?" கிழவியின் கோடிச்சேலை வாசனை பகவதியின் நாசியில் உரச, கேட்ட கேள்வி உள்ளத்தில் கவ்வியிருந்த சோகத்தினை முகத்திற்கும் வியாபிக்கச் செய்தது.

வளவின் முன்னே விரிந்து பரந்து கிடக்கும் வயல்வெளி வரம்புகளில் தத்தித் திரிந்த குருவிகள் பெருஞ்சத்தம் எழுப்பியவாறே பறந்து சென்றன.

பகவதி வார்த்தைகளைக் கூட்ட முனைகிறாள். தொண்டைக்குள் ஊற்றெடுத்த சளி நாக்கின் புரள்விற்கு முட்டுக்கட்டை போட்டது.

"திருவிழாவுக்கெண்டு கப்பலிலை நேற்று வந்த என்ரை நடுவிலான் தான் சொன்னான் பிள்ளை. கொழும்பு முழுக்க உன்ரை பொடிச்சியைப் பற்றித்தான் ஒரே கதையாம். சுவிசிலை உன்ரை மேளும், புரியனும் பேச்சுப் பறைச்சல் இல்லாமல் பிரிஞ்சு இருக்கினமாம்".

வேட்டைக்கு அம்மனை ஏற்றிச் செல்வதற்கான 'டிராக்டரை' ஓட்டிய வாறே 'லைட் எஞ்சின்' கிட்டிணன் மட்டும் அத்தருணம் அத்தெருவால் சென்றிராவிட்டால், பகவதி எழுப்பிய ஓலம் தெற்கு வீட்டில் மணக்கும் சமையலையும் இடைநிறுத்தி ஜன்னல் 'கேட்'டின் சேலைகளையும் விலக வைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது தானணை சுவிசுக்கு பொடிச்சியோடையும், மருமோனோ டையும் 'ரெலி போனிலை' கதைச்சு நிலவரமறிய இவன் தம்பி ஒன்பது மணி போல 'ரவுண்' பக்கம் போனான். பொழுது மத்தியானமாப் போச்சு. ஆளை இன்னுங் காணேல்லை. கோயிலடிச் சந்தியிலை கிடக்கிற 'ரெலி போன்' நேற்றுப் பெய்த மழையாலையாக்கும் வேலை செய்யேலையாம். இல்லாட்டி உதிலை நானே போய் கதைச்சிருப்பன்". கையில் இழுபட்ட மூக்குச்சளியை மல்லிகைக்கு உரமாக்கிவிட்டு பகவதி சொன்னாள்.

பகவதியின் வாய் வீசிய நாற்றமும், வெறுங்காலில் சுடுமணல் காட்டிய அகோரமும் மேலும் கேள்விகளை கேட்க வைக்காது கிழவியை கோயிலு க்கு வழி நடத்திச் சென்றன.

"காலம்பறவிலையிருந்து ஒரு தண்ணி வென்னியும் குடிக்கமால் இருக்கிறாய் போலை கிடக்கு. ஒல்லுப்போலை தேத்தண்ணியாவது வைச்சுக் குடி. பொடியன் வந்திடுவன்". போகும் கிழவி எழுப்பிய குரல் பகவதியின் உள்ளத்திற்கு ஒத்தடங் கொடுத்தது.

படலையைத் திறந்தவாறே பகவதி இப்போது நடுத்தெருவில் வந்து நின்று பார்த்தாள்.

வயலினை மூலைவிட்டமாக ஊடறுத்து வடமேற்கே செல்லும் 'அவங்களின்ரை பண்ட்' தெரியும் தூரம் மட்டிலும் நாதனின் தலைக் கறுப்பையே காணவில்லை.

தெருப்பக்கமாக தெற்கே தூரத்தே யாரோ வருவது போல் தெரிகிறதே.....

சற்று நேரம் நின்று பார்த்தாள்.

"எட அது ஆரோ இடம் பெயர்ந்து வந்த பிறத்தியில் சனம்!"

படலையைத் திறந்து, 'போட்டிக்கோ'வடிக்கு வந்தவள், தேமா மரத்தின் கீழ் குந்தில் அமர்ந்து கொண்டாள்.

'கலியாணம் கட்டி கூடி வாழத் தொடங்கி ஆறு மாதங்கள் கூட ஆகேல்லை. அதுக்கிடையிலை இதுகளுக்கு என்ன பிரச்சனை வந்தது?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுவிசிலிருந்து வந்த 'வெடிங் கசெட்' இன்னும் ஊர் முழுக்கவும் ஓடி முடியவில்லை. அதற்குள்ளை.....'

" 'அன்ரி' உங்கடை மகளையும், மருமகனையும் பார்க்கைக்குள்ளை சாலினியையும், அஜித்தையும் மாதிரிக் கிடக்கு". யுத்தத்தினால் இடம் பெயர்ந்து வந்து பின் வீட்டில் குடியிருக்கும் குடும்பத்தினர் நேற்று 'கசெட்'டைக் கையளிக்கும் போது கூறுகையில் பகவதியின் முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சி பொங்கியது.

அவர்கள் சென்ற, கையுடன் வெளித்திருந்த வானம் திடீரென்று கறுத்து. ஊரே 'பவர் கட்டில்' மூழ்கிய மாதிரி ஆனது.

அம்மன் வீதிவலம் வந்து, வசந்த மண்டபத்தை அடையும் போது, பேய் மழை ஒன்று ஆரம்பித்தது. வயல் புழுதி அமர்ந்து போய், வெள்ள வாய்க்கால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. திருவிழாவிற்கு வந்தவர்கள் எல்லோரும் தெப்பமாய் நனைந்தபடி வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

கொட்டும் மழையில் குடையையும் நனைத்து, தானும் நனைந்தவாறே வந்த நாதனே இளைக்க இளைக்க அதைச் சொன்னான்.

"அம்மாளாச்சி! ஆரப்பு சொன்னது உனக்கு?"

இடியுடன் போட்டியிட்டது பகவதியின் ஓலம்.

"அக்கை, எதுக்கும் நாளைக்கு காலமைக்கு பொடிச்சியோடை 'ரெலிபோனிலை' கதைச்சு என்ன நடந்ததெண்டு கேட்டுக் கொண்டு வருவம். இப்ப பதறாமல் இரு பார்ப்பம்".

மழை ஓயும் மட்டும் நாதன் பகவதிக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டு அங்கேயே இருந்தான்.

❖

பகவதி வீட்டு படலைக்கு முன் வேலியோரமாகப் படுத்திருந்து தன்மேல் மொய்த்த இலையான்களை விரட்டுவதில் தோல்வி கண்ட மாடு, எழுந்து நின்று குடக் கணக்கில் கழித்த சிறுநீர் நிலத்தில் வாய்க்கால் கட்டி வேலி ஓரம் ஓடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலைக் கிளப்பிய மாடு, தெரு எருப்பொறுக்கி சீவியம் நடாத்தும் தெய்வானை ஆச்சிக்கு வருமானம் தந்துவிட்டு அசை போட்டவாறே இப்போது வயற் பக்கமாக முன்னேறுகிறது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இதே ஆனியில் அம்மன் கோயில் திருவிழாவிற்கென புருஷன் ஊரிற்கு வந்து நின்றது இன்னும் புத்தம் புதிய திரைப்படப் பிரதியாக பகவதியின் மனத்திரையில் விரி கின்றது.

மூன்று நாலென போட்டிக்குச் சிகரங் கட்டித் திருவிழா நடத்திய காலம் அது. நாலாவது சிகரங்கட்ட முன்வீதியில் இடம் இல்லாது நாலாந் திருவிழா உபயகாரர் கோயில் மடப்பள்ளியைச் சுற்றியும் கட்டிவிட்டார்கள்.

மூண்டு கூட்டு பெரிய மேளம், சின்னமணியின் வில்லுப்பாட்டு, பாட்டு கோஷ்டி என அடுத்த நாள் அதிகாலை ஆறு மணி மட்டும் நிகழ்ச்சிகள் தொடரும். இப்படித் தான் ஒரு தடவை பாட்டுக் கோஷ்டி கானமிசைத்து முடிய அடுத்த நாட்காலை ஆறரை மணியாகிவிட்டது.

பிறகு அம்மன் வீதி வலம் வரும் சகடை தள்ள சனங்கள் இல்லாது, சப்பறம் கட்ட வந்தவர்களையும், சிகரம் கட்ட வந்தவர்களையும் 'லைட் எஞ்சின்' காரரையும், 'ஸ்பீக்கர்' காரரையும் மன்றாடிக் கேட்கவேண்டிய தாயிற்று. அந்தச் சம்பவத்திற்குப் பிறகு காலை நாலரை மணிக்கெல்லாம் நிகழ்ச்சிகளை முடித்துவிடவேண்டுமென்று குருக்கள் கட்டாய நிபந்தனை விதித்திருந்தர்.

மூன்றாம், நாலாம், ஆறாம், ஏழாம், எட்டாம் திருவிழா உபயகாரர்களே இரவு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வர். அந்நாட்களில் எல்லாம் வில்லுப் பாட்டு நிச்சயம் இடம்பெறும்.

பொதுவாக, சின்னமணியின் வில்லுப்பாட்டு, தட்சணாமூர்த்தியின் தவிலுக்குப் பின்னர் நள்ளிரவில் களைகட்டும். பின்னர் விடிய விடிய பாட்டுக் கோஷ்டி கானமிசைக்கும். சின்னமணி கதை சொல்லி முடிந்த கையோடு பகவதிக்கு இமைகள் கனத்துவிடும். கொட்டாவி விட்டவாறே கோயிலுக்குத் தெற்கே கொன்றை மரத்தடியில் நின்று பாட்டுக் கோஷ்டியை ரசிக்கும் புருஷனையே புதிதாகப் பார்ப்பது போல வைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் வாங்காது பார்ப்பாள். தற்செயலாகத் தேர்முட்டியடியை நோட்டமிடும் அவனுக்கு அவளது பார்வை குறுக்கிட்டு அதன் அர்த்தத்தைப் புரிய வைக்கும்.

அதன் பின்னர் அவன் கோயிலுக்கு தெற்கே சாமியார் மடங்களை ஊடறுத்துச் சென்று வயல் வெளியூடு விரியும் அத் தெருவிலுள்ள தனது வீட்டுப் பக்கமாக செல்வான். பகவதி பின்னால் செல்வாள். திருவிழாச் சாட்டில் கள்ளமாக 'சென்ரல் தியேட்டரில்', 'செக்கண்ட் ஷோ' படம் பார்த்துவிட்டு எவருக்கும் பிடிபடாது இருப்பதற்காக பூங்கொல்லையைச் சுற்றிச் சாமியார் மடத்தடியில் மிதந்து அப்போது தான் கோயில் வீதிக்குள் நுழையும் இளவட்டங்கள் அசடுவழிய இவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொள்வர்.

பகவதியும், புருஷனும் வீடு சென்று 'பாத் ரூம்' போய் வந்து பச்சைத் தண்ணி குடித்துவிட்டு படுக்கை போட்ட பின்பே பாட்டுக் கோஷ்டியினர் பக்திப் பாடல்களைப் பாடி முடித்து. சினிமாப் பாடல்களை இசைக்க ஆரம்பிப்பர். 'பஞ்சணை வேண்டுமோ. நெஞ்சணை போதுமே!' என்று நல்லையாவின் ஒலிபெருக்கி உச்சஸ்தாயியில் சத்தம் எழுப்பும். அதன் தாற்பரியம் பகவதியின் புருஷனுக்கு நிதர்சனத்தில் இனிக்கும். அநேகமாக அத்தகைய ஒரு மகோற்சவ நாளில் தான் பகவதிக்கு 'தங்கி'யிருக்க வேண்டும்.

அடுத்த ஆண்டு சித்திரை பிறந்து வந்த முதல் திங்கள் இரவு நோக்காடு கண்ட பகவதியை 'சைக்கிள் கரியரில்' இருக்க வைத்து லாம்பு வெளிச்சத்தின் உதவியுடன் வயல்வெளிக் குறுக்குப் பாதையால் 'சைக்கிளைப்' பத்திரமாக உருட்டிச் சென்று அண்மையில் உள்ள ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தார்கள். அன்றிரவு மகப்பேற்று அறைக்குப் போனவளை மறுநாள் காலையில் தான் 'ஸ்ரெட்சரில்' தள்ளிக் கொணர்ந்து கட்டிலில் படுத்தினார்கள். கட்டில் கால்மாட்டில் பொருத்தப்பட்டிருந்த தொட்டிலில் கிடத்திய குழந்தையின் 'ம்மாய்..... ம்மாய்' அலறலில் தான் மத்தியானம் போல பகவதி கண் விழித்தாள்.

ரோஜா மலரைப் போல் பெண் குழந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தில் பிறந்த மகளுக்கு 'ம' வரிசையில் பெயரினை குடும்பிச் சாத்திரியார் விதந்துரைத்தார். "அந்த அம்மாளாச்சியே எங்களுக்கு குழந்தை யாக வந்து வாய்ச்சிருக்கிறாள். மனோன்மணி எண்டு வைப்பம்" என்றாள் புருஷனிடம் பகவதி.

சித்திரை பத்தின் முன் பிறந்த குழந்தை, புத்திரி ஆனதில் பகவதி நிறையவே மகிழ்வுற்றாள்.

கார்காலம் பிறந்தது. ஆவணி ஞாயிறு ஒன்றின் மைமல் பொழுது.

வயல்வெளிக்குள் கிளித்தட்டு விளையாடி விட்டு, ஊறும் வியர்வை யுடன் ஊரில் உள்ள பொடிச்சியளுக்கு 'மாக்ஸ்' போட்டுக் கொண்டு வரம்படியில் நின்ற அவ்வூர் இளைஞர்களை நோக்கி புழுதி அப்பிய ஒரு 'சைற் மொடல் கார்' வந்து நின்றது. "உதைத் திருத்திறதுக்கு இங்கினக் கை 'றிப்பயர் கராஜ்' ஒண்டும் இல்லையே?" என அவ்விளைஞர்களுள் கட்டையாக இருந்த ஒருவன் சொல்லி முடிய முன்னரே, அரையில் நெறி கட்டியவர் போல கால்களை எட்ட வைத்தபடியே வாட்டசாட்டமான ஒருவர் காரிலிருந்து இறங்கி வந்தார்.

வந்தவர் கூட்டத்தில் நெடும் பனையாய் நின்ற ஒரு சிவலைப் பொடி னைப் பார்த்துச் சொன்னார். "தம்பியவை, நான் ஹபரணை 'சேவையர் காம்பிலை' இருந்து வாறன். பத்திரகாளி அம்மன் கோயிலடியிலை பகவதி எண்டு அவையளின்ரை வளவு எங்கினைக்கை இருக்கு?"

"பங்கார் அதிலை இருக்கு. அலம்பல் வேலி அடைச்ச புதுக் கல்வீடு".

"இல்லை நான் ஹபரணையிலை 'சேவையராக' இருக்கிறன். என்ரை 'பாட்டியிலை' தான் அவர் வேலை செய்யிறார். அவவுக்கு ஒரு சங்கதி சொல்ல வேணும்" என்றபடியே அவர் பகவதி வீட்டுப் பக்கமாக அமந்து கிடந்த தெருப் புழுதியைக் கிளப்பியவாறே சென்று கொண்டிருந்தார்.

அவர் வளவிற்குள் சென்ற முதல் நான்கு நிமிடங்கள் நிசப்தமாகவே கழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது நிமிடம், "ஐயோ! என்ரை ராசா என்னை விட்டுட்டுப் போட்டியோ! ஐயோ! நான் இனி என்னத்தைச் செய்வன்!" என்று பகவதி எழுப்பிய ஓலம் ஊரெங்கும் எதிரொலித்தது.

மெள்ள மெள்ள வளவினுள் சனங்கள் கூட ஆரம்பித்தார்கள்.

"எப்படியும் சவம் எடுக்க எங்களிலை ஆரும் வரத்தானே வேணும்?" வந்தவரிடம் ஊரவர்கள் கேட்டார்கள்.

பொறுப்பானவர் போல அங்கு நின்ற ஒருவரை அழைத்துக் கொண்டு படலைப் பக்கமாக விரைந்தவாறே ஹபரணைக்காரர் கூறினர். "காடையன் கள் உடம்பையும் விட்டு வைக்ககேவில்லை., 'ரயர்' போட்டுக் கொளுத்திப் போட்டான்கள்".

"ஐயோ! வாற மாதம் பொடிச்சியின்ரை சோறு தித்துக்கு வாறன் எண்டுட்டுப் போனியே..... என்ரை ராசா" பகவதியை ஆற்றப் பலரும் பாடுபட்டார்கள். முடிவில் ஆற்ற வந்தவர்களும் ஒரு பாட்டம் அழுது விட்டுச் சென்றார்கள்.

❖

பத்ரகாளி அம்மன் கோயில் மணி இரந்து இரந்து ஒலித்து சனங்களை வேட்டைக்கு அழைக்க ஆரம்பித்து விட்டது.

ஆண்கள் வெள்ளை வேட்டி கட்டி வியர்க்கும் வெறுமேலுடனும், பெண்கள் சீவி சிங்காரித்து பூக்கள், பால், பழங்களை ஏந்தியவாறு கற்பூர வாசனையுடனும் கோயிலை நோக்கி இப்போது அணிவகுத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் பெரும்பாலானோர், வன்னிக்கெனவும், கொழும்பு, கண்டிக் கெனவும், வெளிநாட்டிற்கெனவும் புலம்பெயர்ந்த அவ்வூராரின் வீடுகளில் தற்போது தஞ்சம் கொண்டிருக்கும் வடமராட்சி கிழக்கு மற்றும் தென் மராட்சியைச் சேர்ந்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல்வெளியை நோக்கிச் சென்ற கட்டாக்காலி மாடு இப்போது 'பண்ட்'டிற்குச் சமாந்தரமாகச் செல்லும் கட்டைப்புளியடித்திடல் பக்க மாக விலகி நின்று மேய்ந்து கொண்டிருந்தது.

பத்தாம் ஆண்டு மட்டும் பகவதி மகளை கூப்பிடு தூரத்திலுள்ள கிராமத்துப் பாடசாலைக்கே அனுப்பி வைத்தாள். ஆண்டு ஐந்தில் புலமைப் பரிசில் சித்தி யெய்தியவுடனேயே கடற்கரைக் கல்லூரிக்கு மாற்றும் எண்ணம் அடிமனதில் இருந்தாலும், "கெட்டிக்காரப் பொடியள் எல்லாம் பள்ளிக்கூடத்தை விட்டுட்டுப் போனால் மிச்சப் பிள்ளையளை வைச்சிருந்து நாங்கள் என்ன பட்டி மேய்க்கிறதோ?" என்று அதிபர் அபிப்பிராயப் பட்டதில் அவ்வெண்ணம் கைகூடாது போயிற்று.

பூப்பெய்திப் பெரியவளான பின்பும் கூட நாலு கவடு வைத்து 'இன்ரவலுக்கு' மகள் வந்து செல்வதற்குப் பகவதி அனுமதிக்கவில்லை. "பொடி பாவம். வெய்யில் சுட்டுப் போடும்" என்பது பகவதியின் விவாதம்.

பாடசாலைக்குக் கிழக்கே ஒரு சுருட்டுக் கொட்டில். நாலைந்து தார்ப் பீப்பாக்களை வெட்டி தகரங்களாக்கி கொட்டிலுக்கு கூரை போட்டிருந் தார்கள். பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு 'மெயின் ரோட்'டையும் தாண்டி சுருட்டுச் சுற்ற அங்கு வந்து போனார்கள். கிழமைக்கு ஒரு தடவை குருநாகலில் இருந்து வரும் 'லொறி' பெட்டி பெட்டியாக கோடா மணக்க சுருட்டுக்களை சுமந்து செல்லும். போர் தொடங்க, போக்குவரத்துக்கள் தடைப்பட, சுருட்டுக் கொட்டிலின் எல்லை முட்கம்பிகளும் 'சென்ரி'களுக் காக எடுத்துச் செல்லப்பட்டன. கொட்டிலின் பின்புறத்தினை ஆமணக் கம் புதர்கள் ஆக்கிரமித்திருந்தன.

பகல் உணவுடன் செல்லும் பகவதி சுருட்டுக் கொட்டிலுக்கு மகளை அழைத்து, சோற்றைக் குழைத்து தானே ஊட்டி அனுப்புவாள். குமரியான பின்பும் மகளுக்கு பகவதி சாப்பாடு ஊட்டி விடும் சங்கதி கொட்டிலுக்கு செங்கோணத்திலுள்ள கோயில் தீர்த்த மடத்தில் 'காட்ஸ்' விளையாடும் இளவட்டனுகள் ஊடாக கூடப் படிக்கும் பொடியன்களுக்கும் வெளித்து விட்டது. ஏற்கனவே சூட்டப்பட்ட 'மணிப்புறா' என்ற பட்டத்துடன் அன்றி லிருந்து மனோன்மணிக்கு 'சூட்டி பபா' என்றொரு மேலதிக விருதும் கொடுக்கப்பட்டது. பாடசாலை 'டிசிப்பிளின் மாஸ்டரின்' மகனே அந்த விருது வழங்கலுக்கான பிரேரணையை முதலில் முன் மொழிந்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோன்மணி 'ஓ லெவலில்' எட்டுப் பாடத்திற்கும் 'டீ' எடுத்ததால் பாடசாலைக்கே பெருமை எனக் கூறி ஒரு மாலைப் பொழுதில் அதிபர் பருத்தித்துறை வடைப் 'பக்கெட்'டுடன் அவர்களது வீட்டிற்கே வந்து கதைத்தபோதே அதிபருக்கு பற்கள் முப்பத்தியிரண்டும் இன்னமும் உறுதியாக இருக்கும் உண்மையினை மனோன்மணி கண்டுபிடித்தாள்.

"இந்தப் 'பிறின்சிப்பல் மோட்டச் சயிக்கிளிலை' வரக்குள்ளை, மாவில் முடக்கிலை 'லொறி' அடிச்சு 'றோட்'டிலையே சாகக் கடவான்!" என ஆறாம் வகுப்பில் பள்ளிக்கூடம் மாறவிடாதபோது, தான் அம்மன் கோயில் தெற்கு வாசலில் நின்று அழுதழுது சபித்தது எவ்வளவு முட்டாள்தனம் என்பதையும் கூடவே எண்ணி மனோன்மணி தன்னை நொந்து கொண்டாள்.

: 'ஏ லெவல்' படிப்பதற்காக இரண்டரைக் கட்டைக்கு அப்பால் இருக்கும் கடற்கரைப் பள்ளிக்கூடத்திற்கு மகளை அனுப்ப வேண்டிய அவசியம் பக்வதிக்கு ஏற்படவில்லை.

யுத்தம் உச்சக்கட்டத்தில் இருந்ததால் கிராமத்திற்கு சற்று அப்பால் உள்ள இந்து மகளிர் கல்லூரி ஒன்றிலேயே கடற்கரை பெண்கள் உயர்தரப் பாடசாலையும் தனது வகுப்புகளை பகிர்ந்து கொண்டிருந்தது. காலையில் 'சைக்கிளில்' செல்லும் மகள் சாமியார் மடத்தால் திரும்பியவுடன் 'அம்மாளாச்சி இண்டைக்கு பொம்மர், ஹெலி ஒண்டும் வரக் கூடாது' என்று படலையில் நின்றவாறே கடவுளைத் தொழுத பின்பே, கோழிகளைக் கூட்டிலிருந்து திறந்து விடுதல், அகண்ட சட்டியில் கருப்பனீரை ஊற்றி அடுப்பில் ஏற்றுதல் என அன்றாட தன் அலுவல்களைச் செய்ய ஆரம்பிப்பாள் பகவதி.

ஆனையிறவிலிருந்தோ, பலாலியிலிருந்தோ ஏவப்படும் 'ஷெல்' வல்லையிலோ அல்லது முள்ளியிலோ விழுந்து வெடிக்கும் அதிகாலை வரை மனோன்மணி கண் விழித்துப் படிப்பாள். எத்தனை தரம் சொன்னாலும் படுக்கைக்குப் போகாது மகள் படுக்கும் வரையில் கைவிளக்கு வெளிச் சத்தில் அறை வாசலில் குந்தியிருந்து தூங்கி வழிந்து கொண்டிருப்பாள் பகவதி.

கலைப் பிரிவில் நல்ல பரீட்சை முடிவுடன் மனோன்மணி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானதில் பகவதி உள்ளூர மகிழ்ந்தாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளைப் பிரிய வேண்டுமே என்பதை எண்ணிய போது நெஞ்சு கனத்தது. ஆனாலும், "ஒவ்வொரு கிழமை முடிவிலையும் வந்து போகலாமெணை" என்று மகள் கூறிய போது கரைவெளிச்சத்தைக் கண்ட கிளாலிப் படகு இரவுப் பயணிபோல் பகவதியின் உள்ளம் எல்லையில்லாக் களிப்பெய்தியது. தடைகள் இல்லாத பெரு வீதியால் யாழ்ப்பாணம் சென்று வந்தவள் காலப்போக்கில் நான்கைந்து இடங்களில் தடை தாண்டிச் சென்று வர வேண்டியதாயிற்று.

இடப்பெயர்வுகள் மற்றும் போர் அனர்த்தங்களால்.....மூன்று வருடப் படிப்பு நான்கு வருடங்களாக இழுபட்டது.

வெள்ளிக்கிழமைகளில் பகவதி வாசலைப் பார்த்தபடியே நாட்களை ஓட்டினாள்.

இறுதி ஆண்டுப் பரீட்சை எழுதிவிட்டு வந்து மனோன்மணி வீட்டில் இருந்த கடந்த வருடம் ஆவணி பிறந்ததன் பிறகு, நிலவு பொழிந்து கொண்டிருந்த ஓர் இரவில்தான் பகவதி முதன் முதலில் மகளுடன் அப்பேச்சை எடுத்தாள்.

தாயை அழைத்து வந்து 'போட்டிக்கோ' தேமா மரத்தடியில் இருத்திவிட்டு நிலவைப் பார்த்தபடியே மனோன்மணி கேட்டாள். "அம்மா அதுக்கெல்லாம் இப்ப என்ன அவசரம்?"

"வெளிநாட்டு, அதுவும் சுவிசில் மாப்பிளை. வலிய வாற சம்பந்தம். சீதன வாகனம், இனாம் கினாம் எண்டு ஒரு வாகடமுமில்லை. இதை விட்டால் வேறையென்ன பிள்ளை எங்களுக்கு வழி?"

"வலிய வாற சம்மந்தம் எண்டதற்காகவும், வழி இல்லை எண்டதற் காகவும் திருகுவலியைத் தேடிக் கொள்ளக் கூடாதம்மா. இடம்பெயர்ந்து வந்த சனங்கள்..... ஆறேழு மாதங்களாகத்தான் தாய் தகப்பனையே தெரியும். மகனைப் பற்றி அந்தாளின்ரை கரக்ரரைப் பற்றி எதுவுமே தெரியாத நிலையிலை..... எப்படியம்மா?"

"பொடியன் தங்கப் பவுணாம் பிள்ளை".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தறுதலைப் பிள்ளையளையும் தாய் தகப்பன் தங்கப் பவுண் எண்டு தகுதி சொல்லித் தான் எங்கட தலையிலை கட்டப் பார்ப்பினம். படிச்சவரா, உழைப்பு எப்படி? இதையெல்லாம் விசாரிச்சனியோ?"

" 'அட்வான்ஸ் லெவல்' மட்டும் படிச்சவராம். அங்கை தொழிற்சாலை ஒன்றிலை இரவு பகலா வேலை செய்யிறாராம்".

தாயின் 'ரெடிமேட்' பதில்கள் எதிர்காலத்தினை நிச்சயிக்கும் அடுத்த கட்ட நடவடிக்கையில் அவள் உறுதி கொண்டிருப்பதை மனோன்மணிக்கு உணர்த்தவே, நிலவில் 'பள பள' என மின்னிய, கண்ணீர் திவலை நிரம்பிய தாயின் கண்களை நோக்க முடியாதவளாக மேலும் பேச்சை வளர்க்காது, வீட்டினுள் நுழைந்து, அகப்பட்ட வாங்கிலில் விழுந்து படுத்து, அப்படியே நித்திரையாகிப் போனாள்.

கொட்டாவி எடுத்து நெட்டி முறித்தவாறே அன்றைய காலை மிக ஆறுதலாகவே புலர்ந்தது.

"பொடிச்சி என்னவாம் அக்கை?"

அடுக்களைக்குள் பற்றும் அடுப்பினில் வற்றி வருகின்ற பாணியினைப் பதம் பார்த்துக் கொண்டிருந்த பகவதி நாதனின் குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

"அவளுக்கு அவ்வளவு விருப்பமில்லையடா. மாப்பிளைப் பொடியன்ரை பழக்கவழக்கம் தெரியமால் எப்படிச் செய்யிறது எண்டு யோசிக்கிறாள் போலை கிடக்கு".

"நாளைக்குப் பின்னேரம் நல்ல நாளாம். மாப்பிளை பகுதி எங்களை வேள்வு கொண்டு வருமெண்டு எதிர்பார்க்கினமாம். இப்பத்தான் பூங்கொல்லைக் கிணத்தடியிலை என்னைக் கண்ட இடத்திலை 'புறோக்கர்' சொன்னார். நிலமை அப்படியிருக்கைக்குள்ளை நீ என்ன பூராயக் கதை சொல்லுறாய் அக்கை?"

"மாமா..... நாளைக்கு வேள்வு கொண்டு போறதுக்கான அடுக்கு நிரையளைச் செய்யுங்கோ". அம்மிக்கு மேல் கவிழ்த்திருந்த 'பிளாஸ்டிக்' வாளியை அள்ளி எடுத்தவாறே நல்ல தண்ணி அள்ளச் செல்லும் மகளை பகவதி அப்போதுதான் கவனித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சி வகிடெடுத்து தலையை வாரிக் கட்டியிருந்தாள். தலையில் பூசியிருந்த எண்ணெய்யில் காலை வெய்யில் பட்டுத் தெறித்தது. என்றுமில்லாத நிதானம் அவளது நடையில் தெரிந்தது.

❖

வயல் வெளியில் வெள்ள வாய்க்கால் பக்கமாக இப்போது தலைக்கறுப்பொன்று தெரிகிறது. பகவதி உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். நாரியை ஒரு பக்கமாக வளைத்து கையை இடுப்பில் வைத்தவாறே..... நாதனே தான்..... வந்து கொண்டிருந்தான்.

"அம்பாள் அடியார்களே! இதோ இன்னும் சில நொடிகளில் வேட்டையாட அம்பாள் எழுந்தருளவுள்ளார். வேட்டைக்கு விரையவுள்ள அம்பாளுடன் அடியார்களும் கலந்து கொண்டு உய்தி அடையுமாறு அன்பாக வேண்டுகின்றோம்". திடீரென்று வடக்கிலிருந்து ஒலிபெருக்கி உச்சஸ்தாயியில் கத்துகின்றது.

படலையைத் திறந்து விறுவிறுவென உள்நுழைந்த நாதன், தேமா மரத்தைக் தாண்டி 'போட்டிக்கோ'வில் போட்டிருந்த வாங்கிலில் வந்தமர்ந்தான்.

அவனின் உதட்டினையே பகவதி உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஓட்டிற்கு மேல் தங்கிப் பிரிந்து செல்லும் தேமாக் கிளையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"என்ன அப்பு கதைச்சனியே பொடிச்சியோடை?"

நாதனின் மௌனம் பகவதியின் பதற்றத்திற்கு மேலும் எண்ணெய் ஊற்றியது.

"பிள்ளை என்னவாம் தம்பி?" வாங்கிலடிக்கு வந்து அவனின் கண்களை உற்றுப் பார்த்தாள் பகவதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னத்தை அக்கை சொல்ல?"

"ஏனப்பு என்ன நடந்தது?"

"எல்லாமே முடிஞ்சுது. ரண்டு பேரும் பிரிஞ்சுதான் அக்கை இருக்கினம்".

"ஐயோ..... அம்மாளாச்சி உன்ரை கண்ணுக்கு முன்னை இருக்கிற என்னை அந்த நாளையிலை இருந்து ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? ஏன் தம்பி..... என்ன பிரச்சினையாம்?"

"எங்கட பொடிச்சியின்ரை மனப்பாங்கு உனக்குத் தெரியுந்தானே அக்கை? அவளின்ரை சுதந்திரத்திலை, போக்கிலை எவருமே தலையிடக் கூடாது. அந்த அவளின்ரை கொள்கைதான் இஞ்சை வினையாக வந்தி ருக்கு".

"என்ன நீ சொல்லுறாய்?"

"எனக்கு அந்தாளைப் பிடிக்கேல்லை. எதிர்காலத் திட்டமே இல்லாத, அடிப்படை நாகரீகம் தெரியாத, பெண்களின்ரை உணர்ச்சிகளை, உரிமைகளைப் புரியாத ஜடம்! அந்தாளோட ஒத்துப்போய் என்னைத் தொலைக்க வேண்டிய அவசியம் ஒண்டும் எனக்கில்லை. நான் நானகவே வாழ விரும்புறன். அதனாலை தான் அந்தாளை விட்டுப் பிரிஞ்சு தனியாக இருக்கிறன்.' எண்டு சொன்னாள்".

"நீ ஒண்டும் புத்திமதி சொல்லேல்லையோடா?"

"புருஷனோட ஒத்துப் போ எண்டு நாங்கள் சொல்லுறதைக் கேட்கிற எல்லையைக் கடந்து நிற்கிறாள் அக்கை அவள்! ஏதோ ஒரு பிரச்சினை யிலை ஒரு நாள் அடிக்க கையோங்கியிருக்கிறான் போல கிடக்கு. 'உந்த ஆதிக்கம், அதட்டல்களை வேறை எங்கையாவது வைச்சுக் கொள்ளும் எண்டு சொல்லி தூக்கின கையை மடக்கி விட்டிருக்கிறாள் பொடிச்சி. 'என்னோட நீ மல்லுக்கட்டவோ' எண்டு அவனும் தொடங்கினதிலை கலாதி கிளம்பி, அடுத்த 'அப்பாட்மண்டிலை' இருக்கிறதுகளும் தலை யிடுகிற அளவுக்கு பிரச்சினை முத்திப் போச்சுதாம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொடியனோடும் கதைக்கப் போறனெண்டு போனாய் கதைச் சனியே?"

" 'கோல்' எடுத்தனான் தான், ஆள் இல்லை. ஆனால், எங்கட பொடிச்சியோட ஒண்டா இருக்கிற ஆரோ மானிப்பாயில் பொடிச்சியாம். அதோட கதைச்சனான். உந்தக் கொடுமைக்காறனோடை, ஆர் குடும்பம் நடத்துவாளவை? எண்ட 'பிளானிலை' தான் சொல்லிச்சது. அக்கை, இப் போதையில் பொடிச்சியள் முன்னத்தையில் பெண்டுகள் மாதிரியில்லை..... கோபங் கண்ட இடத்திலை கொதிச்சுத்தான் எழுவாளுகள்".

"சிம்ம ராசியிலை பிறந்தவள். இயல்பாகவே றாங்கியானவள். அடிபட்டு, சித்திரவதைப்பட்டு வாழுறதை விரும்பவா போறாள்? கிளிப்பிள்ளையாக வளர்த்து குரங்கின்ரை கையிலை குடுத்திட்டம். கிணத்துப் படி தெரியாமல் வளர்த்து பாண் கிணத்துக்கை தள்ளிப் போட்டம். அந்தக் கண்காணாத தேசத்திலை தனியாக இருந்து என்ரை பிள்ளை என்ன செய்யப் போகிறாளோ?"

"அக்கை, பதட்டப்படாதை. நாங்கள் பதறுறமே ஒழிய, பொடிச்சி திடமாத்தான் இருக்கிறாள். எழுத்தை விலத்த 'நோட்டீஸ்' குடுத்திருக்கிறாளாம். வலுகெதியிலை உன்னையும் அங்கை கூப்பிடப் போறாளாம். இப்ப அவள் உழைக்கத் தொடங்கீட்டாளாம். வாகனம் கூட வேண்டப் போறாளாம்".

"அம்பாள் அடியார்களே! இதோ..... சூழ்ந்த வதைகளை வேட்டையாட அம்பாள் சிங்க வாகனத்தில் எழுந்தருளிவிட்டாள். உங்கள் வாசலில் அம்பாளை தரிசித்து உய்தி அடைய வேண்டுகின்றோம்". வடக்கிலிருந்து வந்த காற்று காதுகளை அதிர வைத்தது.

"அக்கை, அம்மாளாச்சி வேட்டைக்கு வெளிக்கிட்டுட்டா. வாசலிலை நிறைகுடம் வைக்கேல்லையே?"

"அதுகளுக்கு இப்ப நேரமில்லை. அம்மாளாச்சிக்குச் சாத்த பட்டுச் சேலையும், பழம், பாக்கு, வெத்திலையும் வாங்கிவிச்சுத் தாம்பாளத்திலை முன்னறைக்குள்ளை வைச்சிருக்கிறன்..... போய் எடுத்துக் கொண்டு வா".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்திரகாளி அம்மனுக்கு அரோகரா!..... அம்மாளாச்சிக்கு அரோகரா!!"

வடக்கிலிருந்து எழுந்த ஒலி கிராமம் முழுவதும் எதிரொலித்தது. பகவதி வீட்டுப் படலையைத் தாண்டி ஊரே திரண்டு செல்கிறது.

வேட்டியும், வெறும் மேலுமாக தாம்பாளத் தட்டை ஏந்திய நாதன் படலையைத் திறந்து வந்து, அம்பாளுக்கு முன் கைகட்டி நிற்கும் குருக்களிடம் நீட்டுகிறான்.

பட்டைச்சாத்தி, பழத்தையும் தீபத்தையும் அம்மனுக்கு காட்டிவிட்டு எரியும் தீபத்தை நீட்டுகிறார் குருக்கள்.

"அம்மாளாச்சி... என்ரை பிள்ளைக்குத் துணையாக இரு தாயே!" பகவதி அம்மனை நோக்கி கைகளைக் கூப்புகிறாள்.

கொடிய அரக்கனின் கபாலத்தைக் காலில் மிதித்து கைகளில் வாள், சூலத்துடன் நாக்கை வெளியில் நீட்டியவாறே அக்னிப் பிழம்புகள் மத்தியில் பத்ரகாளி அம்மன் கொடுஞ்சினத்துடன் தரிசனம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

-"ஞாயிறு தினக்குரல்"
25.11.2001

(கனக செந்தி கதா விருது பெற்ற கதை)

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடியலுக்கு முன் என மகுடமிடப்பட்டுள்ள இத் தொகுதியில் வேலோன் தனது சிறுகதைகளுள் சிலாக்கியமானவற்றை தெரிந்தெடுத்து தொகுதி யாக்கிருக்கின்றார். கதைகளின் சம்பவ நிகழ்வுக் காலங்களில் ஏறுவரிசையில் இவை தொகுக்கப் பட்டுள்ளன. 1970ல் இருந்து 2002 வரையிலான காலகட்டங்களில் இக் கதைகள் நிகழ்கின்றன. வேலோனின் படைப்புலகமும் எழுபதுகளின் பிற்கூற்றில் இருந்து இற்றை வரை தொடர்கின்றது.

இத் தொகுதியில் காணப்படும் கதைகளுள் பெரும்பாலானவை ஆசிரியரின் மெய்யனுபவங் களிலிருந்து பிறந்தவை. அதன் காரணமாகவே நம்பகத்தன்மையை அதிகளவில் இக்கதைகள் கொண்டுள்ளன.

வேலோனது சிறுகதைகளில் குறிப்பிடத்தக்க இன்னொரு அம்சம் திருத்தமான ஒரு மொழியை -இலக்கணத் தமிழ் அல்ல -அவர் கையாள்வதாகும். இத்தொகுப்பினூடே ஒரு வாசகன் அதை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

எந்தவொரு எழுத்தாளரிடமும் ஒரு சிறந்த கதையையேனும் நாம் தயக்கமின்றி எதிர்பார்க்க லாம். இத் தொகுதியில் ஒன்றல்ல மூன்றுக்கு மேற்பட்ட சிறந்த கதைகளை நாம் காண்கின்றோம்.

நிலாக்காலம் எனும் கதையை முதற் கதை யாகக் கொண்டு வெளிவரும் இத் தொகுதி ஒரு வாசகனுக்கு நல்ல வாசிப்பு அனுபவத்தையும், திருப்தியையும் தரும் என்பது எனது நம்பிக்கை.

-எஸ். ரஞ்சகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org